தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள். தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:199 | 03-02-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

03.02.2026 தை 20
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.36

திதி:
இன்று அதிகாலை 3.37 வரை பிரதமை பின்பு துவிதியை.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 12.27 வரை ஆயில்யம் பின்பு மகம்

யோகம் :
இன்று அதிகாலை 4.30 வரை சௌபாக்யம் பின்பு சோபனம்.

கரணம் :
இன்று அதிகாலை 3.37 வரை கௌலவம் பின்பு மாலை 3.18 வரை தைதுலம் பின்பு கரசை.

அமிர்தாதி யோகம் :
இன்று அதிகாலை 12.30 வரை சித்த யோகம் பின்பு காலை 6.35 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 12.29 வரை பூராடம் பின்பு உத்திராடம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.
இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.
எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மாமல்லபுரத்தில் தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு துவக்க விழா

## சுற்றுலா நிறுவனங்களுடன் ரூ.22,795 கோடிக்கு ஸ்டாலின் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

**சென்னை, பிப்.3:**
தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாட்டில் 22,794.78 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 65,937 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில் 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன. இவை பாரம்பரிய சுற்றுலா, சாகச சுற்றுலா, MICE சுற்றுலா, சுற்றுசூழல் சுற்றுலா போன்ற பல்வேறு சுற்றுலா பிரிவுகளில் மேற்கொள்ளப்பட உள்ளன.




தமிழ்நாடு சுற்றுலாத்துறை, மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய சுற்றுலா மேம்பாட்டுப் பகுதிகளில் பெரிய அளவிலான தனியார் முதலீட்டை ஈர்க்கும் வகையிலும், தமிழ்நாட்டிலுள்ள பழம்பெரும் திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலாத் தளங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையிலும், தமிழ்நாட்டில் முதல்முறையாக நடத்தப்படும் "தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026" முதலமைச்சர் தொடங்கி வைத்து, பல்வேறு சுற்றுலா நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார்.

சுற்றுலா வணிகத்தில் அதிகமான தனியார் முதலீடுகளை ஈர்க்கும் இலக்குடன், இந்தியாவின் சிறந்த சுற்றுலா முதலீட்டு தளமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவது, தனியார் முதலீட்டாளர்கள், சுற்றுலா நடத்துபவர்கள், மற்றும் தொழில்துறை பங்குதாரர்களை ஒரே தளத்தின் கீழ் அரசுடன் ஒன்றிணைப்பது, பார்வையாளர் அனுபவங்களை மேம்படுத்தும் மற்றும் வருவாய் வழிகளை விரிவுபடுத்தும் புதுமையான சுற்றுலா தயாரிப்புகள் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களை ஊக்குவித்தல் போன்றவை இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்ககம் (StartupTN) மற்றும் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, தமிழ்நாடு உலக சுற்றுலா மாநாடு 2026 முன்னிட்டு சுற்றுலா புத்தாக்க ஹேக்கத்தான் என்ற போட்டியை இணைந்து நடத்தியது.

இந்த ஹேக்கத்தான், தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் உணவு சார்ந்த சுற்றுலா, வேளாண்மை மற்றும் கிராமிய அனுபவ சுற்றுலா, பாரம்பரிய மற்றும் பண்பாட்டு சுற்றுலா, சூழலியல் மற்றும் சாகச சுற்றுலா, நலவாழ்வு மற்றும் மருத்துவ சுற்றுலா, டிஜிட்டல் சுற்றுலா புத்தாக்கங்கள் ஆகிய ஆறு துறைகளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது.

மதிப்பீட்டின் அடிப்படையில், Xera ரோபோட்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட், தமிழ்நிலம் தமிழ்பண்ணை (Thamizhnilam Tamizhpannai), Ortus இந்தியா டூரிசம் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் வெற்றி பெற்றவர்களாக தேர்வு செய்யப்பட்டன. முதலமைச்சர் வெற்றி பெற்ற நிறுவனங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கி வாழ்த்தினார்.

மயிலாடுதுறை மாவட்டம் - பூம்புகாரில் 23 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில், கடலூர் மாவட்டம் - சிதம்பரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 8 கோடியே 65 லட்சம் ரூபாய் செலவில், செங்கல்பட்டு மாவட்டம் - மாமல்லபுரத்தில் உள்ள மரகத பூங்காவில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் 8 கோடி ரூபாய் செலவில் என மொத்தம் 40 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 3 சுற்றுலா மேம்பாட்டுப்பணிகளை முதலமைச்சர் இன்று பொதுமக்கள்பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

### 2 திட்டப்பணிகளுக்கு அடிக்கல்

மயிலாடுதுறை மாவட்டம் - திருக்கடையூரில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஓட்டல் தமிழ்நாடு அமைக்கும் பணி மற்றும் தரங்கம்பாடியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை, வாகன நிறுத்துமிடம், நுழைவுக் கட்டணம் வழங்குமிடம், மின்சார அறை, சுகாதார வளாகம் உள்ளிட்ட சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்; என மொத்தம் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

இந்த மாநாட்டில், அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், ஆர்.ராஜேந்திரன், டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, எஸ்.எஸ். பாலாஜி, மு.பாபு, வரலட்சுமி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.மணிவாசன், வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய்,

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தாரேஸ் அகமது, சுற்றுலாத்துறை ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா, செங்கல்பட்டு கலெக்டர் சினேகா, கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின், ஆனந்த் குழுமத்தின் செயல் தலைவர் அஞ்சலி சிங், சுற்றுலாத்துறை தலைவர் ரவி கோசைன், WTTCH செயல் இயக்குநர் சுமிட்ரோ கர், VIN Fast தலைவர் பாம் சான் ச்சாவ் பல்வேறு முதலீட்டாளர்கள், சுற்றுலா நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாம்பழ சின்னம்: தேர்தல் ஆணையம் பதிலளிக்க ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, பிப்.3:**
அன்புமணி தரப்புக்கு மாம்பழ சின்னம் ஒதுக்கியதை எதிர்த்த வழக்கில் தேர்தல் ஆணையம் பதிலளிக்க சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

பாமகவின் பெயர், கட்சிக்கொடி, மாம்பழம் சின்னத்தை அன்புமணி அல்லது வேறு யாரும் பயன்படுத்த தடை விதிக்கக் கோரி, கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தரப்பு சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், அன்புமணி தலைமையிலான பா.ம.க.வை அங்கீகரித்த தேர்தல் ஆணையம், தலைவர் பதவியை நீட்டித்து, மாம்பழம் சின்னத்தையும் வழங்கியது.



இதுதொடர்பாக கடந்த ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் நவம்பர் 27 ஆகிய தேதிகளில் தேர்தல் ஆணையம் இரு கடிதங்களை அன்புமணி தரப்புக்கு அனுப்பியுள்ளது. இதையடுத்து சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையம் தமது தரப்புக்கே கடிதம் அனுப்பியிருக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டிய ராமதாஸ் தரப்பு, அன்புமணிக்கு தேர்தல் ஆணையம் அனுப்பிய கடிதத்தை ரத்து செய்யக்கோரி, சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனுவில், கட்சியின் தலைவராக நீடிப்பதாக போலி ஆவணங்களை அன்புமணி தரப்பு தாக்கல் செய்துள்ளதாகவும், தலைவர்என்ற முறையில் தனது முகவரிக்கு கடிதம் அனுப்ப தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது இவ்விவகாரத்தில் தேர்தல் ஆணையம் 3 வாரத்தில் பதிலளிக்க சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

# "யார் எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே திமுகவின் வேலை"

## தவெக ஆண்டு விழாவில் விஜய் பேச்சு



**சென்னை, பிப்.3:**
தவெக ஆரம்பித்து 2 ஆண்டுகள் நிறைவு பெற்று, மூன்றாம் ஆண்டு இன்று தொடங்கும் நிலையில், சென்னை பனையூரில் உள்ள அக்கட்சியின் தலைமை நிலையத்தில் 3-ம் ஆண்டு தொடக்க விழா நடந்தது. முன்னதாக கட்சி வளாகத்தில் கட்சிக் கொடியை ஏற்றிவைத்த விஜய், தவெக கொள்கைத் தலைவர்களின் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து விஜய் தவெகவினர் மத்தியில் பேசியதாவது: காமராஜர், எம்ஜிஆர், அண்ணா இருந்த இடத்தில் இப்போது இவர்களும் இருக்கிறார்களே என்று தமிழக மக்கள் திமுகவைப் பார்த்து கண்ணீர் வடிக்கின்றனர்.

தமிழகத்தில் புதிதாக யார் அரசியலுக்கு வந்தாலும் திமுக அவர்களைப் பார்த்து உங்களுக்கு என்ன அனுபவம் இருக்கிறது? என்று கேள்வி கேட்கும்.

எம்ஜிஆருக்கு அரசியல் அரிச்சுவடி தெரியுமா? என்று கேள்வி எழுப்பினர். காமராஜருக்கு இலக்கியம் தெரியுமா? என்று கொந்தளித்தனர். இன்று நம்மைப் பார்த்துக் கொந்தளிக்கின்றனர். அரசியலில் யார் அவர்களை எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே திமுகவின் வேலை.

இத்தனையையும் மீறி தமிழகத்தில் மிகப்பெரிய கட்சியாக தவெக இன்று வளர்ந்திருக்கிறது. அதனால், டெக்னாலஜி வளர்ந்திருக்கும் சூழலில் விமர்சனங்களில் உங்கள் (திமுக) டெக்னிக்கையாவது மாற்றுங்கள்.

அதைவிடுத்து 50 வருடங்களுக்கு முந்தைய தகர டப்பாவை எடுத்து உருட்டுகிறார்கள். 'பவள விழா பாப்பாவுக்கு' வேறென்ன தெரியும். பழைய டப்பாவை உருட்டத்தானே தெரியும்.

ஆனால், அதற்காக எல்லாம் அவர்கள் செய்யும் தவறுகளை, ஊழல்களை சொல்லிக் காட்டாமல் இருக்க முடியாது. மக்களுடைய ஒரே பிரதிநிதி தவெக மட்டும்தான். திமுகவை தொடர்ந்து நாம் விமர்சனம் செய்வோம்.

இந்த டிஜிட்டல் உலகில் திருவள்ளுவர் இருந்திருந்தால், இந்த தீய சக்தியை பற்றி, "அநீதி அராஜகம் தில்லுமுல்லு இவையெல்லாம் திமுக முதற்றே உலகு" என்று திருக்குறள் எழுதியிருப்பார்.

தமிழக தேர்தல் களத்தில் மும்முனைப் போட்டி, நான்குமுனை போட்டி என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன். இங்கே மாபெரும் மக்கள் சக்தி கூட்டணி, திமுக கூட்டணி, பாஜக தலைமையில் மற்றும் பலர் கூட்டணி தான் இருக்கிறது. இதில், திமுகவை வீழ்த்த மாபெரும் மக்கள் சக்தியான தவெகவால் மட்டும் தான் முடியும்.

அப்புறம், "ஏய் விஜய், வீட்டைவிட்டு வெளியில் வா..." என்று சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள் பாஸ். தேர்தல் தேதியில் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டில் இருக்கும் ஒவ்வொரு விஜய்யும் வாக்காளர் அடையாள அட்டையுடன் காலையிலேயே பூத் பூத்தாக வந்து நிற்பார்கள்.

அன்றைக்கு 'ஏன் விஜய்யை கூப்பிட்டோம்' என்று நீங்கள் நினைப்பீர்கள்.

நான் என்ன பேசினாலும் 'இது என்ன சினிமாவா?' என்று ஆரம்பித்துவிடுகிறார்கள். நானே சினிமாவை விட்டுவிட்டேன். ஆனால் அவர்கள் அதை விடுவதாக இல்லை. தேர்தலை ஒட்டி சில கருத்துக் கணிப்புகள் வருகின்றன.

அவற்றில் சில சரியாகவும் இருக்கின்றன. கூடவே சில 'கடுப்புக் கணிப்புகள்' வருகின்றன. அந்த கடுப்புக் கணிப்பாளர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒவ்வொரு வீட்டிலும் தவெக இருக்கிறது. இதை நம்பவில்லை என்றால் நீங்கள் எடுத்த கடுப்புக் கணிப்பை ரப்பர் வைத்து அழித்துவிட்டு மீண்டும் எடுத்துப் பாருங்கள். அப்போதும் தவெக பற்றி அதே ரிசல்ட் தான் வரும். தவெக எல்லோரது வீட்டிலும் இருக்கிறது. இவ்வாறு விஜய் பேசினார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-519

**வினைக்கண் வினையுடையான் கேண்மைவே
றாக நினைப்பானை நீங்குந் திரு**



மேற்கொண்ட தொழிலில் எப்போதும் முயற்சி உடையவனின் உறவைத் தவறாக நினைக்கும் தலைவனை விட்டுச் செல்வம் நீங்கும்.

## சிந்திக்க ஒரு நொடி



எல்லாம் இருந்தும் அமைதியாக இருக்கும் நூலகம் போல் அடக்கமாக இரு ,வாழ்க்கை சிறக்கும்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## வாடிப்பட்டி பகுதியில் திருமலைநாயக்கர் பிறந்தநாள்விழா முளைப்பாரி ஊர்வலம் அன்னதானம்



**வாடிப்பட்டி, பிப்.3:**

மதுரை மாவட்டம் வாடிப் பட்டி ஒன்றிய அனைத்து நாயுடு மகாஜன சங்கத்தினர் சார்பாக மாமன்னர் திருமலை நாயக்கர் 443வது பிறந்தநாள்விழா வாடிப்பட்டி பகுயில் தாதம் பட்டி, போடிநாயக் கன்பட்டி இராமநாயக்கன்பட்டி, பகுதிகளில் கொண்டாடப் பட்டது.

வாடிப்பட்டி பேரூராட்சி 1வது வார்டு சாணாம்பட்டியில் நடந்த விழாவிற் கு சங்க நிர்வாகி பொன்ராம் தலைமை தாங்கி திருமலை நாயக்கர் உருவபடத்திற்கு மலர் தூவி மரியாதைசெய்து இனிப்பு வழங்கினார்.

போடிநாயக்கன்பட்டியில் சங்க நிர்வாகி கலைச்செல்வ ன் தலைமையில் சங்கநிர்வாகிகள் மலர் தூவி இனிப்பு வழங்கினர். இராமநாயக்கன்பட்டியில் நிர்வாகி ராதாகிருஷ்ணன் தலைமையில் மலர் தூவி மரியாதை செய்து இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

தாதம்பட்டியில் லாலா திரையரங்கில் நாயுடுசங்க அலுவலகத்திலிருந்து சிலம்ப மாணவர்கள்செல்வதேவ் அக்ஷய் குமார் தேவசேனகன் களின் சிலம்பாட்டம், மேளதாத்துடன் பட்டாசு வெடியுடன் பெண்கள் முளைப்பாரி ஊர்வலம் புறப்பட்டு தாதம்பட்டி நீரேத்தான் மந்தைதிடல் வழியாக பெருமாள்கோவில், வருவாய்ஆய்வாளர் அலுவலகம், புதுார்பிரிவு, பஸ்நிலையம், லாலாபஜார் வழியாக சந்தை வாசலை அடைந்தது.

அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்து திருமலை நாயக்கர் திரு உருவ படத்திற்கு சங்க தலைவர் பொன் கமலக்கண்ணன் தலைமையில் தி.மு.க பேரூர் செயலாளர் பால்பாண்டியன், அ.தி. மு.க பேரூர் செயலாளர் அசோக்குமார், அ.தி.மு.க ஒன்றிய செயலாளர் காளிதாஸ், தே.மு.தி.க மாவட்ட துணைச் செயலாளர் டாக்டர் பொன் யாழினி,பேரூர் செயலாளர் பாலாஜி உள்ளிட்ட ஏராளமான சங்க நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செய்தனர்.

இதில் குருவித் துறை வேணுகோபால் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இந்த விழாவில் கஜேந்திரன், ஜெயராம், புருசோத்தமன், விஜயகுமார், ராதாகிருஷ்ணன், கோபால், முருகன், முத்துப் பாண்டி, கார்த்திக், குணா, நாகராஜ்,மெடிக்கல் வீரமணி, மனோஜ் குமார், விக்னேஷ், கரி பாண்டி, கோபி, இளங்கோவன், பாபு, ராஜா, சுந்தர், சுதாகர், கிருஷ்ணன், செந்தில், சரவண பாண்டி, ரங்கசாமி, புல்லட் சீனி, வாசுதேவன், ஸ்ரீ ஹறி,ஜோதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.இதன் ஏற்பாடுகளை வாடிப்பட்டி ஒருங்கிணைந்த அனைத்து நாயுடு மகாஜன சங்கத்தினர் செய்திருந்தனர்.

## சிறுசேரி சிப்காட் வளாகத்தில் சுற்றுச்சூழல் பூங்கா முதல்வர் ஸ்டாலின் திறந்தார்



சென்னை பழைய மகாபலிபுரம் சாலை சிறுசேரி சிப்காட் வளாகத்தில் உள்ள நாவலூர் ஏரி ரூ.30 கோடியில் தூர் வாரப்பட்டு, சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். உடன் அமைச்சர் அன்பரசன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றம் அதிகாரிகள் உள்ளனர்.

## மார்ச் 8ம் தேதி திருச்சி சிறுகனூரில் திமுக மாநாடு



திருச்சி சிறுகனூரில் திமுக மாநாடு மார்ச் 8ம் தேதி நடக்கிறது. மாநாடு நடக்கும் இடத்தில் பந்தல்கால் நடும் நிகழ்வில் அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## சீர்காழி தென்பாதி ஸ்ரீ சீரடி சாய்பாபா தியான ஆலயத்தில் பால் அபிஷேகம்



**சீர்காழி , பிப் , 03:**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதி ஸ்ரீ சீரடி சாய்பாபா தியான ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் ஸம்வத்ஸரா ஹோமம் மற்றும் ஹயக்ரீவர் ஹோமம் நடைபெற்றது. 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பாபாவிற்கு தங்கள் கைகளாலே பால் அபிஷேகம் செய்துபாபாவின் அருளை பெற்றார்கள் .

## 70 வயது நிறை வடைந்த ஓய்வூயர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் உள்ளிட்ட 4 அம்ச கோரிக்கை

**திருவண்ணாமலை, பிப்.03:**



தமிழ்நாடு அரசு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவுப்படி நேற்று காலை திருவண்ணாமலையில் சட்டப்பேரவை துணை சபாநாயகர் மாண்புமிகு கு. பிச்சாண்டி அவர்களை சந்தித்தித்து 70 வயது நிறை வடைந்த ஓய்வூயர்களுக்கு 10 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் உள்ளிட்ட நான்கு அம்ச கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வரின் கவனத்திற்கு தெரிவித்து நிறைவேற்ற உதவிடுமாறு கேட்டுக்கொண்டோம்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் எஸ்.பச்சையப்பன், பொருளாளர் அ ஆனந்தன், இணை செயலாளர் ஆர். ராஜகோபால், திருவண்ணாமலை வட்ட தலைவர் ஆர். கண்ணன், செயலாளர் மா. மணி, கீழ்பென்னாத்தூர் வட்ட தலைவர் ம பஞ்சமூர்த்தி, செயற்குழு உறுப்பினர் தோழர் சம்பத், தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கத்தின் மாநில துணை தலைவர் தோழர் தாண்டவமூர்த்தி ஆகியோயர் கலந்துகொண்டனர்.

## தவெக மூன்றாம் ஆண்டு துவக்க விழா



தவெக மூன்றாம் ஆண்டு துவக்க விழாவில் கொள்கைத் தலைவர்கள் சிலைகளுக்கு கட்சியின் தலைவர் விஜய், மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## பழனியாண்டவர் திருக்கோயிலில் சுவாமி தரிசனம்



அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சிலுவம்பாளையம் பழனியாண்டவர் திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

## சிறப்பு புத்தாக்க பயிற்சி



கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையினருக்கு ஆறு நாட்கள் சிறப்பு புத்தாக்க பயிற்சி வகுப்பை எஸ்.பி. ஸ்டாலின் நேற்று துவக்கி வைத்தார்.

## செய்யாறு கலைஞர் சிலை அருகே தி.மு.க.,சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம் !



**செய்யாறு, பிப். 3:**

செய்யாறு கலைஞர் சிலை அருகே 33ம் நாளான நேற்று மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் வாச்சனூர் ராமச்சந்திரன் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டது.

செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஜோதி, அனக்காவூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் திராவிட முருகன், செயற்குழு உறுப்பினர் வெங்கடேஷ் பாபு, ஆகியோர் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

ஒன்றிய செயலாளர்களான ஜே.சி.கே.சீனுவாசன் ஞானவேல், தினகரன், வழக்கறிஞர் அசோக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதையடுத்து தி.மு.க., பொறுப்பாளர்களான எம். எஸ்.டி., கார்த்திகேயன், செல்வப்பாண்டியன், ராம் ரவி, கோபு, கவுன்சிலர் ரமேஷ் மற்றும் சூரியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு, பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

## கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி



குமரி அஞ்சுகிராமம் ரோகிணி கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை கலெக்டர் அழகுமீனா வழங்கினார். உடன் மேயர் மகேஷ்.

## மதரஸாவின் 67–ஆம் ஆண்டு நிறைவு விழா



திருப்பூர் மதரஸாவின் 67–ஆம் ஆண்டு நிறைவு விழா

## கோதண்டசுவாமிக்கு பேட்ட உற்சவம்



திருமலையில் நேற்று கோதண்டசுவாமிக்கு பேட்ட உற்சவம் நடந்தது.

## விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் தியானம்



கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தியானம் செய்தார்.

## நா. ஆண்டியப்பன் எழுதிய வாமன தீவு சிங்கப்பூர் நூல் அறிமுகம்



புதுக்கோட்டையில்தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கவிஞர் தங்கம் மூர்த்தி தலைமையில் நா. ஆண்டியப்பன் எழுதிய வாமன தீவு சிங்கப்பூர் நூல் அறிமுகம் செய்யப்பட்டது.

## திட்டக்குடி அருகே விபத்து: 3 மாணவர்கள் பலி

கடலூர், பிப்.3:

திட்டக்குடி அருகே தேசிய நெடுஞ்சாலையில் காரும் தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் மூன்று மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் மூன்று மாணவர்கள் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து குறித்து போலீசார் விரிவான விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்துக்கான சரியான காரணம் குறித்து விசாரணையின் முடிவில் தெரிய வரும் என்று போலீசார் தெரிவித்தனர்.

## பழனி முருகன் கோவிலுக்கு ஒரே நாளில் 1.20 லட்சம் பேர் வருகை

சென்னை, பிப்.3:-

பழனி முருகன் கோவிலுக்கு ஒரே நாளில் வரலாறு காணாத வகையில் 1.20 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்துள்ளதாக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார். கோவை மருதமலை சுப்பிரமணியசாமி கோவிலில் மின் தூக்கி வசதியை அமைச்சர் தொடங்கி வைத்தார். சுவாமிமலை கோவில் லிப்ட் வசதி பிப்ரவரி மாத இறுதிக்குள் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார். தைப்பூசத் திருநாளையொட்டி திருச்செந்தூர், படை வீடுகளான திருத்தணி, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, சிறுவாபுரி, வடபழனியில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முருகனை தரிசித்துள்ளனர். மங்களகிரியில் 8.6 கிலோ கொண்ட 13 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கத்தேர் விழா நடைபெற்றது. மருதமலை மின்தூக்கி இரண்டு தளங்களைக் கொண்டது, ஒரே முறையாக 40 பேர் பயணிக்கும் அளவுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. கட்டணம் 30 ரூபாய், மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசம், நிறைமாத கர்ப்பிணிகளுக்கு சலுகை வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

## அரசியலமைப்பு சட்ட சிறப்பு கருத்தரங்கம்

நாகப்பட்டினம், பிப்.3:

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் கிளை சார்பில் அரசிய லமைப்பு சட்ட சிறப்பு கருத்தரங்கம் சனிக்கிழமை கிளையின் தலைவர் ஆ. வீரமணி தலைமையில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் முனைவர் சீ.ப்பி. செல்வம் வரவேற் றார். "அரசியலமைப்பு சட்ட முகவுரையின் மாண்பு கள்" என்ற தலைப்பில் மாவட்டப் பொருளாளர் தேவகி மைந்தன் கருத்துரை ஆற்றினார்.

## 'முதியவருக்கு 8 ஆண்டுகள் சிறை'

தஞ்சாவூர், பிப்.3:

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தில்லைஸ் தானத்தை சேர்ந்தவர் ரமேஷ் (62). கோவிலுக்கு பிரசாதம் தயார் செய்யும் சமையல் தொழிலாளி யான இவர், கடந்த 2025 ஜனவரியில் 9 வயது சிறுமி ஒருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தார். இதுகுறித்து திருவையாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிந்து ரமேஷை கைது செய்தனர். இது தொடர்பாக தஞ்சாவூர் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி ஜெ.தமிழ் ரசி விசாரித்து ரமேஷுக்கு 8 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து வெள்ளிக் கிழமை தீர்ப்பளித்தார். மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீட்டு தொகையாக அரசிடமிருந்து ரூ.2 லட்சம் பெற்றுத் தரவும் நீதிபதி உத்தரவிட்டார்.

## வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்புவதாக ரூ.1.35 கோடி மோசடி: மூவர் மீது வழக்கு

தஞ்சாவூர், பிப்.3:

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அருகே தொண்டராம்பட்டு கிராமத் தைச் சேர்ந்தவர் ஆர். விமல். இவர் வெளிநாட் டுக்கு வேலைக்கு செல்ல முயற்சி செய்து கொண்டிருந் தார். இவரது நண்பர் ஒரு வர் மூலம் சென்னையைச் சேர்ந்த பிரசன்னா அறி முகம் ஆனார். பிரசன்னா கனடா, நியூ சிலாந்து ஆகிய நாடுகளுக்கு வேலைக்கு ஆட்களை அனுப்பி வைப்பதாகவும், அங்கு மாதம் பல லட்சம் சம்பளத்தை இளைஞர்கள் வாங்கி வருவதாகவும் ஆசை வார்த்தை கூறியு ள்ளார். இதை நம்பிய விமல் மற்றும் 57 பேர் பிரசன்னா, அவரது மனைவி வசுமதி மற்றும் ரித்திஷ் ஆகியோரிடம் சென்னைக்கு சென்று, கடந்த 2.5.2024 முதல் 20.12.2024 வரை ரூ.1,35,55,000 பணத்தை கொடுத்துள்ளனர். அதன்பிறகு பணம் கொடுத்தவர்கள் வெளி நாட்டுக்கு எப்போது அனுப் புகிறீர்கள் என கேட்ட போது, பிரசன்னா முறை யாக பதில் அளிக்காமல், பணம் கொடுத்தவர்களை மிரட்டியுள்ளார். இதை யடுத்து விமல் காவல்துறையில் புகார் செய்தார். மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்து விசா ரித்து வருகின்றனர்.

# ரூ.30 கோடியில் நாவலூர் ஏரியை புனரமைத்து சிப்காட் சுற்றுச்சூழல் பூங்கா: ஸ்டாலின் திறந்தார்



சென்னை, பிப்.3:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று செங்கல்பட்டு மாவட்டம் சிறுசேரி சிப்காட் தொழில் நுட்ப பூங்கா வளாகத்தில் உள்ள நாவலூர் ஏரி 30 கோடி ரூபாய் செலவில் தூர்வாரப்பட்டு, கரைகளைப் பலப்படுத்தி, புனரமைத்து அமைக்கப்பட்டுள்ள சிப்காட் சுற்றுச்சூழல் பூங்காவினை திறந்து வைத்தார்.

இந்தியாவிலேயே பெரிய பொருளாதார வளர்ச்சிமிக்க மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் துறையானது அனைவருக்கும் பயனளிக்கும் சமச்சீரான வளர்ச்சியை உறுதிசெய்து, பரவலான முதலீடுகளை ஈர்ப்பதில் தனி கவனம் செலுத்திவருகிறது. அந்த வகையில், சிறுசேரி சிப்காட் தகவல் நுட்ப பூங்கா வளாகமானது 782.51 ஏக்கர் பரப்பளவில் 2002ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்கா சுமார் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளதுடன், சுமார் 14,000 கோடி ரூபாய் முதலீட்டையும் ஈர்த்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நாவலூர் ஏரி வறண்டு போகும் நிலையில் இருந்தபோது, சிப்காட் முழு அளவிலான மாற்றத்தை உருவாக்கிட முன் நின்றது. தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்யும் ஒரு முனைப்புடன், சிப்காட் நிறுவனம் 33.43 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள நாவலூர் ஏரியைத் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி புனரமைத்தும், பூங்காக்கள், புல்வெளிகளுடன் கூடிய நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டும் பாதைகளை அமைத்தும், 30 கோடி ரூபாய் செலவில் சுற்றுச்சூழல் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுச்சூழல் பூங்காவானது சுற்றுச்சூழல் அறிவு மையம், சிறுவர் சிறுமியருக்கான விளையாட்டுப் பகுதி, திறந்தவெளி உடற்பயிற்சிக் மேற்கொள்வதற்கான வசதிகள், பறவைகள் பார்வை மையம், திறந்தவெளி அரங்கம், நிர்வாக அலுவலகம், உணவகம், குடில்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பாதுகாப்பு மற்றும் கழிப்பறை வசதிகள் போன்ற பல்வேறு சிறப்பு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்த முன்னெடுப்பின் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டத்தை மேம்படுத்தியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிலைத்தன்மையை உறுதிபடுத்தியும், தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் அதனை சார்ந்த பகுதியின் சுற்றுப்புற தோற்றத்தினை செழுமைபடுத்துகிறது.

இச்சுற்றுச்சூழல் பூங்கா, தகவல் தொழில்நுட்ப பூங்காவில் அமையப்பெற்றுள்ள நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், பள்ளிக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மத்திய பட்ஜெட்டில் ரெயில்வே துறைக்கு ரூ.2,77,380 கோடி ஒதுக்கீடு

சென்னை, பிப்.3:

சென்னை-பெங்களூரு உள்பட 7 அதிவேக ரெயில் பாதைகள் அமைக்கப்படும் என்று மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரெயில்வே துறையின் மூலனதச் செலவுகளுக்காக மத்திய பட்ஜெட்டில்முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.2,77,380 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ரெயில்வே துறையின் மூலனதச் செலவுகளுக்காக மத்திய பட்ஜெட்டில்முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.2,77,380 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் புதிய ரெயில் வழித்தடங்கள் அமைத்தல், ரெயில் என்ஜின், பெட்டிகள் கொள்முதல், உற்பத்தி உள்ளிட்டவை அடங்கும்.



கடந்த ஆண்டு ரெயில்வேக்கு ரூ.2,52,000 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் இந்த முறை 10.25 சதவீதம் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பட்ஜெட் ஆவணங்களில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ரெயில்வே துறை மொத்தம் ரூ.3,85,733.33 கோடி வருவாய் ஈட்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதில் செலவு ரூ.3,82,186.01 கோடி என்றும், நிதியாண்டின் இறுதியில் உபரித் தொகை ரூ.3,547.32 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ரெயில்வே துறைக்கான மொத்த பட்ஜெட் ஒதுக்கீடு ரூ. ரூ.2,77,380 கோடியில் ரயில்வே தண்டவாளங்கள் அமைக்க ரூ.36,721.55 கோடி, தண்டவாளத்தை அகலப்படுத்தும் பணிகளுக்கு ரூ.4,600 கோடி, இரண்டாவது வழித் தடம் அமைக்க ரூ.37,750 கோடி, என்ஜின், பெட்டிகள் கொள்முதல், உற்பத்திக்கு ரூ.7,500 கோடி, சிக்னல் அமைப்பு, ரெயில்வே தொலைத்தொடர்பு, கவச் பாதுகாப்பு ஏற்பாடு உள்ளிட்டவற்றுக்கு ரூ.7,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை-பெங்களூரு, சென்னை-ஹைதராபாத், புணே-ஹைதராபாத், பெங்களூரு - ஹைதராபாத், பெங்களூரு - வாரணாசி, வாரணாசி - சிலிகுரி இடையே அதிவேக ரயில் வழித்தடங்கள் அமைக்கும் அறிவிப்பு பட்ஜெட்டில் வெளியாகியுள்ளது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இது தொடர்பாக ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், 'ரெயில்வே துறைக்கான அறிவிப்புகளுக்காக பிரதமர் மோடி, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 7 அதிவேக வழித்தடங்கள் மட்டுமல்லாது, சரக்கு போக்குவரத்துக்கான பிரத்யேக வழித்தடங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

வளர்ந்த பாரதம் என்ற இலக்கை எட்ட ரெயில்வே துறை தொடர்ந்து சிறப்பாக பங்களிக்கும்' என்றார்.

# இந்தியாவின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும் பட்ஜெட்: எடப்பாடி வரவேற்பு

சென்னை, பிப்.3:

இந்தியாவின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும் மத்திய பட்ஜெட் என்று எடப்பாடி பழனிசாமி பாராட்டியுள்ளார்.

இதுசம்பந்தமாக 2026- 2027ம் ஆண்டிற்கான மத்திய நிதி நிலை அறிக்கை குறித்து அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்திய நாட்டின் 2025-2026ம் ஆண்டிற்கான பொருளாதார அறிக்கை கடந்த 29.1.2026 அன்று வெளியிடப்பட்டுள்ள நிலையில், 2026-2027ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசால் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து 9-வது முறையாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து புதிய வரலாற்றுச் சாதனையை படைத்துள்ள மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2025-2026ம் ஆண்டுக்கான பொருளாதார அறிக்கை, உலக அளவில் போர் போன்ற பதற்றத்தால் உள்ள உறுதியற்ற சூழ்நிலையிலும், இந்திய பொருளாதார வளர்ச்சி 2025-2026-க்கு 6.5 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக உயரும் என்றும், 2026-2027-ல் 6.8 முதல் 7.2 சதவீதமாக இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது பொருளாதார நிலையில் இந்தியா வலுவான நிலையில் உள்ளதைக் காட்டுகிறது. இந்த சூழ்நிலையில் 2026-2027ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, நிதிநிலை மேலாண்மையை



வலுப்படுத்தும் வகையில் நிதிப் பற்றாக்குறையையும், பொருளாதார உற்பத்தி மதிப்பில் கடன் அளவைக் குறைக்க எடுத்துள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கது. இது வருங்கால பொருளாதார வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தும். இறக்குமதியை குறைக்க, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, ஆராய்ச்சி, உற்பத்தி, உயர் தொழில்நுட்பம் சார்ந்த கட்டமைப்புகள் மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு, மின்னணுசார் உற்பத்தி, மருந்துகள், ஜவுளி, கண்டெய்னர் உற்பத்தி போன்ற துறைகளில் உற்பத்தியை ஊக்குவிக்க பூங்காக்கள், உயிரி மருத்துவ பூங்கா, உற்பத்தி மண்டலங்கள் போன்ற பல முயற்சிகளை இந்த நிதிநிலை அறிக்கையில் முன்மொழிந்துள்ளதை பாராட்டுகிறேன். இதற்கான நிதி ஆதாரங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜவுளி மேம்பாடு திட்டம் திருப்பூர், கரூர் போன்ற பகுதிகளுக்கு பயனளிக்கும்.

சரக்கு வேக வழித்தடப் பாதைகள், வேக ரயில் பாதைகள், நீர் வழிப் பாதைகள் மேம்பாடு போன்றவை, போக்குவரத்துத் துறையில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆயுர்வேதம், கால்நடை துறை முதலியவற்றுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளதைப் பாராட்டுகிறேன்.

சிறு, குறு தொழில் மேம்பாட்டுக்கு பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நிதி ஆதாரம் பெறுவதை உறுதி செய்ய ரூபாய் 2000 கோடி, மற்றும் சிறு, குறு தொழில் வளர்ச்சி நிதியாக ரூபாய் 10,000 கோடி ஒதுக்கீடு போன்றவை மிக உதவியாக இருக்கும். சிறு, குறு தொழில் அதிக அளவில் உள்ள தமிழ் நாடு இதனால் பயன்பெறும். இந்த நிதிநிலை அறிக்கை இந்தியாவின் வளர்ச்சிக்கு வழி வகுப்பதோடு, உலக அளவில் இந்தியா பொருளாதார நிலையில் வலுவான நாடாக உயர்வதற்கு வழிவகுக்கும் என்பதால், பிரதமருக்கும், நிதி அமைச்சருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## ஒவ்வொரு பெண்ணும் கவனிக்க வேண்டிய 'ஈறு நோய்' அறிகுறிகள்!



பெண்களின் வாழ்க்கை முழுவதும் ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்ட்டிரோன் ஆகிய பாலியல் ஹார்மோன்களின் சுரப்பு, (WOMEN HORMONE) மாதவிடாய் துவக்கம், கர்ப்பகாலம், மாதவிடாய் நிறைவு வரை அந்தந்த வயதிற்கு ஏற்ப மாறிக் கொண்டே இருக்கும். இந்த ஹார்மோன் மாற்றங்களால் பல், ஈறு ஆரோக்கியம் (GUM DISEASE) பாதிக்கப்படும் என்பதை மருத்துவம் தெரிவிக்கிறது.

டீன் ஏஜ் பருவம்

இந்த பருவத்தில் ஹார்மோன்களின் அளவு அதிகரிப்பதால் பூப்பர்டி ஜிஞ்சிவைடிஸ் (GINGIVITIS) எனப்படும் 11 வயது முதல் 14 வயதில் வரும் பருவ ஈறு அழற்சி வரலாம். இதனால் ஈறு சிவப்பாக மாறுதல் எளிதில் ரத்தம் வரக்கூடிய சூழ்நிலை உருவாகும். பற்கள் மற்றும் இடுக்குகளில் தேங்கும் உணவுத்துகள்கள் மீது ஹார்மோன்கள் அதிகப்படியாக செயலாற்றுவதால் 'பிளாக்' எனப்படும் நிரந்தர படிவம் (DENTAL PLAQUE) உருவாகி ஈறு அழற்சி ஏற்படுகிறது.

கர்ப்ப காலம்

கர்ப்ப காலத்தில் ஈஸ்ட்ரோஜன் புரோஜெஸ்ட்டிரோன் அளவு அதிகரிப்பதால் ஈறு அழற்சிஅதிகரிக்க கூடும். இதை கற்பகால ஜிஞ்சிவைடிஸ் (GINGIVITIS) என்று சொல்லப்படுகிறது. சில பெண்களின் ஈறுகளில் பாதிப்பை ஏற்படுத்தாத சிறிய கட்டி போன்ற வளர்ச்சி உருவாகலாம். முறையான பராமரிப்பு, பல் மருத்துவரின் ஆலோசனை மூலம் இதனை சரி செய்ய முடியும். கர்ப்ப காலத்தில் பல் சிகிச்சை பெறுவது பாதுகாப்பானது.

மாதவிடாய் காலம்

சில பெண்களுக்கு மாதவிடாய் காலத்தின் போது தற்காலிகமாக மாதவிடாய் ஜிஞ்சிவைடிஸ் (GINGIVITIS) ஏற்படலாம் இதில் ஈறு வலி, ரத்தம் வருதல், எரிச்சல் போன்ற அறிகுறிகள் தோன்றும். இது கர்ப்பக் தடுப்பு மாத்திரைகளை பயன்படுத்தும் போது ஹார்மோன் மாற்றங்களால் ஈறு அழற்சிஅதிகரிக்கும்.

மெனோபாஸ் ஜிஞ்சிவைடிஸ்

மாதவிடாய் நிற்கும் வயதில் ஈஸ்ட்ரோஜன் அளவு குறைவதால் வாய் உலர்வு, வாய் எரிச்சல், தொற்றுகளின் அபாயம் அதிகரிக்கலாம். மேலும் எலும்பு தேய்மானம் காரணமாக பற்களை தாங்கும் எலும்புகள் பாதிக்கப்படலாம். இதனால் பற்கள் தளர்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.

பெண்கள் பின்பற்ற வேண்டிய குறிப்புகள்

தினமும் இரண்டு முறை பல் துலக்க வேண்டும். அந்த சமயத்தில் பல் இடைவெளிகளை சுத்தம் செய்வது அவசியம். கர்ப்ப காலத்தில் பல் மருத்துவரின் ஆலோசனை பெற வேண்டும். மெனோபாஸ் காலத்தில் வாய்உலர்வை அலட்சியம் செய்வது கூடாது. ஹார்மோன் மாற்றங்கள் இயற்கையானது, அந்த சமயத்தில் ஏற்படும் பிரச்னைகளை அலட்சியப்படுத்தாமல் மருத்துவ ஆலோசனை பெற வேண்டியது கட்டாயம் ஆகும்.

பற்களின் ஈறுகள் வீங்குதல், ரத்தம் வடிதல் போன்ற அழற்சி காரணமாக பெண்களுக்கு பல்வேறு வயதில் ஹார்மோன் மாற்றங்கள் ஏற்படுகிறது என்பது நிதர்சனமான உண்மை. எனவே, பெண்கள் அந்தந்த வயதில் பற்களில் ஏதேனும் பிரச்னை ஏற்பட்டால் ஈறு வீக்கம், ஈரில் ரத்தம் வடிதல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக பல் டாக்டரை பார்த்து சிகிச்சை பெறுவது நல்லது.

## பட்டுக்கோட்டை கோட்டத்தில் கோழி கழிச்சல் தடுப்பூசி முகாம்

**தஞ்சாவூர், பிப்.3:**

பட்டுக்கோட்டை கோட்டத்தில் இரு வார கோழி கழிச்சல் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது. இதுகுறித்து கால்நடைத்துறை உதவி இயக்குநர் மரு இ.விஜயராகவன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “ராணிகட் நோய் எனப்படும் வெள்ளை கழிச்சல் நோய் கோழிகளைத் தாக்கும் மிக மோசமான நோய். இது குளிர்காலத்தில் அதிகம் பரவக்கூடியது. பிறந்த, 8 வாரமான கோழிக் குஞ்சுகளுக்கு இதற்கான தடுப்பூசியை கட்டாயம் செலுத்த வேண்டும். தவறினால் நோய் பாதிக்கப்பட்ட இரண்டு நாள்களில் குஞ்சுகள் இறக்க நேரிடும் என தெரிவித்துள்ளார்.

## உதவித்தொகையை உயர்த்தி தருக! பிப்.10, 11, 12 தொடர் மறியல்

**தஞ்சாவூர், பிப்.3:**

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்டக் குழு கூட்டம், மருத்துவக் கல்லூரி சாலையில் மாவட்டத் தலைவர் டி.கஸ்தூரி தலைமையில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் டி.வில்சன் வழிகாட்டினார். மாவட்டச் செயலாளர் பி.எம். இளங்கோவன் வேலை அறிக்கை வாசித்தார். இக்கூட்டத்தில், மாவட்டத் துணைத் தலைவர்கள் பழ.அன்புமணி, கோவி.ராதிகா மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர்கள் தங்களது ஆலோசனைகளை வழங்கினர்.

## சிறுமியிடம் முறைகேடாக நடந்து கொண்ட ஆசாமிகள் போக்சோ வழக்கில் கைது

**கும்பகோணம், பிப்.3:**

தஞ்சாவூர் மாவட்டம் அருகே உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுமிக்கு, கடந்த 2022 ஆம் ஆண்டு அதே பகுதியைச் சேர்ந்த அப்பு (எ) எஸ்.சுரேந்தர் பாண்டியன் என்பவருடன் நட்பு ஏற்பட்டுள்ளது. பின்னர் அந்த நட்பு காதலாக மாறியுள்ளது. இதையடுத்து சுரேந்தர்பாண்டியன், அந்த சிறுமியிடம் முறைகேடாக நடந்துள்ளார். பின்னர் இருவரும் பிரிந்து விட்டதாக கூறப்படுகிறது. தொடர்ந்து அந்த சிறுமியிடம் புண்ணிய நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த மணிமாறன் (20) பசுபதிகோவிலைச் சேர்ந்த சுதன் (24) அந்த சிறுமி பழக்கம் வைத்துள்ளனர். இந்நிலையில்கடந்தசிலநாட்களாக அந்த சிறுமிக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து, அவரது பெற்றோர் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் சிறுமி 6 மாதம் கர்ப்பமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, குழந்தைகள் பாதுகாப்பு கமிட்டி அதிகாரிகளுக்கு தகவல் தெரிய வந்துள்ளது. இதையடுத்து காவல்துறையினர் மணிமாறன், ஜெயசுதன் ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டனர். இதில் இருவரும் சிறுமியிடம் முறை கேடாக நடந்து கொண்டது தெரிய வந்தது. இதையடுத்து போக்சோவில் வழக்குப் பதிந்து மணிமாறன், ஜெயசுதனை கைது செய்தனர். மேலும் சுரேந்தர் பாண்டியன் உட்பட 5 பேரை போக்சோ வழக்கில் கைது செய்தனர்.

# தை பவுர்ணமி: திருவண்ணாமலையில் பக்தர்கள் விடிய, விடிய கிரிவலம்



**திருவண்ணாமலை, பிப்.3:**

திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் உள்ளது. திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றி பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள்.

இந்த நிலையில் தை மாதத்திற்கான பவுர்ணமி நேற்று காலை 6.13 மணியளவில் தொடங்கியது. இதையொட்டி நேற்று முன்தினம் இரவே பக்தர்கள் திருவண்ணாமலையில் கிரிவலம் சென்றனர். நேற்று அதிகாலை முதல் ஏராளமான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். மேலும் நேற்று தைப்பூசம் என்பதாலும், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதாலும் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

இதற்கிடையில் நேற்று அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்ய ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர். பக்தர்களின் தரிசனத்திற்கு சென்ற வரிசை கோவில் அருகில் உள்ள இரட்டை பிள்ளையார் கோவில், பூத நாராயண பெருமாள் கோவில் வழியாக பெரிய தெருவில் நீண்டு காணப்பட்டது. கோவிலில் சாமி தரிசனம் செய்ய 6 மணி நேரத்திற்கு மேலானதாக பக்தர்கள் தெரிவித்தனர். மாலையில் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் அதிகரிக்க தொடங்கியது. கிரிவலம் செல்வதற்காக தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்து மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கார், வேன், பஸ் உள்ளிட்ட வாகனங்களில் திருவண்ணாமலைக்கு வந்தனர். முன்னதாக அருணாசலேஸ்வரர் கோவில் ராஜகோபுரம் எதிரில் உள்ள 16 கால் மண்டபத்தின் எதிரில் ஏராளமான பக்தர்கள் கற்பூரம் ஏற்றி வழிபட்டனர். இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 4.45 வரை பவுர்ணமி இருந்ததால் நேற்று முன்தினம் முதல் இன்று காலை வரையில் லட்சக்கணக்கான பக்தர்கள் விடிய, விடிய கிரிவலம் சென்றனர். அசம்பாவித சம்பவம் நடைபெறாமல் தடுக்க அங்கு தீயணைப்புத் துறையினர் தீத்தடுப்பு தண்ணீர் வாகனத்துடன் தயார் நிலையில் இருந்தனர். அதுமட்டுமின்றி போலீசாரும் தொடர்ந்து ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

# தைப்பூசம்: மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் பல்லாயிரம் பக்தர்கள் ஜோதி தரிசனம்

**மேல்மருவத்தூர், பிப்.3:**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு ஜோதி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆன்மிக இயக்கத்தின் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் முன்னிலையில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சவுந்தர், ஓய்வு பெற்ற நீதிபதிகள் ராஜேஷ்வரன், சிவஞானம், மாவட்ட கலெக்டர் அருண்ராஜ், கூடுதல் வருவாய் துறை நிர்வாக ஆணையர் நடராஜன் ஆகியோர் ஜோதி ஏற்றி வழிபட்டனர்.

ஆன்மிக இயக்க துணைத் தலைவர் ஸ்ரீதேவி பங்காரு, ஆதிபராசக்தி மருத்துவமனை இயக்குனர் ரமேஷ், ஊராட்சி மன்ற துணை தலைவர் அகத்தியன், லட்சுமி பங்காரு கலை அறிவியல் கல்லூரி தாளாளர் ஆஷா அன்பழகன், செவிலியர் கல்லூரி தாளாளர் ஸ்ரீலேகா செந்தில்குமார், மருத்துவக் கல்லூரி செயலாளர் மதுமலர், டாக்டர்கள் பிரசன்ன வெங்கடேஷ், மோனோ லட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

நிகழ்ச்சி விடியற்காலை 3 மணியளவில் மங்கல இசையுடன் துவங்கியது. குருபீடத்தில் ஆன்மீக குரு பங்காரு அடிகளாரின் திருவுருவச் சிலைக்கும், ஆதிபராசக்தி அம்மனுக்கும் அபிஷேக அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு சித்தர் பீடத்திற்கு சென்ற மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தின் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளாருக்கு ஈரோடு மாவட்டம் சார்பில் பொறுப்பாளர்களால் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

பின்னர் இயக்கத்தின் துணைத் தலைவர் கோ.ப.செந்தில்குமார் அன்னதானத்தை துவக்கி வைத்தார். மாலை டிரம்ஸ் இசைக் கலைஞர் சிவமணி, புகழ்பெற்ற வயலின் கலைஞர் அபிஜித்தின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆன்மிக இயக்கத்தின் துணைத் தலைவர் கோ.ப. அன்பழகன் தலைமையில் தைப்பூச ஜோதி ஊர்வலம் பங்காரு அடிகளார் இல்லத்திலிருந்து தொடங்கியது. இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை மேல்மருத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட நிர்வாகிகளும், ஆன்மீக இயக்க ஈரோடு மாவட்ட பொறுப்பாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# தைப்பூச திருவிழா: திருத்தணி முருகன் கோயிலில் லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

**திருவள்ளூர், பிப்.3:**

தைப்பூசத்தை முன்னிட்டு, திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நேற்று லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டு, நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் அமைந்துள்ள சுப்பிரமணிய சுவாமி கோயில், முருகனின் அறுபடை வீடுகளில், 5-ம் படை வீடாக விளங்குகிறது.

இக்கோயிலில், தைப்பூசத்தை முன்னிட்டு, நேற்று அதிகாலை 3 மணியளவில், மூலவரான சுப்பிரமணிய சுவாமிக்கு, பால், பன்னீர்,



தேன் உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து, சுப்பிரமணிய சுவாமிக்கு வெண்ணிற பட்டு அணிவிக்கப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. அதேபோல், காலை 9 மணியளவில் காவடி மண்டபத்தில் உற்சவர் சண்முகருக்கு பால் அபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்காரம் நடைபெற்றது. பிறகு, மாலை குதிரை வாகனத்தில் சுப்பிரமணிய சுவாமி பிரகார உலா சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தைப்பூசத்தை முன்னிட்டு, நேற்று அதிகாலை 3 மணி முதல் நேற்று இரவு வரை, திருவள்ளூர், அரக்கோணம் உள்ளிட்ட தமிழக பகுதிகள் மட்டுமல்லாமல், ஆந்திரா, புதுச்சேரி உள்ளிட்ட பிற மாநிலங்களை சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் திரண்டு, நீண்ட வரிசையில் 5 மணி நேரத்துக்கு மேல் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இதில், சென்னை, காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் பாதை யாத்திரையாக திருத்தணிக்கு வந்து, சுப்பிரமணிய சுவாமியை தரிசனம் செய்தனர். மேலும், நூற்றுக்கணக்கான பக்தர்கள் பால் காவடி, பன்னீர் காவடி, மலர் காவடி, மயில் காவடி உள்ளிட்ட காவடிகளை சுமந்து வந்து, சுப்பிரமணிய சுவாமியை வணங்கினர்.




## கல்லூரி மாணவர்களுக்கு கதை சொல்லுதல் போட்டி

**புதுக்கோட்டை, பிப்.3:**

பிப்ரவரி 7 அன்று நடைபெற உள்ள கந்தர்வன் நினைவு கலை இரவையொட்டி, கல்லூரி மாணவர்களுக்கான, கந்தர்வன் கதைகள் சொல்லுதல் போட்டி பிப்.03 (செவ்வாய்) அன்று புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெறுகிறது.

இதுகுறித்து போட்டி ஒருங்கிணைப்பாளர் பேரா. சா.விஸ்வநாதன் தெரிவிக்கையில், “புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கலை-அறிவியல் கல்லூரி மாண வர்களுக்கான கந்தர்வன் நினைவு கலை இரவு, கந்தர்வன் கதைகள் சொல்லுதல் போட்டி, 3.2.2026 (செவ்வாய்) அன்று கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. முதல் கட்ட போட்டி 12 கல்லூரிகளில் நடைபெற்று, ஒவ்வொரு கல்லூரியிலும் இருவர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். அவர்கள் 3.2.2026 அன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்கின்றனர்.

போட்டியில் வெற்றி பெறுகிறவர்களுக்கு முதல் பரிசு-ரூ.5000, இரண்டாம் பரிசு-ரூ.3000, மூன்றாம் பரிசு-ரூ.2000 மற்றும் ஆறுதல் பரிசாக ஐவருக்கு தலா ரூ.1000/- வீதம் வழங்கப் படவுள்ளது. பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ் பிப்ரவரி 7 அன்று புதுக்கோட்டை நகர்மன்ற வளாகத்தில் நடைபெறு கலை இரவில் சிறப்பு விருந்தினர்களால் வழங்கப்படும்” என்றார்.

## கியூட் நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

**திருவாரூர், பிப்.3:**

இந்தியா முழுவதும் உள்ள மத்திய பல்கலைக்கழகங்களில் 2026-27 ஆம் கல்வியாண்டு இளநிலை படிப்புகளில் சேருவதற்கான ‘கியூட்’ (CUET-UG) பொது நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசத்தை தேசிய தேர்வு முகமை நீட்டிப்பு செய்துள்ளது.

இதன்படி, திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்திலும் மாணவர்கள் பிப்ரவரி 4 ஆம் தேதி வரை ஆன்-லைனில் விண்ணப்பிக்கலாம் என்றும், விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்த பிப்.7 ஆம் தேதி கடைசி நாள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களில் திருத்தங்கள் மேற்கொள்ள பிப்.9 முதல் 11 ஆம் தேதி வரை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்களுக்கு உதவும் வகையில் திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் ஆன்- லைன் விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய சிறப்பு முகாம் களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


இதனை பயன் படுத்திக் கொள்ளுமாறு மத்திய பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வயர்லெஸ் இயர்பட்ஸ் மூலம் ஒட்டுக்கேட்கப்படும் ரகசியங்கள்! தற்காத்துக் கொள்வது எப்படி?

இன்றைய நவீன யுகத்தில், இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரின் காதுகளிலும் ஒரு சிறிய வெள்ளை நிறக் கருவி இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. பாட்டு கேட்பது, அலுவலக மீட்டிங்கில் பேசுவது, பயணம் செய்யும்போது படம் பார்ப்பது என எல்லாவற்றிற்கும் இந்த வயர்லெஸ் இயர்பட்ஸ் ஒரு அத்தியாவசியப் பொருளாக மாறிவிட்டது.

வயர் சிக்கல் இல்லாத சுதந்திரத்தை இது தருவதால், மக்கள் இதை விரும்பிப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், இந்தச் சுதந்திரத்திற்குப் பின்னால் ஒரு மிகப்பெரிய ஆபத்து ஒளிந்திருக்கிறது. நாம் பாதுகாப்பானது என்று நினைத்துப் பயன்படுத்தும் இந்தக் கருவிகள், நம் தனிப்பட்ட வாழ்க்கையை வேவு பார்க்கும் கருவிகளாக மாறக்கூடும் என்று சமீபத்திய ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

நாம் அனைவரும் தொழில்நுட்பம் வேகமாகச் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறோம். இயர்பட்களைக் காதில் வைத்த உடனே அது போனுடன் இணைய வேண்டும் என்பதற்காக நிறுவனங்கள் Fast Pair என்ற வசதியை அறிமுகப்படுத்தின. இந்த வசதிதான் இப்போது ஹேக்கர்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு வாசல் கதவு. பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த இணையப் பாதுகாப்பு வல்லுநர்கள் நடத்திய ஆய்வில், இந்தத் தொழில்நுட்பத்தில் உள்ள ஓட்டையைப் பயன்படுத்தித் திருடர்கள் நம் சாதனத்திற்குள் நுழைய முடியும் என்பது



கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு அவர்கள் Whisper Pair என்று பெயரிட்டுள்ளனர்.

பொதுவாக ஒரு சாதனத்தை ஹேக் செய்ய வேண்டும் என்றால், அதற்கான அனுமதி தேவைப்படும் அல்லது ஏதாவது ஒரு லிங்க் மூலம் வைரஸ் அனுப்பப்படும். ஆனால் இந்த முறையில் ஹேக்கர்கள் உங்கள் அனுமதி இல்லாமலே, சுமார் 50 அடி தூரத்தில் இருந்தே உங்கள் இயர்பட்ஸுடன் இணைப்பை ஏற்படுத்தி விடுவார்கள். இதில் மிகவும் ஆபத்தான விஷயம் என்னவென்றால், உங்கள் போனில் எந்தவிதமான எச்சரிக்கை மணியோ அல்லது அறிவிப்போ வராது. உங்களுக்குத் தெரியாமலேயே உங்கள் சாதனம் வேறொருவரின் கட்டுப்பாட்டிற்குச் சென்றுவிடும்.

ஒருமுறை ஹேக்கர்கள் உங்கள் சாதனத்துடன் இணைந்துவிட்டால், பிறகு நீங்கள் பேசுவது எதுவும் ரகசியம் இல்லை. நீங்கள் உங்கள் நண்பரிடம் பேசும் கிசுகிசுக்கள், வங்கி அதிகாரியிடம் பேசும் கணக்கு விவரங்கள் அல்லது அலுவலக ரகசியங்கள் என அனைத்தையும் அவர்களால் துல்லியமாகக் கேட்க முடியும். அதுமட்டுமல்லாமல், அவர்கள் நினைத்தால் உங்கள் அழைப்பைத் துண்டிக்கலாம் அல்லது பாடல்களை மாற்றலாம். இன்னும் ஒரு படி மேலே போய், நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்ற இருப்பிடத்தைக் கூட அவர்களால் கண்டுபிடிக்க முடியும். நாம் பாட்டு கேட்டுக்கொண்டு நிம்மதியாக இருக்கிறோம் என்று நினைப்போம், ஆனால் மூன்றாவதாக ஒரு நபர் நம்மை வேவு பார்த்துக்கொண்டிருப்பார்.

### தற்காத்துக்கொள்வது எப்படி?



தொழில்நுட்பம் வளர வளர ஆபத்துகளும் வளர்ந்துகொண்டே தான் இருக்கும். இதிலிருந்து தப்பிக்க விழிப்புணர்வு மட்டுமே ஒரே ஆயுதம். தேவை இல்லாத நேரங்களில் ப்ளூடூத் வசதியை அணைத்து வைப்பது மிகச் சிறந்த பழக்கம்.

மென்பொருள் அப்டேட்களைத் தள்ளிப்போடாமல் உடனுக்குடன் செய்துவிட வேண்டும். மக்கள் கூட்டம் அதிகம் உள்ள பொது இடங்களில் மிகவும் முக்கியமான அல்லது ரகசியமான அழைப்புகளைப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. அவ்வப்போது உங்கள் போனுடன் எந்தெந்தச் சாதனங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சரிபார்ப்பது உங்களைப் பாதுகாக்கும்.

# "அகங்காரம் அலங்காரமல்ல"

டைரக்டர் சோமு சினிமா உலகத்தின் வெற்றி, வீழ்ச்சி எல்லாவற்றையும் பார்த்தவர். ஆனால் அவருக்குப் புரியாத ஒரே கதாபாத்திரம் அவர் மகன் கார்த்திக்.

கார்த்திக் பாடகன். நல்ல குரல் இருந்தது. ஆனால் அந்தக் குரலை விட பெரியதாக இருந்தது அவனுடைய அகங்காரம். “நான் யாருன்னு உங்களுக்கு தெரியுமா? டைரக்டர் சோமுவின் மகன்,” என்ற அடையாளம் அவனுக்கு கவசம் போல. பயிற்சி இல்லை. பொறுமை இல்லை. தோல்வியை ஏற்கும் மனமும் இல்லை.

“பாடுறது மட்டும் போதாது கார்த்திக்...மத்தவங்க திருத்தம் சொன்னா கேட்டுக் கற்றுக்கோ,” என்று சோமு சொன்ன ஒவ்வொரு முறையும், கார்த்திக் சிரித்தான். “எனக்கு திருத்தம் சொல்ற அளவுக்கு எவனுக்குத் திறமை இருக்கு?,” என்ற அவன் பதில்கள் சோமுவின் இதயத்தில் சின்னச் சின்ன வெட்டுகள்.

ஒரு நாள், ரயில் பயணத்தில், அந்த வெட்டுகளுக்கு பதில் கிடைத்தது. ரயிலில் பாடிக் கொண்டிருந்த இளைஞன், எந்தப் பின்னணியும் இல்லை, எந்தப் பெயரும் இல்லை. ஆனால் பாடலில் வாழ்ந்தான். ஒவ்வொரு வரியிலும் பசி, தோல்வி, கனவு எல்லாம் கலவையாய் வந்து போயின.

சோமுவின் மனதில் ஒரு எண்ணம் மெல்ல உருவானது. "இவனை வெச்சுத்தான் கார்த்திக்கிற்கு பாடம் புகட்டணும்"

அந்த ரயில் பாடகன் திரையுலகிற்குள் கால் வைத்த நாளே, கார்த்திக்கின் உலகம் சறுக்கத் தொடங்கியது. அவன் முதன்முறையாக ‘நிராகரிப்பு’ என்ற வார்த்தையை கேட்டான்.

ஒரு நாள் இரவு, கார்த்திக் வெடித்தான். “என்ன தண்டிக்குறீங்களா அப்பா? ஒரு பிச்சைக்காரனை வெச்சு என்னைப் பழி வாங்கறீங்களா?”

சோமு அமைதியாகப் பார்த்தார். “நான் உன்னை பழிவாங்கலே கார்த்திக். உன்னை நீயே பழிவாங்கிக்கிட்டே... அவன் பிச்சைக்காரன் இல்ல. அவன் ஒரு பிறவிக் கலைஞன். நீ... இன்னும் கலஞனாகக் கூட ஆகலை.” அந்த வார்த்தைகள் கார்த்திக்கின் அகங்காரத்தை உடைத்தது. நாட்கள் கழிந்தன. வாய்ப்புகள் போனது. புகழ் பேசவில்லை. வீட்டில் அமைதி மட்டும் கனமாக இருந்தது.

ஒரு மழை இரவில், கார்த்திக் தந்தையின் காலடியில் அமர்ந்தான். “அப்பா... நான் கலையை நேசிக்கல... புகழை மட்டுமே நேசிச்சேன்... அதனால்தான் அது என்னை விட்டுப் போச்சு. மன்னிச்சுடுங்க.” சோமு மகனைத் தூக்கி அணைத்தார். அந்த அணைப்பில் கோபமும் இல்லை, ஒரு தந்தையின் நிம்மதி மட்டும் இருந்தது.

சில காலம் கழித்து, ரயில் பாடகர் சினிமாவை விட்டு விலகிய செய்தி வந்தது. “இந்த உலகம் என் சத்தத்தை மாற்றுது சார்... நான் என் இயல்பாய் இருக்க முடியலை.... ரயில்தான் எனக்கு உண்மை,” என்று சொல்லிப் போய் விட்டான்.

சோமு அவனைத் தேடவில்லை. அவன் அவனாகவே வாழட்டும் என்று விட்டு விட்டார்.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.



# முரண்

இர்பானாவும் ஜோனரும் தங்கள் மகளை முதன்முறையாகப் பள்ளியில் சேர்த்துவிட்டு வெளியே வந்தபோது, ஒருவித நிம்மதியும் கலந்த அச்சமும் அவர்கள் முகத்தில் நிழலாடியது. பள்ளிக்கு அனுப்பும் முன் குழந்தைக்கு அவர்கள் கொடுத்த அறிவுரைகள் ஏராளம். "தெரியாதவர்களிடம் பேசாதே", "யாராவது மிட்டாய் கொடுத்தால் வாங்காதே", "அந்நிய நபர்கள் உன்னைக் கடத்திச் சென்று விற்றுவிடுவார்கள்" என ஏகப்பட்ட எச்சரிக்கைகளை அவள் பிஞ்சு மனதில் விதைத்திருந்தனர். பள்ளி வாசலில் அவர்கள் குடும்ப நண்பரும், ஓய்வுபெற்ற அரசு அதிகாரியுமான மேகநாதனைச் சந்தித்தனர். அவரது பேத்தியும் அதே பள்ளியில்தான் படிக்கிறாள். மென்மையான சுபாவம் கொண்டவர், குழந்தைகள் மேல் அளவற்ற பாசம் கொண்டவர் எனப் பெயரெடுத்தவர் மேகநாதன். ஆசையாக இர்பானாவின் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சியவர், மகிழ்ச்சியில் ஐந்நூறு ரூபாய் தாளைப் பரிசாக அளித்தார். இர்பானாவுக்கு அவர் மீது மிகுந்த மதிப்பும் நம்பிக்கையும் உண்டானது. அன்போடு பேசிய மேகநாதன், சில அறிவுரைகளையும் தந்தார். "வேன் ஓட்டுநர்கள், ஆட்டோக்காரர்கள், பள்ளியில் பணிபுரியும் உதவியாளர்கள் என யாரையுமே நம்ப முடியாது. பலரும் சந்தேகத்திற்கு இடமாகவே இருக்கிறார்கள். பிள்ளையைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்," என அவர் எச்சரித்தபோது, பெற்றோரின் பயம் இன்னும் அதிகரித்தது. மாலையில் குழந்தையை அழைத்து வந்த வேன் ஓட்டுநரைப் பார்த்தபோது, இர்பானாவுக்கு மேகநாதன் சொன்னதுதான் நினைவுக்கு வந்தது. கலைந்த தலைமுடி, புகையிலை கறையேறிய பற்கள், ஒருவிதமான முரட்டுப் பேச்சு என அந்த ஓட்டுநரின் தோற்றமே கவலையளிப்பதாக இருந்தது. "இனி இந்த வேன் வேண்டாம், நாமே தினசரி குழந்தையைப் பள்ளியில் விட்டுவிடலாம்" என்று அன்றே முடிவெடுத்தனர்.

மறுநாள் தம்பதியினர் கிளம்பச் சற்று தாமதமாகிவிட்டது. பதற்றத்தில் இர்பானா மேகநாதனுக்குத் தொலைபேசியில் அழைத்தார். "அங்கிள், எங்களுக்கு நேரமாகிவிட்டது. பாப்பாவை மட்டும் வேனில் ஏற்றி விடாதீர்கள், நீங்களே வரும்போது அழைத்து வந்துவிடுங்கள்" என்றார். ஆனால் அன்று மேகநாதன் குழந்தையைத் தூக்க முயன்றபோது, அந்த வேன் ஓட்டுநர் விடாப்பிடியாகக் குழந்தையை அவரிடமிருந்து பறித்தார். குழந்தை அழ அழ, பிடிவாதமாக வேனில் ஏற்றிச் சென்றார். இதைக் கண்ட மேகநாதன் உடனடியாகப் போலீஸுக்கும், பள்ளி நிர்வாகத்திற்கும், இர்பானாவிற்கும் தகவல் தெரிவித்தார். "டிரைவர் குழந்தையைக் கடத்திச் செல்கிறான்" என்ற செய்தி காட்டுத்தீயாய் பரவியது. வீட்டில் பெரும் பதற்றத்துடன் காத்திருந்த இர்பானாவின் வாசலில், அந்த வேன் ஓட்டுநர் தனது இருசக்கர வாகனத்தில் பாப்பாவை அழைத்து வந்து இறக்கினான். அவன் தயங்கியபடியே சொன்னான், "என்னம்மா, ஒருநாள் வேன்ல வந்த பாப்பா அடுத்த நாளே வரலையேன்னு எனக்கு ரொம்ப பயமாயிடுச்சு. அதுமட்டும் இல்லாம, ஒரு பெரியவர் இந்தப் பாப்பாவைக் கட்டாயப்படுத்தி அவரோட டுவீலர்ல ஏத்த முயற்சி பண்ணாரு. எனக்கு ஏதோ சரியா படல. மத்த பிள்ளைகளை விட பாப்பா பாதுகாப்புதான் முக்கியம்னு தோணுச்சு. அதான் டக்குனு தூக்கி வேன்ல போட்டுட்டு, எல்லா பிள்ளைகளையும் பத்திரமா இறக்கி விட்டுட்டு இப்போ பாப்பாவை இங்க கூட்டிட்டு வர்றேன். லேட்டானதுக்கு மன்னிச்சிருங்க. எதுவா இருந்தாலும் எனக்கு ஒரு போன் பண்ணி சொல்லிடுங்கம்மா" என்றான். குழந்தையின் கன்னத்தில் அன்போடு தட்டிவிட்டு அவன் விடைபெற்றான். இர்பானா திகைத்துப்போய் நின்றாள். பிரமிப்பு மாறாமல் குழந்தையுடன் உள்ளே சென்றபோது, ஜோனர் போனில் யாரிடமோ அதிர்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்தான். "நம்பவே முடியல! மேகநாதன் அங்கிளா இப்படி? என்ன மனுஷன் அவரு? அந்த மனுஷனுக்குள் இப்படி ஒரு குரூரமா?" எனப் பதறினான். மேகநாதன் பல பள்ளிச் சிறுமிகளிடம் தவறாக நடந்து கொண்ட விவகாரம், அவரது சொந்த மருமகள் மூலமாக வெளியே வந்து, போலீஸ் விசாரணை வரை சென்றிருந்தது. இர்பானாவுக்கு அப்போதுதான் ஒரு உண்மை புரிந்தது. நல்லவர் என்று நாம் நினைப்பவர்கள் எல்லாம் நல்லவர்களுமில்லை; தோற்றத்தை வைத்து நாம் கெட்டவர் என நினைப்பவர்கள் எல்லாம் கெட்டவர்களுமில்லை. "தெரியாதவரிடம் பார்த்துப் பழகு" என்பதை விட, "தெரிந்தவர்களிடம் மிக எச்சரிக்கையாக இரு; தெரியாதவரிடம் பழகிப் புரிந்து கொண்ட பின் நம்பிக்கை வை" என்பதே இன்றைய காலத்தின் கட்டாயம் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.



**-ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

# அகத்தியனின் பயணம் 08



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

## கற்பூரப் புத்தியுடையோன்

அன்று முதல் நாள் என்பதால் அனைவருமே புரிதலற்ற தன்மையோடுதான் வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். அகத்தியன் உதவி இந்த 30 பேருக்கும் அன்று தேவைப்பட்டது. நிறைய சந்தேகங்களை எழுப்பிக்கொண்டே இருந்தார்கள். அகத்தியனும் களைத்து போகாமல் நிதானமாக, பொறுமையாக, ஒவ்வொருவருடைய சந்தேகத்துக்கும் பதில் அளித்துக்கொண்டே இருந்தான். முதல் இடைவெளி வந்ததும் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. கலகலப்பாகவுகம் சிரிப்போடும் பேசிக்கொண்டே வேலையை முடித்துவிட்டு, மீண்டும் திரும்பித் தனக்கு கொடுக்கப்பட்ட வேலையைச் செய்தனர். மீண்டும் அவர்களுடைய இடத்திற்கு வந்ததும், அகத்தியன் தேநீர் அருந்துவதற்காக உள்ளே சென்றான். “சார்“ எனப் எழிலழகி கூப்பிட்டதும் அகத்தியன் திரும்பிப் பார்த்தான்.

“சார் நீங்க எங்கிருந்து வரீங்க.” எனக் கேட்டதும், சிரித்துக்கொண்டு “சென்னைதாமா” என்று சொல்லிவிட்டு அகத்தியன் வெளியே நடந்தான். மதிய உணவு இடைவேளையில் அனைவரும் தான் கொண்டு வந்த சாப்பாட்டு பாக்ஸ் எடுத்துப் பிரித்துவைத்து, ஒன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் சாப்பிடும் இடத்திற்கு வந்த அகத்தியன் “அம்மா நமக்குதான் நிர்வாகம் நல்ல சாப்பாடு செய்துகொடுத்திருக்கே, நீங்களும் இங்க சாப்பிடலாமே.” என்று அகத்தியன் கேட்டான்.

அதற்கு டக்குன்னு எழிலழகி “ சார் எங்களுக்குத் தெரியாது. அதான் நாங்க கொண்டு வந்துட்டோம். நாளையிலிருந்து கொண்டுவரமாட்டேன் சார். இங்கேயே நாங்கள் சாப்பிடுவோம்” என்று பதில் சொன்னாள்.

எழிலழகி மட்டும்தான் அதிகமாக உரையாடிக் கொண்டிருந்தாள். மற்றவர்கள் அனைவருமே அமைதியாக அவரவர்கள் வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள்.

கைக்கழுவி ஓய்வெடுத்து சிரித்து பேசி அடுத்த வேலையைச் செய்வதற்காக அனைவரும் உள்ளே நுழைந்தனர். இப்பொழுது காலையிலிருந்த நிலை மாறிருந்தது. தெரியாமல் இருந்த வேலை தெரிந்து போனது. புரியாமல் இருந்த சில செய்திகள் அவர்களுக்குப் புரிந்தது. மௌனம் அதிகமானது. வேலை விறுவிறுப்பாக நடந்தது. அகத்தியன் மகிழ்ச்சி அடைந்தான்.

எழிலழகி மட்டும் சுறுசுறுப்பாகவும் எப்பொழுதும் சிரித்த முகத்துடனும் மகிழ்ச்சியாகவும், தான் இருக்கும் இடத்தை மாற்றியிருந்தாள். ஏதாவது பேசிக்கொண்டு அனைவரையும் சத்தம் இல்லாமல் சிரிக்க வைத்துக்கொண்டிருந்தாள்.

அகத்தியனுக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சியும், இன்னொரு விதத்தில் வேலை எங்குக் கெட்டுவிடுமோ என்ற பயமும் இருந்தது. ஆனால் முதல் நாள் என்பதால் எதையும் சட்டென்று சொல்லிவிடவும் இல்லை. சரி போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான்.

மாலை மணி ஐந்து ஆனவுடன் வேலை அப்படியே நிறுத்தப்பட்டது. யார் யார் என்னென்ன வேலை செய்தார்களோ அப்படியே அதே இடத்தில் பொருட்கள் வைக்கப்பட்டது. 30 பேரும் ஒன்றாகக் கூடினார்கள். அகத்தியன் அங்குச் சென்றான். “உண்மையிலேயே இன்றைக்கு நமக்கு மகிழ்ச்சியான நாள். நீங்களும் புதுசு. நானும் புதுசு. இன்னைக்கு காலையில புரியாத சூழல் நம்மகிட்ட இருந்தது. ஆனா மதியம் பார்த்தேன் நீங்க எல்லாத்தையும் புரிஞ்சுகிட்டீங்க. எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு. வேலை நடந்துக்கிட்டே இருக்கு. இதுல என்ன ஒரே ஒரு விஷயம்னா எழிலழகிதான் நிறைய பேசிகிட்டே இருக்காங்க. எல்லாறையும் சிரிக்க வச்சுக்கிட்டே இருக்காங்க. ஆனா உண்மையிலேயே அது ஒரு நல்ல விஷயம்தான். எழிலழகி பேசலாம் தப்பு இல்ல. ஆனா வேலை கெட்டுடக் கூடாது” என்று சொன்னவுடன் அப்போதும் எழிலழகி

“ சார் நாங்க எல்லாமே வேலை செய்தோம். நான் யார் வேலையும் கெடுக்கல. ம்முன்னு மூஞ்சி வச்சுக்கிட்டு இருந்தா டைம் போகாது சார். அதனாலதான் நான் எங்க பிரண்டுகிட்ட கலகலப்பா சிரிச்சு பேசிட்டு இருந்தேன் சார்” என்று எழிலழகி பதில் சொன்னவுடன்,

அகத்தியன் எதுவும் சொல்லாமல் “சரிமா நீ எப்பவுமே செய்ற மாதிரி செய். ஆனா வேலை பாதிக்கக் கூடாது. நமக்குக் கொடுத்திருக்கிற இலக்க தொடனும்” என்றார்.

“அவங்க நம்ம மேல வச்சிருக்கற நம்பிக்கை எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது.” என்று சின்னதாய் எழிலழகியைப் பார்த்துச் சிரித்துவிட்டு,

“சரி சீக்கிரமா நாளைக்கு சரியான டைமுக்கு வந்துடுங்க. ரொம்ப மகிழ்ச்சி.” என்று எல்லோரையும் அனுப்பி வைத்துவிட்டு, அகத்தியன் கம்பெனியின் நிர்வாக இயக்குனரைச் சந்திப்பதற்காக அவருடைய அறையினுள் நுழைந்தான்.

” வாங்க அகத்தியன், உக்காருங்க” என்று இயக்குனர் வரவேற்க,

“நன்றி மேடம்”

“எப்படி இருந்தது வேலை” எனக் கேட்க,

“ காலையில என்ன செய்யறது, எப்படி வேலை வாங்குவது என்று தெரியவில்லை மேடம். ஆனா, சாப்பிட்டு முடித்தவுடனே அவங்க நல்லா புரிஞ்சுகிட்டாங்க. வேலை சீக்கிரமா நடக்க ஆரம்பித்து. அற்புதமான சூழல். நல்ல டீம். நான் உண்மையிலேயே கொடுத்துவச்சவன் மேடம்” என்று அகத்தியன் மேடத்திடம் மகிழ்ச்சியூட்டும் செய்தியைச் சொன்னவுடன்,

“ அதனால்தான் அகத்தியன் உங்கள மாதிரி படிச்ச புதிய மாணவர்கள் எங்க கம்பெனிக்குத் தேர்வு செய்கிறோம். ஏன்ன நீங்கக் கற்பூரம் மாதிரி உடனே பிடிச்சுக்குவிங்க. உங்களாலதான் எங்களுடைய வளர்ச்சி அதிகமா இருக்கு. அதே நேரத்துல உங்களுடைய உழைப்பு, உங்களுடைய ஈடுபாடு அதையெல்லாம் நாங்க மனதில் கொண்டு, உங்களுக்கு எது தேவையோ அதைக் கண்டிப்பா செய்து கொடுப்போம், இதே வார்த்தையை உங்ககிட்ட நம்பி ஒப்படைக்கப்பட்ட 30 பேருக்கும் நீங்கச் சொல்லி, தினமும் அவங்கள ஊக்குவித்து அவங்ககிட்டருந்து வேலைய வாங்க் நல்ல சூழல உருவாக்கணும். யாராவது சிரிச்சிட்டு இருந்தாங்கன்னா அதைக் கெடுக்காமலும், யாராவது உம்முனு இருந்தாங்கன்னா அவங்களுக்குள்ள என்ன இருக்குன்னு தனிப்பட்ட விஷயங்களை யாரும் யாரோடும் பாதிக்காத அளவுக்குக் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு, ஒரு குடும்பம் மாதிரி இந்தக் கம்பெனியைக் உயர்வுக்குக் கொண்டு வருவீங்க, என்ற நம்பிக்கை உங்க மேல எனக்கு இருக்கு அகத்தியன்”.

“நீங்கத் தொடர்ந்து செய்யுங்க. எதுவா இருந்தாலும் என்கிட்ட பேசுங்க. நான் உங்கமேல வச்சிருக்கற நம்பிக்கையை மேலும் மேலும் வளர்த்துக்கிட்டே இருங்க” என்று நிர்வாக இயக்குனர் சொல்லி முடித்ததும், “ நன்றி மேடம்” என்று சொல்லிவிட்டு அன்றைய முதல் நாள் வேலை சிறப்பாக முடிந்தது என்ற மகிழ்ச்சியோடு தன் அறையை நோக்கி நடந்தான் அகத்தியன்.



(தொடரும்)

# திருமணத்தின் போது அக்னியை சுற்றி ஏழு அடிகள் நடப்பதற்கு என்ன பொருள்?

சம்ஸ்கிருதத்தில் இதை'சப்தபதி'என்று கூறுவார்கள்.

அதாவது ஏழு அடிகள் மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் சேர்ந்து நடந்து வருவதாகும். அவ்வாறு ஏழு அடிகள் நடக்கும் போது மாப்பிள்ளை பெண்ணிடம் இறைவன் உனக்கு துணையிருப்பான் என்று கீழ்கண்டவாறு தனது பிரார்த்தனையைச்சொல்கிறான்!

"முதல் அடியில் : பஞ்சமில்லாமல் வாழ வேண்டும்"

"இரண்டாம் அடியில் : ஆரொக்கியமாக வாழ வேண்டும்"

"மூன்றாம் அடியில் : நற்காரியங்கள் எப்பொழுதும் நடக்க வேண்டும்"


"நான்காவது அடியில் : சுகத்தையும் , செல்வத்தையும் அளிக்க வேண்டும்"

"ஐந்தாவது அடியில் : லக்ஷ்மி கடாக்ஷம் நிறைந்து பெற வேண்டும்"

"ஆறாவது அடியில் : நாட்டில் நல்ல பருவங்கள்நிலையாக தொடர வேண்டும்"

"ஏழாவது அடியில் : தர்மங்கள் நிலைக்க வேண்டும்"

என்று பிராப்திப்பதாக சொல்லப்படுகிறது. இந்த சம்பிரதாயத்தில்மனிதர்களிடம் இருக்கும் மிகவும் சூக்ஷமமான



மனோவியல் விசயத்தை இந்து தர்மத்தில் உணர்த்தியுள்ளார்கள் நம் முன்னோர்கள்.

இரண்டு நபர்கள் ஒன்றாக ஏழு அடிகள் நடந்தால் அவர்களுக்குள் சினேகிதம் உண்டாகும் என்பது சாஸ்திரம்.

உதாரணமாக நாம் சாலையில் நடக்கும் போது அறிமுகமில்லாத ஒருவரை கடக்கும் போது சில விநாடிகள் ஒன்றாய் நடக்க நேர்ந்தால் நன்றாக கவனியுங்கள். ஏழு அடிகள் நடப்பதற்குள் நாம் அவர்களை வேகமாக தாண்டிவிடுவோம் அல்லது அவர்களைமுன்னே போகவிட்டுவிடுவோம். முழுமையாக ஏழு அடிகள் ஒன்றாக நடக்க மாட்டோம்.

இரண்டு மனிதர்கள் ஒன்றாக நடக்கும் போது அவர்களுக்குள் நடக்கும் மனோவியல் மாற்றங்கள் ஏழு அடிகளுக்குளாக நடந்து விடும் என்பது ஒரு சூக்ஷமமான விஷயம்.

இதை மிகவும் நுணுக்கமாக ஆரய்ந்து "நம் இந்து தர்மத்தில்" அதை ஒரு சம்பிரதாயமாக வைத்திருப்பதை நாம் அனுபவித்து உணர வேண்டும். இந்து தர்மத்தில் எதுவும் மூடநம்பிக்கை இல்லை. பல நுணுக்கமான அறிவியல் மனோவியல்விஷயங்கள் நிறைந்தது இந்து தர்மம்.

முனைவர்
**இராம.வேதநாயகம்**

## தினம் ஒரு தலைவர்கள் உஷா மேத்தா வரலாறு

உஷா மேத்தா (25 மார்ச் 1920 11 ஆகஸ்ட் 2000 அவர்கள் காந்தியவாதி மற்றும் இந்திய சுதந்திர போராட்ட வீரர். காங்கிரஸ் வானொலி ஊடாக இன்றும் நாட்டு மக்களுக்கு அறியப்படுகிறார், அந்த வானொலிக்கு இன்னொரு பெயர் மறைமுக காங்கிரஸ் வானொலி, பிரித்தானிய அரசின் அனுமதி இன்றி, மறைமுகமான இடத்தில் இருந்து இந்த வானொலி, நிலையம் ஒலிபரப்பாகியது. வெள்ளையனே வெளியேறு (1942), காலகட்டத்தில் இந்த வானொலி சிற்றலையில் ஒலிபரப்பியது. 1998ல், இந்திய அரசு இவருக்கு பத்ம விபூசன், எனும் நாட்டின் இரண்டாவது பெரிய விருதினை வழங்கி சிறப்பித்தது.

தொடக்க வாழ்க்கை

உஷா சரஸ் எனும் கிராமத்தில் சூரத் குஜராத் இல் பிறந்தார். அவருக்கு ஐந்து வயதாக இருந்தபோது, அகமதாபாத் இல் தனது ஆசிரமத்தை பார்வையிடும்போது உஷா முதலில் காந்தி ஐச் சந்தித்தார். சிறிது நாட்களுக்குப் பிறகு, காந்தி அவரது கிராமத்திற்கு அருகில் ஒரு முகாம் ஏற்பாடு செய்தார், அதில் குழந்தை உஷாவும் பங்கேற்றார், பல அமர்வுகளிலும் கலந்து கொண்டார். மேலும் அங்கே பருத்தி நூற்பும் செய்தார். உஷாவின் ஆரம்ப பள்ளிப்படிப்பினை கெடா மற்றும் பருச்சிலும் பின்னர் பம்பாயின் சந்தரம்ஜி உயர்நிலைப் பள்ளியிலும் பயின்றார். இவர் படிப்பில் சராசரி மாணவியாக இருந்தார். 1935 ஆம் ஆண்டில், இவரது மெட்ரிகுலேஷன் தேர்வுகளில் வகுப்பில் முதல் 25 மாணவர்களில் முதல் இடம் பிடித்தார். மும்பாயில் உள்ள வில்சன் கல்லூரி இயில் தனது கல்வியைத் தொடர்ந்தார், 1939 இல் தத்துவத்தில் முதல் வகுப்பு பட்டம் பெற்றார். இவர் அதன் பின் சட்டம் படிக்கத் தொடங்கினார், ஆனால் 1942 ஆம் ஆண்டில் தனது படிப்பை முடித்துவிட்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இணைந்தார். அப்பொழுது அவருக்கு வயது, 22. அதன் பின் முழுநேர சுதந்திர போராட்ட இயக்கத்தில் பங்கேற்றார்.

சுதந்திர போராட்ட இயக்கத்தில் பங்கு

ஆகஸ்ட் 14, 1942 இல், உஷாவும் அவரது நெருங்கிய கூட்டாளிகளும் இரகசிய காங்கிரஸ் வானொலியைத் தொடங்கினர், இது ஒரு இரகசிய வானொலி நிலையம். இது ஆகஸ்ட் 27 அன்று தனது முதல் ஒலிபரப்பினை செய்தது. அவரது குரலில் ஒலிபரப்பப்பட்ட முதல் சொற்கள்: "நீங்கள் கேட்டுக் கொண்டு இருப்ப காங்கிரஸ் வானொலியாகும் [இந்தியாவில் இருந்து சிற்றலை வரிசை 42.34 மீட்டரில் ஒலிபரப்புகிறது"



இந்த வானொலியை ஒலிபரப்ப விதல்பாய் ஜாவேரி, சந்திரகாந்த் ஜாவேரி, பாபுபாய் தாக்கர் மற்றும் சிகாகோ வானொலியின் உரிமையாளர் நங்கா மோத்வானி ஆகியோர் உதவி செய்தனர்.

டாக்டர் ராம் மனோகர் லோஹியா, அச்சியூத்ராவ் பட்வர்தன் மற்றும் புருஷோத்தம் திரிகம்தாஸ் உள்ளிட்ட பல தலைவர்களும் இரகசிய காங்கிரஸ் வானொலிக்கு உதவினர். வானொலி ஒலிபரப்பு காந்தி மற்றும் இந்தியா முழுவதும் உள்ள பிற முக்கிய தலைவர்களிடமிருந்து செய்திகளைப் பதிவு செய்து ஒலிபரப்பியது. பிரித்தானிய அதிகாரிகளைத் தவிர்ப்பதற்காக, அதன் அமைப்பாளர்கள் கிட்டத்தட்ட தினமும் வானொலி நிலையத்தின் இடத்தினை மாற்றினர். ஆனால், 1942 நவம்பர் 12 ஆம் தேதி காவல்துறையினர் அவர்களைக் கண்டுபிடித்து உஷா மேத்தா உள்ளிட்ட அமைப்பாளர்களை கைது செய்தனர். அனைவரும் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டனர். இரகசிய காங்கிரஸ் வானொலி மூன்று மாதங்கள் மட்டுமே இயங்கினாலும், பிரித்தானிய கட்டுப்பாட்டில் உள்ள இந்திய அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட தணிக்கை செய்யப்படாத செய்திகள் மற்றும் பிற தகவல்களை பரப்புவதன் மூலம் இது சுதந்திர போராட்ட இயக்கத்திற்கு பெரிதும் உதவியது. இரகசிய காங்கிரஸ் வானொலியும் சுதந்திர இயக்கத்தின் தலைவர்களை பொதுமக்களுடன் தொடர்பில் வைத்திருந்தது. அந்த நாட்களை நினைவூட்டிய உஷா மேத்தா, சீக்ரெட் காங்கிரஸ் வானொலியுடனான தனது ஈடுபாட்டை தனது "மிகச்சிறந்த தருணமும் அது தான்" என்றும், என்றும் விவரித்தார்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலம்

சிறைவாசத்திற்குப் பிறகு, உஷாவின் உடல்நிலை மோசமானது, இதனால் அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் பங்கேற்க் முடியவில்லை. இந்தியா சுதந்திரம் பெற்ற அன்று, உஷா மேத்தா மருத்துவ படுக்கையில் இருந்தார், இதனால் புதுதில்லியில் நடைபெற்ற உத்தியோகபூர்வ சுதந்திர விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. பின்னர் அவர் தனது கல்வியை மீண்டும் தொடங்கினார். காந்தியின் அரசியல் மற்றும் சமூக சிந்தனை குறித்து முனைவர் பட்ட ஆய்வினை செய்தார். மும்பை பல்கலைக்கழகத்துடன் அவர் தொடர்பு கொண்டிருந்தார்: ஒரு மாணவராக, ஆராய்ச்சி உதவியாளராக, விரிவுரையாளராக, பேராசிரியராக, இறுதியாக குடிமை மற்றும் அரசியல் துறையின் தலைவராக உயர்ந்தார். இவர் பம்பாய் பல்கலைக்கழகத்தில் இருந்து 1980 ல் ஓய்வு பெற்றார்.

இந்திய அரசின் உயர்ந்த விருதான பத்ம விபூஷன் 1998 இல் இவருக்கு வழங்கப்பட்டது. பரணிடப்பட்டது 2017-10-19 AT THE வந்தவழி இயந்திரம் இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த சிவில் விருதாக இது கருதப்படுகிறது.

கடைசி காலம்

ஆகஸ்ட் 2000 இல், இவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தாலும், உஷா ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் கிரந்தி மைதானத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் ஆண்டுவிழா கொண்டாட்டங்களில் பங்கேற்றார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஆகஸ்ட் 11, 2000 அன்று தனது 80 வயதில் இறந்தார், அவரது அண்ணன் மற்றும் மூன்று மருமகன்களுடன் அவர் வாழ்ந்துவந்தார். அவரது மருமகன்களில் ஒருவரான, கேதன் மேத்தா, ஒரு பிரபலமான பாலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர். மற்ற மருமகன் டாக்டர் எடின் மேத்தா, ஒரு பிரபலமான மயக்க மருந்து நிபுணர், அவர் முன்பு எஸ்கார்ட்ஸ் மருத்துவமனையின் இயக்குநராக இருந்தார், இப்போது குர்கானில் மருத்துவத்துடன் தொடர்புடைய பணியில் இருந்து வருகிறார். மூன்றாவது மருமகன் டாக்டர் நிரத் மேத்தா ஆவார், அவர் ராணுவத்தில் பணிபுரிந்தார்.

# ஸ்ரீலீலாவை தொடர்ந்து தனுஷ் படத்தில் இணைந்த சாய் பல்லவி



தனுஷ், இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இணையும் படத்திற்கு 'D55' என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை தனுஷின் வுண்டர்பார் ஸ்டுடியோ நிறுவனம் தயாரிக்கிறது. இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி 'D55' படத்தை பெரிய அளவில் ஆக்ஷன் அதிரடி படமாக எடுக்க திட்டமிட்டுள்ளார் என கூறப்பட்டது.

இதனை தொடர்ந்து, இந்தப் படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்க உள்ளதாக சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. மேலும், 'D55' படத்தில் தனுஷுக்கு ஜோடியாக ஸ்ரீலீலா நடிக்கிறார் என்று படக்குழு போஸ்டர் வெளியிட்டது.

இந்நிலையில், 'D55' படத்தின் சாய் பல்லவி நடிக்கிறார் என்று படக்குழு புகைப்படம் வெளியிட்டு அறிவித்துள்ளது.



நடிகை க்ரித்தி ஷெட்டி தமிழ், தெலுங்கில் பிஸியான நடிகையாக இருந்து வருகிறார். சமீபத்தில் அவர் நடித்த வா வாத்தியார் படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகி இருந்தது. அதற்கு கலவையான ரெஸ்பான்ஸ் தான் கிடைத்து இருக்கிறது. க்ரித்தி ஷெட்டி தொடர்நது இன்ஸ்டாவில் கிளாமர் லுக்கில் வெளியிட்டு வரும் புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

தற்போது தாராள கிளாமர் உடையில் நடிகை க்ரித்தி ஷெட்டி போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்களை பாருங்க.

# மிரள வைக்கும் பாவனாவின் "அனோமி" டிரெய்லர்




இந்திய திரையுலகில் 23 ஆண்டுகளாக தனது நடிப்பு திறமையாலும், விடாமுயற்சியாலும் ரசிகர்களின் மனதில் தனி இடம்பிடித்தவர் பாவனா. பல்வேறு திரைப்படங்கள், பிரபல நடிகர்களுடன் பணியாற்றி இருக்கும் பாவனா தனது 90வது மைல்கல் திரைப்படமான 'அனோமி: தி ஈக்வேஷன் ஆஃப் டெத்' மூலம் மீண்டும் ரசிகர்களை வியப்பில் ஆழ்த்த உள்ளார்.

'நம்மல்' திரைப்படம் மூலம் அறிமுகமான பாவனா, இதுவரை பல்வேறு விதமான கதாபாத்திரங்களில் தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்தியுள்ளார். அந்த வரிசையில், 'அனோமி' படத்தில் அவர் புது கதாபாத்திரம் ஒன்றை ஏற்று நடித்துள்ளார். இந்த திரில்லர் படத்தை அறிமுக இயக்குநர் ரியாஸ் மரத் எழுதி இயக்கியுள்ளார்.

வழக்கமான குற்றவியல் திரில்லர் எல்லைகளைத் தாண்டி, பேரலெல் இன்வெஸ்டிகேஷன் எனும் தனித்துவமான கதை சொல்லும் முறையில், உணர்ச்சிகளும் பதற்றமும் கலந்த திரைக்கதையை அமைந்துள்ளார். படத்தில் பாவனா, 'சாரா' என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

மேலும் நடிகர் ரஹ்மான், இந்தப் படத்தில் விசாரணை அதிகாரியாக மலையாள சினிமாவுக்கு மீண்டும் திரும்புகிறார். அவரது கதாபாத்திரம் படத்திற்கு முக்கிய பலமாக அமைந்துள்ளது.

இந்தப் படத்தை டி சீரிஸ் ஃபிலிம் மற்றும் பனோரமா ஸ்டூடியோஸ் வழங்க குமார் மங்கத் பாதக் மற்றும் அபிஷேக் பாதக் தயாரித்துள்ளனர். 'அனோமி: தி ஈக்வேஷன் ஆஃப் டெத்' மர்மம், உணர்ச்சி, மற்றும் புத்திசாலித்தனமான விசாரணை ஆகியவற்றின் சங்கமமாக, ரசிகர்களுக்கு ஒரு வித்தியாசமான திரையரங்க அனுபவத்தை வழங்க தயாராக உள்ளது.

இப்படம் திரையரங்குகளில் பிப்ரவரி 6 ஆம் தேதி வெளியாக உள்ள நிலையில், படத்தின் டிரெய்லர் வெளியாகியுள்ளது.

# 'தங்களை சார்ந்துள்ளவர்களுக்கு மட்டுமே விருது கொடுக்கும் தன்மை'



ஜனவரி 29, 2026 அன்று, தமிழ்நாடு அரசு 2016 முதல் 2022 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மாநிலத் திரைப்பட விருதுகளை அறிவித்தது. இதில் நடிகர்கள் தனுஷ், சூர்யா, விஜய் சேதுபதி, கார்த்தி மற்றும் நடிகைகள் நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், ஜோதிகா, சாய் பல்லவி உள்ளிட்டோர் பல்வேறு பிரிவுகளில் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இசை, இயக்கம் என அனைத்துப் பிரிவுகளிலும் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாநில அரசின் இந்த விருது தேர்வுகள் குறித்து பெரும் விமர்சனங்கள் எழுந்துவருகிறது. பல நல்லப் படங்களுக்கு விருது வழங்கப்படாமல், அரசிற்கு ஆதரவளிப்போருக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளதாக கூறி வருகின்றனர்.

இயக்குநரும், நடிகருமான சேரனும் இந்த கருத்தை முன்வைத்துள்ளார். தனது எக்ஸ் தளப் பக்கத்தில் இதுதொடர்பாக பதிவிட்டுள்ள சேரன்,

"பெண்களுக்கு இலவச பஸ்.. வறுமையில் இருக்கும் குடும்பங்களுக்கு உதவித்தொகை.. திருமணத்திற்கு அரசு உதவி.. இதையெல்லாம் செய்யும் அரசு .. பெரும் பணம் இல்லாத குடும்பங்களில் கடன் படாமல் சிக்கனமாக எப்படி திருமணம் நடத்தப்பட வேண்டும்.. வாழ்க்கைக்கான சேமிப்பாக எப்படி அதை மாற்றலாம் என கருத்தோடு விளிம்புநிலை மக்களுக்கான படமாக உருவாக்கப்பட்டிருந்த "திருமணம்" திரைப்படம் தேர்வுகுழுவினரால் கண்டுகொள்ளப்படாமல் போனது அவர்களின் நுண்ணிய பார்வை அற்ற தன்மையை அல்லது தங்களை சார்ந்துள்ளவர்களுக்கு மட்டுமே விருது கொடுக்கும் தன்மையை காட்டுகிறது..

அரசிற்கு வரி கட்டி வாக்களித்து நாங்களும் இந்த சமூகத்தின் வாக்காளர்கள் என்ற உரிமையில் எனக்கு கேட்கும் உரிமை இருக்கிறது. இனி எவருக்கும் இதுபோல் நடக்க கூடாது.. நேர்மையான முறையில் பாரபட்சமின்றி யாரும் ஒதுக்கப்படாமல் விருதுகள் சென்றடைய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.. அரசுகள் மாறலாம்.. அரசின் நிலைப்பாடு என்றும் பாராபட்சமாக இருக்க கூடாது என்பதை வலியுறுத்துகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.



ப்ரேமம் படம் மூலமாக பிரபலம் ஆனவர் அனுபமா பரமேஸ்வரன். அதன் பிறகு தமிழ், தெலுங்கில் பல இளம் நடிகர்களுக்கு ஜோடியாக அவர் நடித்து வருகிறார்.

பிரதீப் ரங்கநாதனின் டிராகன், துருவ் விக்ரமின் பைசன் போன்ற படங்களில் அவர் சமீபத்தில் நடித்து தமிழ் சினிமா ரசிகர்களை கவர்ந்து இருந்தார்.

அனுபமா பரமேஸ்வரன் தற்போது சேலையில் அழகிய லுக் போட்டோஷுட் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.

# 'பராசக்தி' ஓ.டி.டி. ரிலீஸ் தேதி அறிவிப்பு!



சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ஜெயம் ரவி, அதர்வா, ஸ்ரீலீலா ஆகியோர் நடிப்பில், பொங்கலை முன்னிட்டு கடந்த ஜனவரியில் வெளியான படம் பராசக்தி. ஜி.வி. பிரகாஷ்குமார் இசையமைத்திருந்த இப்படத்தை டான் பிக்சர்ஸ் சார்பில் ஆகாஷ் பாஸ்கரன் தயாரித்திருந்தார். பேசில் ஜோசப், ராணா டக்குபதி, சேத்தன் போன்றோரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.

மொழி திணிப்பை அடிப்படையாக கொண்டு உருவான இப்படம் விமர்சனரீதியாகவும், வசூல்ரீதியாகவும் நல்ல வரவேற்பைப் பெற்றது. ரூ.100 கோடிக்கும் மேல் வசூலானது. இந்நிலையில் பராசக்தி படம் வரும் பிப்.7ஆம் தேதி ஜீ5 ஓ.டி.டி. தளத்தில் வெளியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆல்பம் பாடல் வெளியீடு




இயக்குனர் ஹனு ராகவபுடி இயக்கத்தில் துல்கர் சல்மான் கதாநாயகனாக நடித்த படம் 'சீதா ராமம்'. இப்படத்தில் துல்கர் சல்மானுக்கு ஜோடியாக மிருணாள் தாக்கூர் நடித்திருந்தார். மேலும், ராஷ்மிகா மந்தனா, முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

விஷால் சந்திரசேகர் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம் மொழிகளில் உருவான இப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வெற்றி பெற்றது.

இந்நிலையில், துல்கர் சல்மானும் மிருணாள் தாக்கூரும் இணைந்து புதிய ஆல்பம் பாடல் ஒன்றில் நடித்துள்ளனர். ஏ.ஆர். ரகுமான் இசையில் உருவான இப்பாடலை அவரது மகன் ஏ.ஆர். அமீன் பாடியுள்ளார்.

# கயாடு லோஹரின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு

டொவினோ தாமஸ் நடிப்பில் கடந்தாண்டு ஐடெண்டிட்டி மற்றும் நரிவேட்டை திரைப்படம் வெளியானது. இந்த இரண்டு திரைப்படமும் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

மேலும், கடந்தாண்டு வெளியாகி பட்டையை கிளப்பிய லோகா திரைப்படத்தில் சாத்தான் என்ற கதாப்பாத்திரத்தில் டொவினோ தாமஸ் நடித்திருந்தார் . லோகா 2 படத்தில் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடிக்க இருக்கிறார்.

தற்போது டிஜோ ஜோஷ் ஆண்டனி




இயக்கத்தில் 'பள்ளிச்சட்டம்பி' படத்தில் டொவினோ தாமஸ் நடித்து வருகிறார். இப்படத்தில் அவருக்கு ஜோடியாக கயாடு லோகர் நடிக்கிறார்.

இந்நிலையில், கயோடு லோகரின் பர்ஸ்ட் ஃலுக் போஸ்டரை பள்ளிச்சட்டம்பி படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படம் வரும் ஏப்ரல் 9ம் தேதி வெளியாகிறது.













**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**


உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971










**SATHLOKHAR**
SYNERGYS E&C GLOBAL LIMITED
Enduring Relationships
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company

We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.

Vacancies
Civil | PEB | MEP Engineers

Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed

Experience
only 0 to 3 years

Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529

Build your career with a company committed to construction engineering excellence.

**WANTED**

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

**ALP AEROFLEX INDIA PVT. LTD.**
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI


**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE





## சங்கமிக்க வேண்டும்

என்னை லேசாக்கிக்கொண்டு
காற்றோடு நான்
கரையவேண்டும்
அடர்வனத்து முள் நுனியில்
அமர வேண்டும்
மகரந்தப் பொடிகளோடு
கைகோத்து உல்லாசமாய்ப்
பறக்க வேண்டும் கூடு
திரும்பும் பறவையின்
சிறகில் பயணிக்க வேண்டும்
புல்லின் பனித்துளியில்
முகம் பார்த்து பறக்கும்
தும்பியோடு இணைய
வேண்டும் கொட்டும் அருவிச்
சாரலோடு மிதந்து
தென்றலைப் பிடிக்க
வேண்டும் தென்னைக்
கீற்றுகளில் அமர்ந்து
இயற்கையோடு இணைய
வேண்டும் புன்னைமர
நிழலோடு இணைந்து
இளைப்பாறும் எருதுகளின்
காயங்களுக்கு இதமான
ஒத்தடம் தர வேண்டும்
ஓயாமல் உழைக்கும்
வர்க்கத்தின்
மூச்சுக்குள் புகுந்து
வியர்வைத்துளிகளோடு
சங்கமிக்க வேண்டும்
இன்னும் எத்தனை
எத்தனையோ ஆசைகள்



என்னுள்
பொங்கி
வழிகின்றன
ஆனால்
மாசற்றச்
சூழலைத்
தேடித்தேடி
மூச்சற்று வீழ்கிறேன் !

**கா.ந.கல்யாணசுந்தரம்**



## அன்னை மடி!

வெண்பஞ்சு மெத்தையினும் மென்மை; மஞ்ஞை
விரிதோகை இறகினையும் வெல்லும் தன்மை
தண்முகிலை அடைத்துவைத்த தலைய ணையும்
தானுவமை இல்லையென நாணம் கொள்ளும்
கண்ணிமையின் நுனிமயிரும் பட்டுப் பூச்சி
கரம்வைத்த மெல்லுணர்வும் தோற்றுப் போகும்
மண்பூத்த மலரையெல்லாம் குவித்துச் செய்த
மடியெனினும் அன்னைமடிக் கீடாய் ஆமோ !

எத்தனைதான் வயதெனினும் முகம்பு தைத்தால்
எத்தகைய துயரினையும் ஓட வைக்கும்
சித்தத்தில் குழப்பங்கள் சேர்ந்து வாழ்வைச்
சிதறடிக்க நேர்ந்தபோதும் அமைதி நல்கும்
கொத்தாகத் தோல்விகள்தாம் சூழ்ந்த போதும்
கோலூன்றும் துணிவுதனை நெஞ்சில் சேர்க்கும்
தத்தளிக்கும் போதெல்லாம் தாங்கி நிற்கும்
தாய்மடிதான் நாம்பெற்ற காம தேனு!



பாட்டிமடி நீதிகளை ஊட்டி னாலும்
பாசத்தை அத்தைமடி கூட்டி னாலும்
வேட்கையினைத் தூண்டியின்ப ரகசி யத்தை
வேண்டுமட்டும் மனைவிமடி காட்டி னாலும்
ஊட்டுகின்ற பாலோடு தமிழை ஊட்டி
உள்ளத்தில் நேசிக்கும் அன்பை ஊட்டி
நாட்டிற்குள் நல்லவனாய் வாழ வைத்த
நற்றாயின் மடிக்கிங்கே ஈடு முண்டோ !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## வாழ்க்கைத்துணை !

வயது கூடிக் கொண்டே
போகிறதே.. என்ற
எண்ணத்தில் திருமண
பாக்கியம் விரைவில்
நிறைவேற வேண்டி..
அங்கப்பிரதட்ஷணம் ...
108 தேங்காய் உடைத்தல் !
மாங்கல்ய தடை நிவர்த்தி
பூஜை... என பல்வேறு
பூஜைகள் செய்து திருமணம்
கை கூடிய பின் ....

"கடவுளே ...எனக்கு
நிம்மதியை கொடு என !"



பல
கோவில்களிலும்
வேண்டுதல்களை
முறையிடும்
நிலைக்கு
தள்ளப்படுகிறார்கள்
முதல் வரியில் வேண்டுதல்
விடுத்தவர்கள் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

1. மனிதருக்கு கஷ்டம்
வந்தால் ஜோசியரை
மாற்றுகிறார்கள் அதன்
பின்னர் தெய்வத்தை
மாற்றுகிறார்கள்
வீட்டையும் மாற்றுகிறார்கள்
கடைசி வரை தன்னை
மாற்றிக்கொள்ள
மறுக்கிறார்கள்

2. உதாசீனம் செய்யப்படும்
இடங்களில் நீங்கள்
மட்டுமல்ல உங்கள் நிழல்
கூட நிற்கக் கடாது

3.உங்களுக்கு திருப்பி
உதவ முடியாத ஒருவருக்கு
உதவி செய்யுங்கள் நீங்கள்
வாழ்ந்து கொண்டிருப்பதை
உணர்வீர்கள்

4.மனம் சுத்தமாகவும்
நேர்மையாகவும் இருந்தால்
இறைவனை வழிபட வேறு
மந்திரங்களும் சடங்குகளோ
தேவை இல்லை

5.விழும்போது விதையாக
விழு எழும்போது மரமாக
எழு தோல்வி உன்னை
புதைக்கவில்லை
விதைத்து இருக்கிறது
என்பதை நினைவில் கொள்

6.எது வேண்டும் என்று



முடிவு
செய்யாதே
எது
வேண்டாம்
என்று முடிவு
செய் அதுதான்
நிம்மதியை
தரும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## வருகிற இலையுதிர் காலம்

தை மாதம் போகுதடி
தங்கமே தங்கம் மாசி
பிறக்குதடி தங்கமே
தங்கம் வேகமாக வெயில்
அடிக்கு தடி கண்ணம்மா
பொன்னம்மா

மாசி பிறந்தாக்க தங்கமே
தங்கம் மரத்தின் இலைகள்
எல்லாம் தங்கமே தங்கம்
மஞ்சள் நிறமாக மாறுமடி
பழுத்து விழுகுமடி

இதை தான் இலையுதர்
காலம் என்றுஎன்னவர்கள்
சொல்வார்கள் பனி காலமும்
பறக்கும் புது தளிருடன்
மரங்கள் துளிர் விடும்

பழைய ஆடைகளை
களைந்து இளம்பச்சை
பட்டாடை உடுத்தி
கண்ணுக்கும் கருத்துக்கும்
இளவெனிலான்
வருகைக்காக

அரும்பாகி மொட்டாகி
முறுக்கு அவிழ்ந்து மலர்ந்து
மணம் வீசும் வண்டினங்கள்
தேன் உறிஞ்சும் பலவகை
இசை பாடும் பாடும்

வசந்த காலம் வந்து சேரும்
கண்ணுக்கும் கருத்துக்கும்
விருந்தாக்கும்தாவரங்கள்
இளம் தென்றல் காற்று வீசி
அடிக்கும்

நாம் பார்த்த பக்கம்
எல்லாம் பசுமையோ பசுமை
கண்ணுக்கு நல்விருந்து
தென்றல் காற்று உடலுக்கு
இதமாக இருக்கும்

மாப்பிள்ளை வீட்டார் பெண்
பார்க்க வரும் காலம் போல
சீவி சிங்காரித்து அலங்காரம்
செய்து பட்டாடை உடுத்தி
நிற்கிற பெண் போல

வசந்த காலம் வருகிறது
வசந்த காலம் வருகிறது



சொல்லாமல்
சொல்லி
நம்மை நினைப்
பூட்டுகின்றாள்
இயற்கை
அன்னை

**பேராசிரியர்**
**முனைவர் வேலாயுதம்**
**பெரியசாமி** சேலம்

## தியாக திருநாள்

" தியாகிகள் என்றும்
மனிதர்கள் ஆராதிக்க
வேண்டிய புனித
ஆத்மாக்கள் ....."

சுயநலம் நீக்கி பொதுநலம்
தேடிய நாட்டை நேசித்த
உண்மை வாசிகள் .... "

பல கோடி பேர் சுதந்திர
காற்றை சுவாசிக்க தன்
சுவாசத்தை நிறுத்திய
புனிதர்கள் ....."

இன்றும் பல தியாகிகள்
நடமாடும் தெய்வங்களாக
திகழ்கிறார்கள் ..."

குருதியை துச்சமென
கருதி உயிரைக்
கூட பெரிதாய்
கருதாத உத்தமர்கள் .... "

உடல் பொருள் ஆவி எல்லாம்
தாய் திருநாட்டிற்கு தான்
என்று இருந்தவர்கள் .... "

ஏழை பணக்காரன்
சாதி மதம் இனம் என
பாகுபாடு பார்க்காமல்
நாடு தான் எல்லாம் என்று
கிடந்தவர்கள் ..."

தாயின் மணிக்கொடி
காக்க தலையை
கொடுத்த தியாகிகள்..."



நாளைய
தலைமுறை
சிந்திக்க
இன்றைய
தலைமுறை
வழிகாட்ட
தியாகிகள்
தியாகத்தை
போற்றுவோம் ..."

**ஆர். சீதாராமன்,** சீர்காழி



## நெய்தல் நாடனே.. நீடு வாழி.!

பொங்கு கடல்.. சங்கு
முத்து.. பரவி நின்ற நாடு

எங்கும் தமிழ் நெய்தல் நாடு
நீடு வாழப் பாடு!

மீன்கள் துள்ளி மேவி யாடும்
கரையில் சிந்துப் பாடு!

மீனவர்கள் வாழ்வு நிலை
உணர்ந்து கவியாடு!

பரதவர்கள் வலை விரித்து
கெண்டை மீன்கள் பிடிப்பர்!

பாவையர்கள் கரையிருந்து
பொங்கல் வைத்து
அழைப்பர்!

இரவுப்பகல் கடல்மாதா
காத்து நின்று அருள்வாள்!

இன்று யோய் நாளை வந்து
இனிய வாழ்க்கை வாழ்வர்!

வலைநிறைய கயல்கள்
துள்ளி மகிழ்ந்து
விளையாடும்!

கலை வளர படகுதுறையில்
கைகள் கொட்டி இசைப்பர்!

கச்சத் தீவு கரையில்
ஒதுங்கும் மீன்களென
ஆனோம்..

காளையர்கள் படகு ஏறி
மீன் பிடிப்பார் பாரும்..

வீரம் எங்கே.? விடியல்
எங்கே? தேடும் எங்கள்
வாழ்வே..

நெய்தல் நிலம தமிழர் இனம்
யாதும் எமது ஊரே..

ஒற்றுமையாய் கடலாடி



திரைக்
கடலைக்
கடந்து

வெற்றி மாலை
சூடும் நாளை
நெய்தல் நாடே
வாழி!

**வே.கல்யாண்குமார்.**

எம பயம் விலக, ம்ருத்யு
தோஷம் விலக அருள் புரியும்
பதிகம்

எம பயம் விலக, ம்ருத்யு
தோஷம் விலக அருள் புரியும்
பதிகம்.

அவரவர் பிறந்த
தினங்களிலும், திருமண
ஆண்டு நிறைவு நாட்களிலும்,
குறிப்பாக 60, 80 ஆண்டு
வயது நிறைவு நாட்களிலும்
இப்பதிகத்தை ஓதி உரிய
தான தர்மங்கள் அளித்து
வந்தால் அகால மரணம்
ஒருக்காலும் அண்டாது
தற்காத்துக் கொள்ளலாம்.
நீண்ட ஆயுள் கிட்டும்

பதிகம்

துஞ்சலும் துஞ்சல் இலாத
போழ்தினும் நெஞ்சக நைந்து
நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த
கூற்று அஞ்ச உதைத்தன
அஞ்செழுத்துமே.

மந்திர நான்மறையாகி
வானவர் சிந்தையுள் நின்றவர்
தம்மை ஆள்வன செந்தழல்
ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம்
அஞ்செழுத்துமே.

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி
ஒண்சுடர் ஞான விளக்கினை
ஏற்றி நன்புலத்து ஏனை
வழிதிறந்து ஏத்துவார்க் கிடர்
ஆன கெடுப்பன
அஞ்செழுத்துமே.

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவ முத்தி
காட்டுவ கொல்ல நமன்தமர்
கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன
அஞ்செழுத்துமே.

கொங்கலர் மன்மதன் வாளி
ஐந்தகத்து அங்குள பூதமும்
அஞ்ச வைம்பொழில்
தங்கரவின் படம் அஞ்சும்
தம்முடை அங்கையில் ஐவிரல்
அஞ்செழுத்துமே.

தும்மல் இருமல் தொடர்ந்த
போழ்தினும் வெம்மை நரகம்
விளைந்த போழ்தினும்
இம்மைவினை அடர்த்
தெய்தும் போழ்தினும்
அம்மையிலுந் துணை
அஞ்செழுத்துமே.

வீடு பிறப்பை யறுத்து
மெச்சினர் பீடை கெடுப்பன
பின்னை நாள்தொறு
மாடு கொடுப்பன மன்னு
மாநடம் ஆடி உகப்பன
அஞ்செழுத்துமே.

வண்டமரோதி மடந்தை
பேணின பண்டை இராவணன்
பாடி உய்ந்தன தொண்டர்கள்
கொண்டு துதித்த
பின்னவர்க்கு அண்டம்
அளிப்பன அஞ்செழுத்துமே.

கார்வணன் நான்முகன்
காணுதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி
நாள்தொறும் பேர்வணம்
பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன
அஞ்செழுத்துமே.

புத்தர் சமண் கழுக்கையர்
பொய்கொளாச்சித்தத்தவர்கள்
தெளிந்துதேறின
வித்தக நீறணிவார்
வினைப்பகைக்கு
அத்திரம் ஆவன
அஞ்செழுத்துமே.

நற்றமிழ் ஞான சம்பந்தன்
நான்மறை கற்றவன்
காழியர் மன்னன்
உன்னிய அற்றமில் மாலை
ஈரைந்தும்அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர்
ஆவரே.

திருச்சிற்றம்பலம்..
சிவாய நம நன்றிங்க ஐயா..

**தகவல்:**
**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## "கவனம் சிதறாதே"

கைப்பேசித் திரையில்
சுடரும் ஒளி
சிந்தனையின் விளக்கை
அணைக்கின்றது!

விரல் ஓடும் வேகத்தில்
நேரம் நழுவி விழுகிறது
விழிகளைத் தாண்டி
வாழ்க்கை எங்கோ
போகின்றது!

நிமிடங்கள் சிரிப்பாய் உருகி...
மணிகள் மாயமாய் கரைந்து...
நாட்கள் பொய்மைக் குகையில்
நாசச் சிலந்திகளுடன்
நர்த்தனம் புரிகின்றன!

அறிவின் கடல்
அருகிலிருந்தும்
அலைகளின்
சத்தத்தில்
ஆழம் காண
மறக்கிறோம்!
மேற்பரப்பின்



மின்னலே
உண்மை என்று நம்புகிறோம்!
இளமை என்பது
படைக்க வேண்டிய காலம்?
தேட வேண்டிய பாதை!
ஆனால்... அருவருப்புச்
சங்கிலியில்
கைதியாகிப் போனது!

கவனம் சிதறாதே..
திரையை விட்டுவிட்டு
திறனை வளர்த்திடு!

'லைக்'குகளை எண்ணாமல்
இலக்குகளை எண்ணு!

இணையம் ஒரு கருவி
கடிவாளமல்ல. நீ அதைப் பிடி
அது உன்னைப் பிடிக்க
விடாதே!

கவனம் சிதறாதே...
உன் நேரமே
உன் எதிர்காலம்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## குடும்பம் எனும் குதூகலம்

பேரன்பின் பூந்தோட்டம் உறவுகளின் கொண்டாட்டம்
பண்புகளை வளர்த்தெடுப்பதில் அர்த்தமுள்ள முன்னோட்டம்
வாழ்வை அணுகுவதற்கு போட்டுத்தரும் வெள்ளோட்டம்
குடும்பமெனும் குருவிக்கூடு குதூகலித்து அதைப்பாடு !

தொப்புள்கொடி பந்தம் அம்மாவெனும் சொந்தம்
தனக்கெனவே வாழாமல் நமக்கெனவே வாழும் அந்தம்
தியாகத்தின் உச்சம் தெய்வம் கூட மெச்சும்
குடும்பமெனும் தேன்கூடு கலைக்காமலிருப்போம் தெளிவோடு !

மூவெழுத்துச் சகாப்தமாய்க் கண்முன்னே நடமாடும்
வியர்வைக்கான வேர் கரடுமுரடே ஆனாலும் அப்பாவைக்
கடவுளாய்ப் பார் தனக்கென வாழாத ஞானி அழத்தெரியாத
மேகம் குடும்பமெனும் கதம்பம் ஆனந்தம் ததும்பும் !

வாழ்வின் வழிகாட்டிகளாய் பட்டறிவின் திசைகாட்டிகளாய்
பாட்டிகளும் தாத்தாக்களும் எந்நாளும் விதைகளாய்
உறவுகள் ஆகுமே உயிரோட்டத்தின் வரவுகளாய்
குடும்பமென்றும் ஆதாரமே செய்யாமலிருப்போம் சேதாரமே !

இரத்தத்தின் உறவுகளாய் சகோதர சகோதரிகள்
வசந்தத்தின் வரவாய் வாழ்க்கைத் துணைவி
ஊக்கத்தின் ஏணிகள் வாழ்வின் கரைசேர்க்கும் தோணிகள்
குடும்பமென்றும் ஆலமரம் விழுதுகளானால் நல்லவரம் !




நமக்கான நீட்சியே குழந்தைகளெனும் மாட்சியே
குடும்பத்தை ஆனந்தத்தால் நிறைக்கும் சாட்சியே
பணம்தேடி ஓடினாலும் குணம்நாடி வாழவேண்டும்
குடும்பமென்றும் கோவிலாகும் போற்றிநின்றால் !

**கவிஞர் மு.வா.பாலாஜி, ஓசூர்.**

# நூல் விமர்சனம்

கவிச்சுவை!
நூல் ஆசிரியர் :
கவிஞர் இரா. இரவி,
மதிப்புரை : எழுத்து வேந்தர்
இந்திரா சௌந்தர்ராஜன்,
93, வைகை வீதி, சத்யசாய்
நகர், மதுரை–625 003.
பக்கம் 186.விலை ரூபாய் 120.
வெளியீடு : வானதி பதிப்பகம்,
23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர்,
சென்னை–600 017.
தொலைபேசி : 044 24342810,
24310769
மின்னஞ்சல் :
vanathipathippakam @gmail.com




நாடறிந்த நல்ல கவிஞர்களில் ஒருவர் திரு. இரா.இரவி அவர்கள். தமிழக அரசின் சுற்றுலாத் துறையில் பணியாற்றிவரும் இரவி, சுற்றுலா தரும் இன்பங்களை எல்லாம் தன் கவிதைகளில் அளிக்கவல்லவராய் இருக்கிறார்.

உதவி என்று கேட்ட மாத்திரத்தில், ஓடோடி வந்து இன்முகத்துடன் உதவிடும் இரவியின் பாத்திரப் பண்பை இவர் கவிதைகளிலும் காணமுடிகிறது.

வார்த்தைகளை மடக்கிப் போட்டு கவிதை எழுதுவோர், மத்தியிலே வாழ்க்கையை ஊடுருவிப் பார்த்து கவிதை எழுதுபவராக திரு. இரவி திகழ்வது பாராட்டுக்குரியது.

கவிச்சுவை எனும் நூலின்கண் 78 கவிதைகள் காணக் கிடைக்கின்றன. இதில் முதல் கவிதை 'காந்திக்கு ஒரு கடிதம்' எனும் தலைப்பில் ஆரம்பமாகின்றது. திரும்ப காந்தி பிறந்து வந்துவிடக்கூடாது எனும் கருத்தை வலியுறுத்தும் அவரின் ஏனைய கருத்துகள் எவராலும் மறுக்க முடியாதவை.

மொழிப்பற்றுடைய திரு. இரவி,

'தமிங்கிலம் என்பது ஒருவகை நோய் தமிழகத்தில் விரைவாய்ப் பரவி வருகின்றது!' என்று ஆங்கிலக்கலப்போடு பேசுவதை நைச்சியமாய் இடித்துரைக்கிறார். அதேபோல் பெண்கல்வி குறித்தும் வளமான சிந்தனைகளை தன் கவிதை வரிகளில் கொட்டி முழக்குகிறார். 'நெல்மணிகளிட்டு கொலை செய்வதை நிறுத்துங்கள் மாமணிகளாய் பெண்களை மதித்து வளர்த்திடுங்கள் எனும் வரிகள் அதற்கு சாட்சி.

'விழி ஈர்ப்பு விசை'" எனும் தலைப்பில் காணப்படும் காதல் கவிதைகள் கவிஞரின் ரசனை மிகுந்த மனதை நமக்கு காட்டுகிறது. இதனால் விஞ்ஞானிகளுக்கு வேண்டுகோள் வைக்கிறார். 'விழிகளில் மின்சாரம் உள்ளது' அதை வெளியில் எடுங்கள்' என்கிறார். இந்த காதலை 'மலரினும் மெல்லியது' என்கிறார். அப்படியே முரண்பட்டு 'மலையினும் வலியது' என்கிறார். இரு கருத்தையும் மறுக்க நம்மாலும் முடியவில்லை.

சமூகப் பார்வையோடு கந்துவட்டிக் கொடுமையைச் சாடி, காவிரிப் பிரச்சினையையும் நாடி, விவசாயிகளின் துன்பத்தையும் பேசி இரவியின் கவிதைகள் பன்முகங்களில் நர்த்தனமாடுகின்றன.

அவ்வளவும் எளிய தமிழ்சொற்களில் அமைந்த கவிதைகள்! மொத்தத்தில் இந்த கவிச்சுவை ஒரு நல்ல கனியின் சுவை!

திரு. இரவிக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்!






## உலகாளும் உழவர்கள்

சந்தேகமின்றி உலகை
ஆள்பவர்கள் உழவர்களே

எண்சாண் உடலில்
ஒருசாண் வயிரே பிரதானம்

உயிர் வளர்க்க வயிறு
வளர்ப்போம்
உழவு மட்டுமே உணவு தரும்

சிறந்த விவசாயம் நல்ல
விளைச்சல்

தேவைக்கேற்ற மழை
மட்டும் போதாது

உழவர்கள் உழைப்பின்
உச்சம் தொட்டபின்

கிடைப்பது வயிறார
உணவும் தெம்பும்

விவசாயம் காப்போம்
விளைச்சல் காண்போம்

பிறதொழில்கள் பேணி
உலகை வெல்வோம்



தொழில் நுட்பம்
கொண்டு முயற்சித்து

பஞ்சமில்லா பார்தனில்
வாழ்ந்து பார்ப்போம்

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்



## "அவன் ஏன் திருடினான்?"

வயிற்றுப் பசிக்காய்
கையை நீட்டினான் ...
அது திருட்டா?
இல்லையே....

அது தன்னுயிர்
காக்கும் முயற்சியன்றோ?

வயிறு கத்தும் போது
நியாயம் மௌனமாகிறது,
சட்டம் மட்டும் ஏன்
உரக்கப் பேசுகிறது?

சாப்பாடு மறுத்த
சமூகம் அவனைத்
திருடனாக்கியது?
பசிக்கு உணவிடா
அமைப்புதானே இங்கே
உண்மைக் குற்றவாளி!



ஒரு பிடி சோறு
கொடுத்திருந்தால்
ஒரு குற்றம்
பிறந்திருக்காதன்றோ?

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

உலகில் ஒரு மனிதன்
எவ்வளவு தான் பணம்
புகழ் மற்றும் பதவிகளை
பெற்றிருந்தாலும்!

அவை அனைத்தும்
அனுபவிக்க உடல்
ஆரோக்கியம் அவசியம்!

சுவர் இருந்தால்தான் சித்திரம்
வரைய முடியும் என்பதற்கு
ஏற்ப ஆரோக்கியமான உடல்
இருந்தால் மட்டுமே வாழ்வில்
வெற்றி பெற முடியும்!

ஆரோக்கியமே அடிப்படை
செல்வம் !
செல்வம் அழிந்தால் மீண்டும்
சம்பாதித்து விடலாம் !

ஆரோக்கியம் சீர்குலைந்தால்
அதை மீட்பது கடினம்!

நீர் சத்து தினமும் போதுமான
அளவு தண்ணீர் குடிப்பது
நச்சுக்களை வெளியேற்ற
உதவும்!

அதிகப்படியான சர்க்கரை
உப்பு மற்றும் துரித
உணவுகளைத்தவிருங்கள் !

தன் சுத்தம் மற்றும் சுற்றுப்புற
தூய்மையை பராமரிக்க
வேண்டும்!

தவறான உணவு முறை
இருக்கக் கூடாது !

போதிய உடற்பயிற்சி
இல்லாததாலும் பல
நோய்கள் ஏற்படுகிறது!

நோய் வந்த பிறகு
மருந்து தேடுவதை
விட வருமுன் காப்பதே
சிறந்தது !

தீய பழக்கங்களை தவிர்த்தல்
நல்வாழ்வு நெறிகளைக்
கடைபிடிக்க வேண்டும்!

மனித ஈட்டும் செல்வங்களில்
முதன்மையானது அவனது
உடல் ஆரோக்கியம்!

உணவே மருந்து ரசாயனம்
கலந்த உணவுகளைக்
தவிர்ப்பது அவசியம்,!

ஓடி ஆடி விளையாடு பாப்பா
என்ற பாரதியின் வாக்குப்படி
அன்றாட உடல் உழைப்பு
அல்லது உடற்பயிற்சி உடல்
நலம் என்பது மனநலத்துடன்
தொடர்புடையது!

சுத்தமான வாழ்வியல்
முறைகளை கடைபிடிக்க
வேண்டும்!

தேவையற்ற கவலைகளைத்
துறந்து வாழ்ந்தால் நோயற்ற
வாழ்வு!

ஆரோக்கியம்
இல்லையென்றால்
கோடிக்கணக்கான பணம்
இருந்தாலும் ஒரு துளி
சக்கரையை கூட உண்ண
முடியாது !

உடல் நலம் குன்றி இருந்தால்
மனமும் சோர்வடையும் !

நோயாளியாய் இருக்கும்
ஒரு கோடீஸ்வரரை
விட ஆரோக்கியமாக
இருக்கும் ஒரு ஏழை அதிக
மகிழ்ச்சியானவன் !

மருத்துவமனை வாசம்
இல்லாத வாழ்வே
நிம்மதியானது!



உடல் இருக்கும் அதோ

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## "நேரத்தை வீணாக்காதே"

நேற்று சென்ற நேரம்
என்றும் திரும்பி வாராது!

நாளை வரும் நேரம்
உத்தரவாதமில்லா. சாரம்!

கையில் இருப்பது
இந்த நொடி மட்டும்!

சோம்பலில் அதைச்
சாய்த்து விடாதே!

கனவுகள் கண்ணில்
இருக்கும் வரை...

உழைப்பு கையில்
இருக்கட்டும்!

வாய்ப்புகள் கதவைத்
தட்டும் முன்

தயாராக நீ யும்
நின்றிருப்பாய்!

மொபைல் திரையில்
சறுக்கும் விரல்கள்

வாழ்க்கை வழிக்கு
வந்து சேரும் தடைகள்!

நிமிடங்கள் ஓடிக்
கொண்டே இருக்க

நின்று விடாதே நீ
இன்று விதைத்த உழைப்பு

நாளை நிழலாய்
நின்று காக்கும்!

நேரத்தை மதித்தவன்
வாழ்க்கை வெல்லுவான்!

காலத்தை இழந்தவன்
கவலையின் சந்தாதாரன்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## "நிராகரிக்கப்பட்ட நான்"

பொன்னால் அளந்தீர்
பெண்ணின் பெருமையை....
நெஞ்சால் அளக்கும்
நெறி உமக்கில்லையோ?

தங்கமும் வைரமும்
என்னிடம் இல்லை,
பொறுமையில் வாழும்
மாண்பு இருக்குதே!

தாலி கேட்டீர் நீர்
தவம் கேட்டேன் நான்!
பவுன் பார்த்தீர் நீர்
பண்பு காட்டினேன் நான்!

அன்னையின் கண்ணீர்
அகம் கரைத்தது!
தந்தையின் இயலாமை
இதயத்தை நொறுக்கியது!

நான் சுமந்த கனவுகள்
நகைப் பெட்டிக்குள் மரணம்!
நீங்கள் சுமந்த
பொன்னாசைகள்
சவப்பெட்டிக்குள் ஜனனம்!

பெண் என்பவள் குறையல்ல
பொன் தேடும்
பார்வைகளே கறை!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## ஹைக்கூ

குலுக்கல் நடனம் தோற்றது–
வண்டி குலுங்கிய
குலுக்கலில்!!

யாரும் திரும்பி பார்க்காது–
அவளின் அழகிய முகத்தில்

முழுவதும் பருக்கள்!!!

முழு ஞாயிறு என்ன
செய்யும் – வீட்டு வேலை
அனைத்தையும்
செய்ய வைக்கும்!!!

இலக்கிய வகுப்பில் –
ஆங்கிலம் வரக்கூடாது –என
ஆசிரியர் கூற– மாணாக்கர்
உடனே" எஸ் ஸார்"
என்றனர்!!!

என்னவன் கொடுத்ததை
விட– என் காதோர



ஜிமிக்கி கள்
அதிகமாக
தருகிறது–
முத்தத்தை!!!

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி

உன்னை நினைத்தேன்
உறவுகளை மறந்தேன்

நீ சொல்லித்தானே
நண்பர்களையும் மறந்தேன்
எல்லோரையும்
மறக்க வைத்தாய்....!!!

உன்னை மட்டும்
நினைக்க வைத்தாய்....
என்னையே
மறக்கவைத்தாய்

இப்போ உன்னையே
மறக்க சொல்லுகிறாயே
நான் எங்கே போவேன்..?
காதல் இல்லாமல் இருக்க
முடியாது உயிரே ...!!!

இத்தனையும் சொன்ன நீ
என்னை இறக்க சொல்
உயிரே அதையும்
செய்கிறேன் ...!!!
உனக்காக நம்
காதலுக்காக...!!

-------------------

## மனம்

மனம் ஒரு நாய்க்குட்டி
தான் போல.. யாரேனும்
கூடுதலாய் அன்பு
செய்துவிட்டால்,
அவர்கள் காலடியிலே
விழுந்து கிடக்க ஆசை
படுகிறது விரட்டியடித்த
பின்பும்..!

-------------------

கேட்காமலே கிடைத்தது
எல்லாம் உன்னிடம்

குறையே இல்லை எனும்
அளவுக்கு

மகிழ்ச்சி வெள்ளத்தில்
என்னை மிதக்கவைத்தது
போதும் என்று நினைத்தாயோ

முற்றுப்புள்ளி வைத்து
முடிவுரை எழுதிவிட்டாய்

சோகத்தில் நான்
இப்பொழுது

நீதான் தந்தாய் இதையும்
குறைவின்றி

-------------------


## பள்ளங்கள்

சில கிராமப்புற
பயணங்களின் போது
பள்ளங்களுக்குள்
சாலையை தேடும்
என் முயற்சியில்



பெரும்பாலும்
என்னை
தோற்கடித்து
விடுகின்றன
பள்ளங்கள் !

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்



## பச்சை வண்ணப்பூவே

பூமியில் படர்ந்த
பசுமைப் போர்த்திய
பச்சைப் பூவாக புல்லும்...

மரஞ்செடி, கொடிகளில்
துளிர்த்து நிற்கும்
பசுமை இலைகளும்...

மண்ணோடு கலந்த
வேர்களின் வழியே
துடிக்கும் வாழ்வோடு
மௌனம் பேசும் உயிர்...

வெப்பத்தால் வாடினாலும்
மழையின் துளியில்
மலரும் நம்பிக்கை,

உதிர்ந்தாலும் சோர்வின்றி
மீண்டும் முளைக்கும்
உள்ளத்தின் உறுதி...

துவண்டு சாய்ந்த மனதுக்கு
நிம்மதி சுவாசம் தரும்
மலர்ந்த பச்சைப் பூக்களாக
இலைகளும்... புல்லும்...

“வாழ்வு” என்ற சொல்லுக்கு



வண்ணம்
கொடுக்கும்
மௌனக்
கவிதை
அவையே...

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## இலையும்.. மனிதனும்!

பச்சைப் பசும் தளிராய்ப்
பிறந்தே.. பார்க்கும் விழி
மயங்க மகிழ்ந்தே.. காற்றில்
அசைந்தாடி வளர்ந்தே..
நேற்று இலையாக
இருந்தேன்.!

தாயின் கருவறையில்
பிறந்தே.. தரையில்
விளையாடி மகிழ்ந்தே. ஊரார்
கண் பார்க்க வளர்ந்தே...
உலகில் வாலிப னாக
இருந்தேன்.!

பச்சைக் கிளிகள் வந்து
அமரும்.. பழுத்த கனித்
தாங்கி அசையும்!
பச்சைநிறம் மாறத்துவங்கும்..
பருவம் மாற இது நிகழும்.!

இச்சைக் கொண்ட இளம்
பருவம்.. இவனின் மேனி
இங்கு மிளிரும்.. தச்சன்
இழைத்த மரம் போலும்..
மெலிரும்.. நடை தளந்து
போகும்..!

பழுத்த இலை ஒன்று
உதிரும்.. காற்றில் மிதந்து
தரை விழுந்தும்..
விதைத்த வினை தானே
நடக்கும்.. முதிர்ந்து உயிர்
தானே பறக்கும்.!

இலைகள் போல் மனித்த
வாழ்வு.. இரண்டில் ஏது
உயர்வுத் தாழ்வு ? பழுத்து
விழுகின்ற வரைக்கும்..
பலனைத் தந்து வாழ்வு
சிறக்கும்.!

**வே.கல்யாண்குமார்.**

## அறம் பொருள் இன்பம் அருட்பெரும் ஜோதி.!

குறட்பாவில் உலகாண்ட
ஒருவன்.! அருட்பாவில்
அரசாண்ட இன்னொருவன்.!
இரண்டுவரிப் போதுமென்று
இவன் நினைத்தான்!
இருட்டினிலே தண்ணீரில்
அவன் விளக்கெரித்தான்!

கொல்லாமை
வேண்டுமென்று குறள்
கொடுத்தான்!
கொடுவாளைத் தூக்கிஎறி..
துடிதுடித்தான்!
எல்லோர்க்கும்
பொதுமறையை
அவனளித்தான்!
எளியவரின் பசி
நினைத்தே அணையாத
அடுப்பெரித்தான்.!

ஓடியதோர் காலம் கண்டு
அவன் இதயம் பாடியது!
வாடியதோர் பயிர்கண்டே
இவன் முகமோ வாடியது!

நீட்டலும் மழித்தலும் இன்றி
நீடுவாழ குறள் படித்தான்!
வீடுபேறு என்பதென்ன
சன்மார்க்கம் என்றதொரு
நெறி வகுத்தான்.!

பாருலகே.. பார்என்று
அழைத்தது ஓர்திருக்குறளே!
பண்பாட்டில்
தெய்வீகத் தேன்கலந்த
திருவருட்பாவே.!

தமிழ் நிலத்தில் மெய்ஞான
விதை விதைத்த
உழவர்களை..
பயிர் வளர்த்துப் பசிதீர்க்கப்
பாடுபட்ட புனிதர்களை..
துயில் களைய தூய ஒளி
ஏற்றிவைத்த மேதைகளை..
அயர்வின்றி நினைத்தப்படி
அவர்கள் வழி நடப்போமா..!

**வே.கல்யாணகுமார்.**

## தைப் பூசம்...

குமரா... உம் அருளுண்டு...
குறையில்லை...
வேலவா... உம் வேலுண்டு...
வாழ்வின் வேரறுக்க...

குகனே... உம் அகம் கண்டு..
மலருது.. எம் உலகம்..
குன்றின் மேல் அமர்ந்த..
குமரா... வறுமை
வென்றெடுக்க... அருள்
புரிவாய்...அமரா...

அழகிய தெய்வம் நீயே...
மனதின் அழுக்குகள்
வெளுப்பாய்..
சஞ்சலம் தீர்த்து...
மங்கலம் அருள்வாய்...
செந்தூர் முருகா...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## உயர பறக்கும் பறவைகள்

யப்பாவ் !
என்னம்மா செல்வி எழுந்து மணியை பார்த்தான் கதிர் மணி எட்டாகி விட்டது. அப்பா நான் மேலேல்லாம் ஏறி வித்தை காட்ட மாட்டேன். நான் ஸ்கூலுக்கு போறேன் என் வயசு பசங்கல்லாம் ஸ்கூலுக்கு போறாங்க ஸ்கூல்லே கார்த்தால சத்துணவு தராங்களாம் முட்டை கூட போறாங்களாம்.
நாம வித்தை காட்டி பிழைப்பு நடத்தற குடும்பம்மா நமக்கு படிப்புல்லாம் சரிப்பட்டு வராதும்மா. யார் பேச்சையும் கேட்காதே. அப்பா சொல்றதை கேட்டு நட. அடி வாங்கி சாகாதே புரியறதா? உங்க அண்ணன் எனக்கு எதிரா எதாவது பேசறானா?செல்வி அங்கே உள்ள சின்ன கண்ணாடியில் தன்னை பார்த்துக் கொண்டது.எண்ணெய் தொட்டு வாரப்படாத தலை. எப்ப பாரு டீ வாங்கி கொடுக்கும் அப்பா. மதியம் 3 மணி வந்து விட்டால் கிழிசல் சட்டையை போடு புள்ளை அப்ப தான் ஜனங்க அஞ்சு பத்து கூட போடுவாங்க. சின்ன வயசில்லயிருந்து இந்த வித்தையை கத்து கொடுத்து தங்களை சம்பாதிக்க வைத்து அந்த காசில் குடித்து குப்புற தூங்கும் அப்பா. மூங்கில் குச்சியில் உசரே ஏறி வித்தைகளை காட்டும் போது அப்பா நசுங்கிய அலுமினிய தட்டில் சில்லறைகளை சத்தம் போட்டு பிச்சை கேட்கும். வித்தைகளை பார்த்து முடித்ததும் வித்தை காட்டும் பக்கத்தில் ஒரு ஸ்கூல் இருந்தது. அங்கு வாத்தியாராக வேலை பார்க்கும் ராமு ஸார் தான் உன் பிள்ளையை ஸ்கூல்ல சேருப்பா நீ உழைச்சு சாப்பிடு புள்ளைங்களோட எதிர்காலத்தை வீணாக்காதே சொல்லலும் போதுல்லாம் அப்பா காதிலே வாங்கி கொள்ளாது. குடித்து விட்டு அம்மாவை அடித்ததால் அப்பாவிடம் சொல்லாமல் அம்மாவும் எங்கேயோ போய்விட்டது.
செல்வி வானத்தில் உயர இடத்தில் நின்று வித்தைசெய்தாலும் கீழே சில்லறை காசுகள் விழுமா என்று தான் பார்க்கும். செல்விக்கு ஓரளவு விவரம் தெரிய ஆரம்பித்துவிட்டது. இன்று அப்பாவிடம் சொல்லாமல் வாத்தியார் கையை பிடித்துக்கொண்டு ஸ்கூலுக்கு கிளம்பிவிட்டது.
வானத்தில் பறந்தது பறவையாக!

**ஜயந்தி சிவக்குமார்.** திருச்சி.

## ஆடும் வரையில்...!

அறுசீர் மண்டிலம்.

ஆடும் வரையில் ஆடட்டும்
அடங்கிப் போகும் ஓர்நாளில்
ஓடும் வரையில் ஓடட்டும்
ஒடுங்கிப் போகும் ஓர்நாளில்!
பாடும் வரையில் பாடட்டும்
பதுங்கிப் போகும் ஓர்நாளில்
தேடும் வரையில் தேடட்டும்
தெரிந்தே போகும் ஓர்நாளில்!

கூடும் வரையில் கூடட்டும்
குமைந்து போகும் ஓர்நாளில்
சாடும் வரையில் சாடட்டும்
சரிந்து போகும் ஓர்நாளில்!
நாடும் வரையில் நாடட்டும்
நலிந்து போகும் ஓர்நாளில்
வாடும் வரையில் வாடட்டும்
வாடிப் போகும் ஓர்நாளில்!

--------------------



## கடலோரக் காவல்படை!

நேரிசை வெண்பா!

கடலெல்லைப்பாதுகாப்பு
கடத்தல் தடுப்பு

கடலிலே சிக்கியோரைக்
காத்தல்.... கடல்சார்

பொருளியல் நாளும்
பொலிவுடன் காத்தல்

விரும்பியே செய்திடும் வீறு!

கடலோரக்காவல்
கனிவாகச்செய்தல்


கடல்மீன் பிடிக்கப்பல்
காத்தல்... கடமை

தவறாமல் தொண்டாற்றல்
தக்கநல்உள்ளில்

உவகையோடு செய்தல்
உணர்!

## தமிழ்நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனார்!

நாடகத் தந்தை
நலமுறு சம்பந்தர்
ஆடகப் பொன்னாய்
அளித்தாரே..நாடகங்கள்



நீதியரசர் நாடக
நடிகராக நேர்ந்தவர்
ஓதிடு நற்புகழை ஓது!

சுகுண விலாசசபா
சோர்வின்றித் தோற்றம்
தகுந்த முறையிலே
தந்தார்..வகையாக
சம்பந்தர் நல்லமுறை
சந்தன மாகவே
இம்மைப் பிறப்பில் இனிது!



## வள்ளலார் பாதையில் வாழ்!

நேரிசை வெண்பா!

கடவுள் ஒருவரே
கண்டாரே வள்ளல்!
திடவுள்ளத்தாலேதான்
தேர்ந்தே... இடுக்கண்ணே
தெள்ளிதின் தீரதிருவருட்பா
தந்திட்ட வள்ளலார்
பாதையில் வாழ்!

பசித்திரு என்றும்
தனித்திரு நாளும்
இசைந்து விழித்திருப்பாய்
என்றே... அசையாத



உள்ளத்தில்
ஊன்றி
உணர்ந்தேதான்
பாடிய
வள்ளலார்
பாதையில்
வாழ்!

**முனைவர் இராம.வேதநாயகம்.**



மனதை பூட்டு போட்டு
வைத்திருக்கிறேன்
என் கண் முன்னே வராதே
மீறினால் காட்டுத்தனமான
காதலைகாண வேண்டி வரும்.

கண் திறந்து கடவுளை
வேண்டாதே ஏனெனில்

உன் பார்வை பட்டு
பாவியாகி விட போகிறார்!

ஒரு அடை மழை காலத்தில்
குடை பிடிக்காமல் வா
ஒன்றாய் நனைவோம்
காதலில்!

உன்ன சின்னச் சிரிப்பினில்
சிதைந்து போனது
நானோ! ஏனோ?!

உலகத்தின் ஆகச்சிறந்த
நிமிடம் உன்
நெஞ்சுக்குழியில்
முகம் புதைத்த அத்தருணமே!

**லி.நௌஷாத் கான்**


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

முனீஸ்வர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots *Flats *House *Villa *Bungalows
*Farm Land *Ware Houses *Factory Sites *Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website, Real Estate Website, E. Commerce Website
Restaurant Website, Shopping Website, News Website
MLM Binary Website, MLM Level Website, MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஜஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com

**ஆடிட்டிங் சர்வீஸ்**
GST, வருமானவரி (I.T)
குறைந்த செலவில்
தாக்கல் செய்ய
தொடர்பு கொள்ளவும்
73582 73545 / 94448 13400

**அடகு நகை மீட்டு மறு அடகு வைத்து**
G-Rs. 10000/-கடன் வழங்கப்படும்
அடகு நகை மீட்டு மார்க்கெட் விலையை விட அதிக விலைக்கு வாங்கப்படும்.
KRISH FINCORP
8838358029, 9840134150

**Landbazzar**
Wealth Creators
பகுதி நேர வேலைவாய்ப்பு
PART TIME JOB
SALARY
20,000/- Rs
NO SALES TARGET
- Retired person's / VRS
- Self Employee / Busniess Man
- Extra Income Needers / House wifes

5 APPOINTMENTS ONLY
97900 21367

**ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்**
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

**Low Cost Matrimony Website**
999 SITE

MATRIMONY WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009

**WANTED**
CNC & VMC OPERATOR, SETTER
LINE INSPECTOR
SHIFT SUPERVISOR
HI-TEK ENGINEERING INDUSTRIES
Survey No. 472/2A, SPH Road, Sengadu
Ayakolathur, Thiruvallur. - 602 105
99419 11817 / 99416 98979

**WANTED**
- MARKETING MANAGER
- ACCOUNTANT
- CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
- PLASMA & BENDING OPERATOR
- LATHE MILLING MACHINERY OPERATOR

AMBATTUR TAPSTIA, KATTUR
Contact: 95660 61750

Looking for CCTV Network ENGINEERS & TECHNICIANS for a 2000 plus Camera - CCTV Project across Tamilnadu and Kerala.
Apply with your Biodata to
8086660679
via whatsapp or Mail id:
jobs.groupdivine@gmail.com
We are also looking for SUB-CONTRACTORS
Send details to 8086660679
via whatsapp or Mail id:
info@groupdivine.in

- SECURITY - ESCORTS
- SECURITY SUPERVISOR
- SECURITY ASSISTANTS

In & around Chennai - Mamandur
Salary Rs. 19000/- onwards
Qual: Min. 10th / Age below 50 yrs.
Young, Energetic, Experienced
044-26452323 / 9884966085
SENTRYFORCE SECURITAS PVT LTD
No.24/27, Jade Terrace, Balfour Road Kilpauk, Ch - 10.

**PERAMBUR / MOOLAIKADI THORAIPAKKAM**
SG (Male)
Qul: 10th, Age blw 50yrs 8Hrs, Take Home Salary Rs. 18,500 (26 Days) with 4 Off. + Food.
Ct: 9884991302 / 9094783384
9884991728
Wanted FIELD OFFICER
மூலக்கடை. 7010477903

**PHARMACIST REQUIRED**
Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.
Maya Nursing Home
Ashoknagar, Chennai
Call: 98413 83989

**ஆட்கள் தேவை**
மருத்துவமனையில் பராமரிப்பு வேலைக்கு
40 வயதுக்குள் உள்ளவர்கள் அணுகவும்
RK சிறப்பு மருத்துவமனை
93457 81110

அசோக்நகரில் உள்ள
**மாயா நர்சிங் ஹோம்க்கு**
அருகில் வசிக்கும்
**வார்டு பாய் ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**MOUNT HOSPITAL**
@ Adambakkam & Thoraipakkam Req.
- HOSPITAL ADMIN with Insurance Experiance
- STAFF NURSES
- RECEPTIONIST
- LAB TECHNICIAN
- PHARMACIST
- DRIVERS

730 530 5231

அசோக்நகரில் உள்ள
**மாயா நர்சிங் ஹோம்க்கு**
அருகில் வசிக்கும்
**வார்டு பாய் ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**POWERCARE SOLUTIONS PVT. LTD**
(Manufacturer of Diesel Generator)
Requires
BDM, AREA, SALES MGR
(Exp. min 3yrs.Good Sal + Inc)
Fresh/ Exp ITI/ DIP/ ENGG
(MECH, EEE)
Ct: 89259 93101, 91766 85440

கேரளாவில் உள்ள பிரபல
ஹோட்டலுக்கு அனுபவமுள்ள
**தோசை மாஸ்டர் & டீ மாஸ்டர் தேவை**
உணவு, தங்குமிடம் இலவசம்
விருப்பமுள்ளவர்கள்
ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்
8711 808080

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில்
**பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை.**
உணவு, தங்குமிடம் மற்றும் ESI, PF உண்டு
சம்பளம் அனுபவத்திற்கேற்ப
பள்ளி சான்றிதழ், 2 போட்டோ, ஆதார் எடுத்துவரவும்,
சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீஸஸ்
2/7, வேலாயுதம் காலனி, சாலிகிராமம்
Ct: 9994843057 / 9384725836

**SHANMUGA PRIYA TOURS & TRAVELS**
Porur, Chennai
நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
**TELE CALLERS**
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
99412 44226

**ST COURIER®**
The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய கீழ்கண்டவர்கள் தேவை
- நைட் / மார்னிங் - டியூட்டி
Full / Part Time ஆட்கள் தேவை.
(ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
- வேன் டெலிவரி ஆட்கள்
(குறிப்பு: பைக் தேவையில்லை)

தகுதி: 10 வது, 12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
Ct: 99406 11849

**Aruvi SUPERMART**
Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000


**Breaking News Card.com**
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY



# பல்சுவை களஞ்சியம்




## மெய்ப்பொருள் காண்பது அறிவு



பனை மரங்களில் தென்னை மரங்களில் இலை காம்பை மரத்துடன் இறுக்கமாக பற்றிக்கொள்ள பனைமரம், தென்னை ஆகிய மரங்கள் உருவாக்கும் நார் போன்ற அமைப்புக்கு பன்னாடை என்று பெயர். அந்த நார் அமைப்பு இலைகளை மரத்தோடு இருக்குமாக பிணைக்க உதவியது. முதிர்ச்சி அடைய, அடைய அந்த இலையும் அந்த நார் போன்ற அமைப்பும் கீழே தானாக உதிர்ந்து விழும். அக்காலத்தில் பனைமரம் கற்பக விருட்சமாகவும் தென்னைமரம் பொருளாதார மேம்பாடு மற்றும்



மண்ணரிப்பு தடுப்பு போன்றவற்றையும் பார்த்து கொண்டது. கிராமங்களில் பனை மரத்திலிருந்து பதநீர் மற்றும் கள் இறக்கும் தொழில் மக்கள் செய்து வந்தனர். பனை மரத்தில் இருந்து வடியும் பதனீ மற்றும் கள்ளை சேகரிக்க சிறிய மண் பானையை அதன் மஞ்சரி காம்பில் மாட்டி வைத்திருப்பார்கள். சேகரமான வடிநீரில் தேனீக்கள், ஈக்கள், தூசுகள், கொசுக்கள், ஆகியவை விழுந்து கிடக்கும் அவற்றை வடிகட்ட மரத்தில் இருந்த பஞ்சு போன்ற பன்னாடையை புனல் போன்று செய்து அதை வடிகட்டி வாடிக்கையாளர்களுக்கு கொடுத்தார்கள். நாளடைவில் அந்த புனல் போன்ற அமைப்பில் தேவையில்லாத பொருட்கள் இருப்பதைக் கண்டு தேவையானதை விட்டுவிட்டு தேவையில்லாததை பிடித்து வைத்திருக்கும் இந்த பஞ்சு போன்ற பன்னாடையை வைத்து மற்றவர்களை திட்டுவதற்கு "பன்னாடை" என்ற வார்த்தையை பயன்படுத்தினர் அதாவது ஒருவர் நல்லதை விட்டு விட்டு கெட்டதை செய்வதை பார்த்தவர் பன்னாடையோடு ஒப்பிட்டு திட்டுவார் அல்லது தான் சொன்ன நல்ல விஷயங்களை செவியில் வாங்கிக் கொள்ளாமல் கெட்ட விஷயங்களை மட்டும் வாங்கிக் கொள்கின்றவர்களை பன்னாடை என்று திட்டுவார்கள். பன்னாடை என்பது அத் தாவரத்திற்கும் அத்தொழிலாளிக்கும் நல்லதை செய்தாலும் அதை இப்போது கெட்ட பொருளில் மட்டுமே பயன்படுத்துகிறோம். இதற்குத்தான் வள்ளுவர் எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்று அறிகுறித்தினார்.



-மு.குமார்
திருப்போரூர்

## காரும் கார் டிரைவரும்?




ஒருவர் காரில் தன் மனைவி , அம்மா எல்லோருடனும் சென்று கொண்டிருந்தார் . நீண்ட நேரமாக அவரை ஒரு போலிஸ் ஜீப் தொடர்ந்துக் கொண்டிருந்தது.
சிறிது நேரத்துக்கு பிறகு போலிஸ் ஜீப் அவர் காரை முந்திக்கொண்டு சென்று , அவர் கார் முன் நின்றது.

இறங்கி வந்த போலிஸ் , அவரிடம் 'குட் ஈவ்னிங் சார்.. அவர் " குட் ஈவ்னிங், ஏதாவது பிரச்சனையா? "

போலிஸ், "நாங்கள் உங்கள் காரை அரை மணி நேரமாக கவனித்து வருகிறோம்...... நீங்கள் போக்குவரத்து விதிகளை மீறாமல், ஸ்பீட் லிமிட்டை ஒரு மைல் கூட அதிகரிக்காமல், சக டிரைவர்களை மதித்து காரை ஓட்டிய விதத்தை நாங்கள் பாராட்டுகின்றோம்."

அதனால், சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, உங்களை சிறந்த டிரைவராக தேர்வு செய்து, 10,000 ரூபாய்க்கான இந்த செக்கை அன்பளிப்பாக கொடுக்கிறோம் பெற்றுக் கொள்ளுங்கள்'.

அவரும் சந்தோஷமாக ஒரு பெருமூச்சுவிட்டு விட்டு சொன்னார், "இந்த பணத்தை வைத்து எப்படியாவது டிரைவிங் லைசன்ஸ் கட்டாயம் எடுத்துடனும் "என்று சொன்னார்.

போலிஸ் ஒருமாதிரி பார்க்க, உடனே அவரின் மனைவி "சாரி சார் தப்ப நினைக்க வேண்டாம், அவர் குடிச்சிட்டு உளறுகிறார்" என்றார்.

இதையெல்லாம் பார்த்து கொண்டிருந்த அவரின் காது கேட்காத அம்மா சொன்னார், "நான் அப்பவே சொன்னேன் கேட்டியா, திருட்டு காரை எடுத்துகிட்டு வந்ததால், இப்ப எல்லோரும் போலிஸில் மாட்டிகிட்டோம்...

-Arunachalam

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன? | கொசு |
| மழையில் பிறந்து வெயிலில் காயுது? | காளான் |
| அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்? | பந்து |
| வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு; எழுதியிருக்கு. அது என்ன? | நாணயம் |
| ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன ? | கண் |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்குத் தெரியாது. அது என்ன? | வேர்கடலை |
| பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? | வத்தல் மிளகாய் |



# ஜோக்ஸ்

சில டாக்டருக்கும் சில ஆக்டருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?
இரண்டு பேரும் தியேட்டருக்கு வரவழைச்சு தான் கொல்லுவாங்க!

--------------------

சிவகாசிக்கும் நெய்வேலிக்கும் என்ன வித்தியாசம்?
சிவகாசில காச கரியாக்குவாங்க. நெய்வேலிலே கரிய காசாக்குவாங்க!

--------------------



FILE க்கும் PILE க்கும் என்ன வித்தியாசம்?
FILES அ உட்கார்ந்து பார்க்கணும். PILES க்கு பார்த்து உட்காரணும்.

--------------------

செல்போனுக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?
மனிதனுக்கு கால் இல்லேன்னா பேலனஸ் பண்ண முடியாது. செல் போன்ல பேலன்ஸ் இல்லேன்னா கால் பண்ண முடியாது.

----------------

ஒவ்வொரு இளைஞனின் மன உளைச்சலுக்கும் காரணம்?
மதிப்பெண்ணும் மதிக்காத பெண்ணும்!

--------------------

வசதி இல்லாதவன் ஆடு மேய்க்கிறான்! வசதி உள்ளவன் நாய் மேய்க்கிறான்!

--------------------

ஆண்களை அதிக தூரம் நடக்க வைக்கும் விஷயங்கள் ரெண்டு?
ஒன்று பிகர், மற்றொன்று சுகர்!

---------------------

கணிப் பொறிக்கும் எலிப் பொறிக்கும் என்ன வித்தியாசம்???
கணிப் பொறியில் எலி வெளியே இருக்கும். எலிப் பொறியில் எலி உள்ளே இருக்கும்..

---------------------

சிரித்து சிந்தியுங்கள் இல்லைன்னா சிந்தித்து சிரியுங்கள்.....

லால்குடி
வெ.நாராயணன்



# சமையல் அறை ஸ்பெஷல்



## மஷ்ரூம் குருமா



மஷ்ரூம் வைத்து செய்யும் உணவுகள் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். அதிலும் குறிப்பாக அவர்களுக்கு பிடித்த மாதிரி சுவையாக செய்து கொடுக்கும் போது அதை வேண்டாம் எனக் கூறாமல் விரும்பி சாப்பிடுவார்கள். எனவே இந்த பதிவில் அனைவருக்கும் பிடித்தபடி சூப்பர் சுவையில் மஷ்ரூம் குருமா எப்படி செய்வது எனப் பார்க்கலாம். ஒவ்வொரு முறை நீங்கள் மஷ்ரூம் வாங்கும்போதும் இந்த குருமா வைத்து கொடுத்தால் அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

தேவையான பொருட்கள்:

மஸ்ரூம் - 250 கிராம்
மிளகு - 1 ஸ்பூன்
தனியா - 1 ஸ்பூன்
கசகசா - 1 ஸ்பூன்
பச்சை மிளகாய் - 2
வேர்க்கடலை - 1 ஸ்பூன்
வெங்காயம் - 1
தக்காளி - 1
மிளகாய் தூள் - 1 ஸ்பூன்
மல்லித்தூள் - 1 ஸ்பூன்
இஞ்சி பூண்டு விழுது - 1 ஸ்பூன்
கரம் மசாலா - 1 ஸ்பூன்
சீரகத்தூள் - ½ ஸ்பூன்
தேங்காய் துருவல் - ¼ கப்
கறிவேப்பிலை - சிறிதளவு
கொத்தமல்லித் தழை - சிறிதளவு
எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

செய்முறை:

முதலில் ஒரு கடாயை அடுப்பில் வைத்து தனியா மற்றும் மிளகாய் சேர்த்து வறுத்துக் கொள்ள வேண்டும். அடுத்ததாக அதிலேயே கசகசா, வேர்க்கடலை சேர்த்து வதக்கிய பிறகு, தேங்காய் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து நன்றாக வதக்கி வெளியே எடுத்து ஆற வைத்துக் கொள்ளவும்.

வதக்கிய பொருட்கள் ஆரியதும் மிக்சி ஜாரில் போட்டு கொஞ்சம் தண்ணீர் சேர்த்து பேஸ்ட் போல அரைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்ததாக ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும், வெங்காயம், கருவேப்பிலை, சேர்த்து பொன்னிறமாக வதக்கிக் கொள்ளவும். பிறகு தக்காளியை மிக்ஸியில் அரைத்து இதில் சேர்த்து பச்சை வாடை போகும் அளவுக்கு வதக்க வேண்டும்.

பிறகு அதிலேயே கரம் மசாலா, மிளகாய்த்தூள், மல்லித்தூள் சேர்த்து 3 நிமிடம் வதக்கவும்.

பின்னர் அதில் அரைத்து வைத்துள்ள மசாலா பேஸ்ட்டை சேர்த்து கலந்து, தேவையான அளவு உப்பு, நீர் சேர்த்து முடி போட்டு வேக விடவேண்டும்.

பின்னர் இது கொதித்ததும், சுத்தம் செய்து வைத்துள்ள மஷரூமை சேர்த்து, இறுதியில் குருமாவுக்குத் தேவையான அளவு தண்ணீர் மற்றும் உப்பு சேர்த்து கொதிக்கவிட்டு இறுதியில் கொத்தமல்லி தழையை மேலே தூவி இறக்கினால், சூடான சுவையான கமகமக்கும் மஷ்ரூம் குருமா தயார்.

## சுவையும் ஆரோக்கியமும்: சமையலில் சில டிப்ஸ்!









சப்பாத்தியின் மேல் சிறிது எண்ணெய் தடவி ஒரு டப்பாவில் மூடி ஃப்ரிட்ஜில் வைத்தால் மூன்று நாட்கள் வரை ஃப்ரெஷ்ஷாக இருக்கும்.

காய்ச்சிய பாலில் தீய்ந்த வாடை வந்தால் பாலை வேறு ஒரு பாத்திரத்தில் மாற்றி ஒரு ஏலக்காய் உரித்து போட்டு விடுங்கள். சூடு ஆறியதும் ஒரு ஸ்பூன் தயிரை ஊற்றிக் கலக்கி மூடி வைத்துவிட்டால் நல்ல கெட்டியான கட்டித்தயிர் ரெடி.

நீர் மோரில் சிறிதளவு ரசப்பொடியைச் சேர்த்துப் பருகினால் அதன் சுவையே அலாதிதான்!

வெந்த கீரையை மிக்ஸியில் போட்டு வைப்பரில் ஒரு சுற்று சுற்றினால் நொடியில் மசிந்துவிடும். சாப்பிடவும் நன்றாக இருக்கும் என்று மட்டுமல்லாமல் சக்கையும் இருக்காது.

நான்கு பங்கு அரிசியுடன் ஒரு பங்கு உளுத்தம் பருப்பு சேர்த்து மெஷினில் அரைத்து வைத்துக்கொள்ளவும். திடீர் விருந்தினர் வந்தால் திடீர் தோசை செய்யலாம்.

பீட்ரூட்டைத் துருவி ஆவியில் வேகவைத்து, கெட்டியான தயிரில் போடவும். மிளகாய், தேங்காய், சீரகம் சேர்த்து விழுதாக அரைத்து பீட்ரூட் கலவையில் கலந்தால் புதுவித சுவை மிகுந்த பச்சடி தயார்.

இஞ்சியைத்துருவி, வெயிலில் காயவைத்துப் பொடித்து வைத்துக்கொண்டால் குருமா, பொங்கல் என்று இந்த பொடியை சேர்த்தால் மணத்துக்கு மணம், உடம்புக்கும் நல்லது.

நிலக்கடலையை மணலில் வறுப்பதற்கு பதில் மைக்ரோ வேவ் அவனில் சிறிது நேரம் வைத்து சூடாக்கினால் விரைவில் வறுபடுவதோடு அதிக சுவையுடனும் இருக்கும்.

நீளமிளகாயை சின்ன சின்னதாகக்கிள்ளி, பிளாஸ்டிக் டப்பாவில் போட்டு வைத்துக்கொண்டால், தாளிக்கும் போதும், மற்ற உபயோகத்திற்கும் சுலபமாக இருக்கும். கையும் எரியாது.

எந்த வகை பழஜூஸ் செய்தாலும் அதில் வேறு பழத்தின் துண்டுகளை சிறியதாக நறுக்கி, அத்துடன் புதினா இலைகள் ஒன்றிரண்டையும் பொடியாக நறுக்கி ஜூஸின் மேல் தூவி அருந்த சுவைகூடும்.

ஆப்பத்துக்கு மாவு ஆட்டும்போது, தேங்காய்த்துருவல் மற்றும் வாழைப்பழத்தை சேர்த்து அரைத்துவைத்து ஆப்பம் வார்த்தால் சூப்பர் ஆப்பம் தயார்.

தக்காளியை ரசத்துக்கு அரிந்துபோட்டால் வீணாக நேரிடலாம். மிக்ஸியின் வைப்பரில் தக்காளி, கொத்துமல்லி, கறிவேப்பிலை போட்டு ஒரு சுற்று சுற்றி ரசம் செய்து பாருங்கள். ரசம் சுவை ஊறைத் தூக்கும்.

## முருங்கைப்பூ ரசம்



தேவை:


புளி - நெல்லி அளவு
தக்காளி - 1
முருங்கைபூ - 2 கைப்பிடி அளவு
மிளகு - 1/2 டீஸ்பூன்
பூண்டு - 5 பல்
சீரகம் - 1 டீஸ்பூன்
வெந்தயம் - 1/4 டீஸ்பூன்
வற மிளகாய் - 1
கறிவேப்பிலை, மல்லித்தழை - சிறிது
மஞ்சள்தூள் - 1/4 டீஸ்பூன்

செய்முறை:

புளியை 1/2 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து கரைத்து கொள்ளவும். மிளகு, சீரகம்,மிக்ஸியில் அடித்துகொள்ளவும். வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்த்தும் பெருங்காயம் சேர்த்து சிவந்த்தும் மிளகு கலவை, கருவேப்பிலை, வற்றல் சேர்த்து வதக்கவும். வதங்கியபின் சுத்தம் செய்த முருங்கை பூ சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும். பின் பிசைந்த தக்காளி சேர்த்து வதக்கி புளி தண்ணீர் சேர்த்து மஞ்சள்தூள் சேர்க்கவும்.

ரசம் நன்கு நுரை கூடியதும் பாத்திரத்தில் மாற்றி உப்பு, மல்லித்தழை சேர்த்து பரிமாறவும். சூப்பரான முருங்கை பூ ரசம் ரெடி.

## வித்தியாசமான ருசியில் மரவள்ளிக் கிழங்கு உணவுகள்







### மரவள்ளி கிழங்கு முறுக்கு

தேவை:

அரிசி மாவு 2 கப்
உதிர்த்த மரவள்ளிக் கிழங்கு 1 கப்
வெள்ளை எள், கடலை பருப்பு தலா 2 டீஸ்பூன்
சீரகம் 1 டீஸ்பூன்
மிளகு 1/2 டீஸ்பூன்
வெண்ணெய் 1 டீஸ்பூன்
உப்பு தேவைக்கேற்ப
எண்ணெய் பொரிக்க

செய்முறை:

முதலில் மரவள்ளிக் கிழங்கை வேகவைத்து மசித்துக்கொள்ளவும். பின்னர் ஒரு பெரிய பாத்திரத்தில் அரிசி மாவு, மசித்த கிழங்கு, சீரகம், மிளகு, உப்பு, வெண்ணெய் மற்றும் பருப்பு சேர்த்து நன்கு கலந்து, தேவையான அளவு தண்ணீர் சேர்த்து, மென்மையான மாவாக பிசையவும். முறுக்கு அச்சில் விருப்பமான துளை வடிவம் வைக்கவும். சூடான எண்ணெயில் சுழற்றி பொரிக்கவும்.

இரு பக்கமும் பொன்னிறமாக வந்ததும் எடுத்து வடிகட்ட, மொறு மொறு மரவள்ளிக்கிழங்கு முறுக்கு தயார்.

### மரவள்ளி கிழங்கு உருண்டை.

தேவை:

மரவள்ளி கிழங்கு - அரை கிலோ
வெல்லம் - 100 கிராம்
ஏலக்காய் - 2
தேங்காய்த் துருவல் - கால் கப்

செய்முறை:

மரவள்ளி கிழங்கை தோல் நீக்கி துருவிக்கொள்ளவும். துருவிய கிழங்கை இட்லி பானையில் வைத்து ஆவியில் வேகவைத்து எடுக்கவும் வேகவைத்த கிழங்குடன் தேங்காய் துருவல், துருவிய வெல்லம், ஏலக்காய்தூள் சேர்த்து கிளறவும். இந்த கலவையை உருண்டையாக உருட்டி தேங்காய் துருவலில் பிரட்டி எடுத்தால், சுவையான, சத்தான மரவள்ளிக் கிழங்கு உருண்டை ரெடி.

### மரவள்ளி மசாலா சப்பாத்தி

தேவை:


கோதுமை மாவு - 2 கப்
மரவள்ளிக்கிழங்கு துருவல் - 2 கப்
தக்காளி, வெங்காயம் - தலா 3
இஞ்சி - 1 துண்டு
பெருங்காயம் - ஒரு சிட்டிகை
கறிவேப்பிலை - சிறிதளவு
எள் - 2 டீஸ்பூன்
மிளகாய்த் தூள் - 3 டீஸ்பூன்
எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

செய்முறை:

முதலில் கோதுமை மாவுடன் சிறிது உப்பு, தண்ணீர் சேர்த்து சப்பாத்தி மாவு பதத்துக்குப் பிசைந்துகொள்ள வேண்டும். பின் ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் வெங்காயம், தக்காளி சேர்த்து வதக்க வேண்டும். பின்னர் அதனுடன் சிறிதளவு உப்பு, பெருங்காயம், இஞ்சி, மிளகாய்த் தூள், கறிவேப்பிலை சேர்த்து வதக்கி கொள்ள வேண்டும். பின் எள், மரவள்ளிக்கிழங்கு துருவல் சேர்த்து நன்றாக வதக்கவும். நன்றாக வதங்கியதும் தனியாக இறக்கி வைத்துக் கொள்ளவும்.

கடைசியாக பிசைந்து வைத்த மாவைச் சப்பாத்தியாகத் தேய்த்து, நடுவில் 2 டீஸ்பூன் மரவள்ளிக் கலவையை வைத்து மூடி, சப்பாத்தியாகத் தேய்க்க வேண்டும். பிறகு தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடானதும் தேய்த்து வைத்துள்ள சப்பாத்தியைப் போட்டு, சுற்றிலும் எண்ணெய் விட்டு முன்னும் பின்னும் வேகவைத்து எடுத்தால், அருமையான மரவள்ளிக்கிழங்கு மசாலா சப்பாத்தி தயார்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699




மீனவ போராளி ஆறுமுகம் தமிழ்நாடு மீனவர் பேரவை மாநில துணைத்தலைவர்,
சென்னை சிங்காரவேலர் கில்னட் இரண்டு இன்ஜின் பைபர் கட்டுமரம் படகு மீனவர்கள் கூட்டுறவு நலச்சங்கம் தலைவர்,
அவர்களின் 55 ஆவது பிறந்தநாளான இன்று தமிழ்நாடு மீனவர் பேரவை மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கேக் வெட்டியும், சால்வை அணிவித்தும் வாழ்த்து தெரிவித்தனர்.



குன்னம் சட்டமன்ற தொகுதியில் அமைச்சர் சிவசங்கர், நேற்று ரூ.12 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

## மருதமலை முருகன் கோவிலில் லிப்ட் வசதி



மருதமலை முருகன் கோவிலில் லிப்ட் வசதியை அமைச்சர் சேகர்பாபு நேற்று துவக்கி வைத்தார். உடன் அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர்.

## மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி



தூத்துக்குடி மாவட்டம் புனித தஸ்னவிஷ் மகளிர் பள்ளியில் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் கீதா ஜீவன் வழங்கினார்.

## கோவிந்தராஜ சுவாமியின் தெப்பத் திருவிழா



திருமலையில் கோவிந்தராஜ சுவாமியின் தெப்பத் திருவிழா சிறப்பாக நிறைவடைந்தது.

## பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்



நாகர்கோவில் மாநகரம், தேமுதிக நிர்வாகிகளுடன், பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் பிரேமலதா பங்கேற்றார்.

## முருகன் கோவிலுக்கு காவடி ஊர்வலம்



சீர்காழி மார்கோனி மந்திராலயா கார்டன் முருகன் கோவிலுக்கு காவடி ஊர்வலம் சென்ற பக்தர்கள்.

## சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி




பெரம்பலூர் நகராட்சியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் மிருணாளினி துவக்கி வைத்தார்.

## தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு அழைப்பிதழ்



திமுக இளைஞர் அணியின் தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு, வருகிற 7ம் தேதி விருதுநகர் கல்குறிச்சியில் நடக்கிறது. இதற்கான அழைப்பிதழை,முதல்வர் ஸ்டாலினிடம் நிர்வாகிகள் வழங்கினர்.

## வனமும் வாழ்வும் திட்ட நிறைவு விழா



வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 'வனமும் வாழ்வும்' திட்ட நிறைவு விழாவில் 500 மாணவ, மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை அமைச்சர் காந்தி வழங்கினார்.

## கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள்



ஆலந்தூர் தொகுதி அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் நடந்த திராவிட பொங்கல் விழா கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 2,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை அமைச்சர் தா-மோ. அன்பரசன் வழங்கினார்.

## வெற்றிவேல் முருகன் கோவில் கும்பாபிஷேகம்



சென்னை புதுவண்ணாரப்பேட்டை பர்மாநகர் வெற்றிவேல் முருகன் கோவில் கும்பாபிஷேகம் நடந்தது.

## கோவில் தேர் பவனியில் அமைச்சர்கள்




கோவை மாவட்டம் அன்னூர் மன்னீஸ்வர் கோவில் நிகழ்வில் அமைச்சர் சேகர்பாபு பங்கேற்றார்.அடுத்தபடம்: கோவை தென்சேரிமலை அருள்மிகு மந்திரகிரி வேலாயுதசாமி கோவில் தேர் பவனியில் அமைச்சர்கள் சாமிநாதன், சேகர்பாபு பங்கேற்றனர்.

## மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம்



**திருவண்ணாமலை, பிப்.03:** திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மக்கள் குறை தீர்வு நாள் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு கூட்டத்தில் உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் அனைத்து அரசு அலுவலர்களும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**




## திருமழிசை ஆழ்வார் கோயிலில் திருத்தேர் திருவிழா



திருமழிசை ஜெகந்நாதப் பெருமாள் மற்றும் திருமழிசை ஆழ்வார் கோயிலில் நேற்று திருத்தேர் திருவிழா நடந்தது .

## ரூ. 10.70 கோடி செலவில் சாலை பணி



ஆவடி மாநகராட்சியில் பல்வேறு வார்டுகளில் ரூ. 10.70 கோடி செலவில் சாலை பணிகளை அமைச்சர் நாசர் நேற்று துவக்கி வைத்தார்.

## தவெக ஆண்டு விழாவில் அன்னதானம்



தவெக ஆண்டுவிழாவையொட்டி நேற்று கோவில்பட்டியில் அந்த கட்சியினர் அன்னதானம் வழங்கினர்.

# சுற்றுலா: கோத்தகிரியில் பார்க்க வேண்டிய 6 இடங்கள்!

கோத்தகிரி என்பது கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மேற்கே உள்ள மேட்டுப்பாளையத்தில் இருந்து சரியாக 35 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மலை நகரமாகும். இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தின் அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி வட்டம் ஊராட்சிய ஒன்றியமாகும்.



1. உயிலட்டி நீர் வீழ்ச்சி.

இனிமையான தாவரங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் உயிலட்டி நீர்வீழ்ச்சி ஆச்சரியமாகும். படிகளால் ஆன கற்பாறைகள் வழியாக நீர் கீழே விழுந்து அமைதியான மற்றும் அழகிய காட்சியை நம் கண் முன்னே உருவாக்குகிறது. நிதானமான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குகிறது. மற்றும் அருவி நீரின் சத்தம் நம் வருகையின்போது ஒரு இயற்கையான அழகான தினத்தை பார்க்கும்போது கண்களுக்கு இக் காட்சியை வழங்குகிறது. திறந்திருக்கும் நேரம் -சூரிய உதயம் முதல் சூரிய ஹஸ்தமனம் வரை. நுழைவு கட்டணம் இல்லை.

2.குயின் நீர்வீழ்ச்சி.

கோத்தகிரி தாலுகாவில் மறைந்திருக்கும் இந்த குயின் நீர்வீழ்ச்சி ஒரு மயக்கும் நீர் வீழ்ச்சி. பாறைகளின் பிளவுகள் வழியாக நீர் கீழே விழுவது அழகாகக் காட்டுகிறது. பகல் நேரத்தில் சுற்றுலாவிற்கு பிரபலமான இடம் இது. கோத்தகிரியில் இருந்து 7 கி.மீ தொலைவிலும், கோத்தகிரிபேருந்து நிலையத்தில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும் இது அமைந்துள்ளது. இங்கு பார்வையிட சிறந்த வசதியான இடங்களில் ஒன்றாகும்.

திறந்திருக்கும் நேரம் சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம்வரை. நுழைவு கட்டணம் இல்லை.

3. கோடநாடு காட்சி முனை.

கோடநாடு வியூ பாயிண்ட் நீலகிரி மலைகளின் மூச்சு அடைக்ககூடிய பரந்த காட்சிகளை அள்ளி வழங்குகிறது. இது மிகவும் அழகிய பாதைகளில் ஒன்றாக புகழ்பெற்றது. இது இயற்கை ஆர்வலர்கள் கட்டாயம் பார்க்கவேண்டிய கோடை விடுமுறை தலமாக அமைகிறது. உருளும் மலைகள் மூடுபனி மூடிய பள்ளத்தாக்குகள், தேயிலைத் தோட்டங்கள், ஆறுகளின் அழகிய பார்வையை அள்ளி வழங்குகிறது.

நேரம் - திங்கள் டு வெள்ளி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

சனி ஞாயிறு - காலை ஒன்பது முதல் மாலை ஆறு மணி வரை. நுழைவுக்கட்டணம் இங்கு இல்லை.

4.கேத்தரின் நீர்வீழ்ச்சி.

கோத்தகிரி சுற்றுலாத் தலங்களில் ஒன்றான கேத்தரின் நீர்வீழ்ச்சி மைசூர் மாவட்ட ஆட்சியர் ஜி.டி காக்பர்னின் துணைவியாரின் பெயர் இடப்பட்டது. இது கோத்தகிரியில் அமைந்துள்ள ஒரு கண்கவர் நீர் வீழ்ச்சியாகும். 250 அடிக்கும் மேல் உயரத்தில் இருந்து வரும் இந்த அழகான நீர்வீழ்ச்சி, நீலகிரி மலைகளின் பசுமையான பசுமைக்கு மத்தியில் ஒரு மயக்கும் அழகிய காட்சியை வழங்குகிறது. இங்கு பல்வேறு கோணங்களில் இருந்தும் பார்வையாளர்கள் அருவிகளின் தொடர்ந்த காட்சிகளை ரசிக்கலாம். மலை ஏறுபவர்கள், பறவையைப் பார்க்கும் ஆர்வலர்கள் தாங்கள் விரும்பும் அனைத்தையும் இங்கு காணலாம்.

காலை ஆறு மணி முதல் நாலு ஆறு மணி வரை பார்க்கலாம். நுழைவுக் கட்டணம் இல்லை.

5. லாங் வுட் ஷோலா காடு

லாங் வுட் ஷோலா என்பது ஒரு அழகிய பசுமையான காடு. இது தீண்டப்படாத அழகின் மத்தியில் அமைதியான பின்னழைகை வாரி வழங்குகிறது. இந்த அடர்ந்த வனப்பகுதி பல்வேறு வகையான தாவரங்கள் விலங்கினங்களுக்கும், உள்ளூர் தாவர இனங்களுக்கும், நரி, காட்டெருமை போன்ற விலங்குகளுக்கும், தாயகமாகவும் அமைதியான சூழ்நிலையில் அழகை ரசிக்கலாம். இங்கு பறவை ஆர்வலர்கள், இயற்கை ஆர்வலர்கள் புகைப்பட கலைஞர்களுக்கு இது ஒரு சொர்க்கம் ஆகும்.



காலை ஒன்பது மணி முதல் மாலை 6 மணி வரை பார்க்கலாம். நுழைவு கட்டணம் - ஒரு நபருக்கு ரூபாய் 100.

6. கில் -கோத்தகிரி

கோத்தகிரியில் இருந்து மேல் வடகிழக்கில் அமைந்துள்ள வினோதமான கோட்டையில் ஒரு வினோதமான கிராமம். தினசரி கூட்ட நெரிசல் இருந்து அமைதியான ஓய்வு அளிக்கிறது. இங்கு தேயிலை தோட்டங்கள், தேயிலைகளை வாடுதல், உருட்டுதல், நொதித்தல், உலர்த்துதல் போன்ற தொலைந்துபோன நடை முறைகளை கண்டு கழிக்கலாம்.

ஊட்டியில் இருந்து கோத்தகிரிக்கு 28 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மலைத்தொடர்கள் வழியாக வளைந்து சென்றால் வரும். கோயம்புத்தூரில் இருந்து பயணம் செய்தாலும் சரி, குன்னூருக்கு செல்வது எளிது. அங்கிருந்து உங்கள் இலக்கை அடைய இருபது கிலோ மீட்டர் பயணம் மட்டுமே. விமானம் மூலம் - கோயம்புத்தூர் விமான நிலையத்தில் இருந்து கோத்தகிரிக்கும் செல்லலாம்.

கோத்தகிரி பயணத்திற்கு அக்டோபர் முதல் மே மாதம் வரை பார்க்கலாம். கோடை விடுமுறையில் கோத்தகிரி சென்று இயற்கை, ரம்யமான காட்சிகளையும் சென்று ரசித்து வாருங்கள்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## நபார்டு வங்கியில் பணி

ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் நபார்டு (தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி) வளர்ச்சி உதவியாளர் பணியிடங்களை நிரப்பவிருக்கிறது. இதற்காக வெளியிடப்பட்ட அறி விக்கையில் 162 காலிப்பணியிடங்கள் நிரப்பவிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இந்தப் பணியிடங்கள் மாநில வாரியாக நிரப்பப்படும்.

21 வயது முதல் 35 வயது வரை யிலானவர்கள் இதற்கு விண்ணப்பிக்க லாம். இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு அரசு விதிமுறைகளின்படி தளர்ச்சி உண்டு. குறைந்தபட்சப் பட்டப்படிப்பு அவசியமாகும். இருகட்டமாகத் தேர்வு நடைபெறும். முதல்நிலைத் தேர்வு பிப்ர வரி 21, 2026 அன்றும், முதன்மைத் தேர்வு ஏப்ரல் 12, 2026 அன்றும் நடத்தப்படும். இருகட்டத் தேர்வுக்கான பாடத்திட்டம், தேர்வுமையங்கள், விண்ணப்பம் நிரப்பும்முறை உள்ளிட்ட பல்வேறு விபரங்களுக்கு www.nabard.org/career என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம். விண்ணப்பிப்பதற்கான கடைசித் தேதி பிப்ரவரி : 3, 2026.

## சென்ட்ரல் வங்கியில் அதிகாரிகள் பணி

பொதுத் துறை வங்கிகளில் ஒன்றான சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் காலியாக உள்ள 350 சிறப்புத்துறை அதிகாரிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கை வெளியாகியுள்ளது. அந்நியச் செலாவணி அலுவலர் மற்றும் விற்பனைப் பிரிவு அலுவலர் ஆகிய இரண்டு பிரிவுகளில் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. அந்நியச் செலாவணி அலுவலருக்கு குறைந்தபட்ச வயதாக 25உம், விற்பனை பிரிவு அலுவலருக்கு 22உம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரண்டுக்கும் அதிகபட்ச வயது 35 ஆகும். இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு அதிகபட்ச வயதில் அரசு விதிமுறைகளின்படி தளர்ச்சி இருக்கும். பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் எழுத்துத் தேர்வும், ஏப்ரலில் நேர்முகத் தேர்வும் நடைபெறும். பணி அனுபவமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். முழுவிபரங்களுக்கு www.centralbank.bank.in என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம். விண்ணப்பிக்கக் கடைசித் தேதி பிப்ரவரி 3, 2026.

# எந்தெந்தப் பொருள்களின் விலை குறையும் - உயரும்?

புதுடெல்லி, பிப்.3:

மத்திய பட்ஜெட்டில்வரிகுறைக்கப் பட்டுள்ளதால் கீழ்காணும் பொருள்களின் விலை குறைகிறது

* புற்றுநோய், நீரிழிவு நோய்க்கான மருந்துகள் உள்பட 17 வகையான உயிர்காக்கும் மருந்துகள்

* காலணிகள் * தோல் பொருள்கள் * தொலைக்காட்சி உபகரணங்கள் * மைக்ரோவேவ் ஓவன்கள் * கேமிராக்கள்

* குறிப்பிட்ட சில மது வகைகள் மற்றும் ரசாயனங்கள்

* வெளிநாட்டுக் கல்வி * வெளிநாட்டுச் சுற்றுலா

* எரிசக்தி துறைசார் உபகரணங்கள்

* அணு ஆயுத திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் * மின்சார வாகன பேட்டரிகள் * ஜவுளி பொருள்கள்

* கைப்பேசிகள் மற்றும் கையடக்கக் கணினிகள்

* சூரியசக்தி தகடுகள் * கடல் உணவுகள்

* விளையாட்டு உபகரணங்கள்

* சுய பயன்பாட்டுக்குப் பயன்படுத்தப் படும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் குறிப்பிட்ட சில பொருள்கள் *வெளிநாடுகளுக்குப் கல்வி, மருத்துவச் செலவுக்காக பணம் அனுப்புதலுக்கான நடவடிக்கையில் வரி தளர்வு

விலை உயரும் பொருள்கள்

* நிலக்கரி, காபி மற்றும் காபி வழங்கும் இயந்திரங்கள்

* புது செஸ் வரி விதிப்பால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி யாகும் குறிப்பிட்ட சில வகை மதுபானங்கள், சிகரெட்கள், பான் மசாலா, பிற புகையிலைப் பொருள்கள்

* விடியோ கேம்ஸ் தயாரிப்பு பாகங்கள்

*வெளிநாடுகளிலிருந்துஇறக்குமதியாகும்விலங்குகள், பறவைகள் * உரங்கள் * ஏடிஎம் இயந்திரங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் * ஒளிபரப்புத் துறைக்கான உபகரணங்கள்.

# தைப்பூசம்: சொந்த கிராம முருகன் கோவிலில் எடப்பாடி பழனிசாமி வழிபாடு

எடப்பாடி, பிப்.3–

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்–அமைச்சருமான எடப்பாடி பழனிசாமி நேற்று தனது சொந்த ஊரான எடப்பாடி அருகே சிலுவம் பாளையத்துக்கு குடும்பத்தினருடன் வந்தார். அங்கு காவிரி ஆற்றங்கரையில் பிரசித்தி பெற்ற முருகப்பெருமான் கோவிலில் நடந்த தைப்பூச விழாவில் அவர் பங்கேற்றார். ஊர் பொதுமக்கள் சார்பில் அவருக்கு மேளதாளம் முழங்க பூர்ண கும்ப மரியாதையுடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து கோவில் அறங்காவலர்கள் எடப்பாடி பழனிசாமிக்கு பரிவட்டம் கட்டி முதல் மரியாதை செலுத்தினர். எடப்பாடி பழனிசாமி மற்றும் அவரது மனைவி ராதா, மகன் மிதுன், மருமகள் திவ்யா மற்றும் பேரக்குழந்தை ஆதித் ஆகியோருடன் சாமி தரிசனம் செய்தார். கோவில் சார்பில் அவருக்கு தீர்த்த பிரசாதம் மற்றும் பஞ்சாமிர்த பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

# இந்தி, சமஸ்கிருதம் திணிப்பு: மோடி அரசுக்கு சாமரம் வீசுகிறது அ.தி.மு.க.- பா.ஜ.க. முயற்சிக்கு ஸ்டாலின் கண்டனம்

சென்னை, பிப்.3:

இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் திணிக்க பா.ஜ.க. அரசு முயற்சிக்கிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்தார்.

“தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தொண்டர்களுக்கு எழுதி உள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: கழகத்தை 6வது முறையாக அரியணை ஏற்றியதில் உடன்பிறப்பு களான உங்களின் அயராத உழைப்புக்கு முதன்மையான பங்கு உண்டு. உங்களை வழிநடத்தும் பொறுப்பைச் சுமந்திருக்கும் நான் ஒவ்வொரு நாளும் ஓயாது உழைத்துக் கொண்டிருக்கிறேன். பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் இருட்டிலிருந்து தமிழ்நாடு மீட்கப்பட்டு விடியல் வெளிச்சத்தைக்காண்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டமிடப்பட்ட வஞ்சகத்தை எதிர்கொண்டு தமிழ்நாடு பொருளாதாரத்திலும் தொழில்துறையிலும் கல்வியிலும் கட்டமைப்புகளிலும் இன்னும் பல துறைகளிலும் முன்னேறி வருவதை அந்த ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையே உறுதி செய்கிறது.

இந்திக்கு இடமில்லை என்று இருமொழிக் கொள்கையை அண்ணா நிலைநாட்டிய மாநிலத்தில், இந்தியுடன் சமஸ்கிருதத்தையும் திணிக்கும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க. அரசு. தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க. அரசுக்குச் சாமரம் வீசும் அடிமையாக இருக்கிறது அண்ணாவின் பெயரை கட்சியில் வைத்திருக்கும் அ.தி.மு.க..

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்ல வேண்டிய மண்ணில், எந்த வகையில் மத வன்முறையைத் தூண்டலாம் என்பதே பா.ஜ.க.வின் நோக்கமாக உள்ளது. அதற்கு மௌன சாட்சியாக அமைதி காக்கிறது அ.தி.மு.க. மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என்பதைத் திராவிட மாடல் அரசு தனது ஒவ்வொரு செயல்பாட்டிலும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கிறது. திராவிட மாடலின் குரல், பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மற்ற மாநிலங்களிலும் ஒலிக்கிறது. மாநில சுயாட்சி என்றாலே பயந்து ஒளிந்து கொள்கிறது, சுயாட்சி எண்ணமோ சுயமரியாதை உணர்வோ இல்லாத அ.தி.மு.க.

இந்த ஐந்தாண்டுகளிலும் மக்களுடனேயே பயணிக்கிறது. மக்களுக்காகவே செயல்படுகிற மக்கள் இயக்கமான தி.மு.க.வை 2026 சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற வைத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்திட வேண்டும் என்ற எண்ணம் தமிழ்நாட்டு மக்களின் மனதில் பதிந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு வஞ்சகம் செய்து வரும், தமிழர்களின் எதிரியான பா.ஜ.க.வும் அதனுடன் இணைந்துள்ள அ.தி.மு.க.வும் நமக்கு எதிராகச் செயல்படுவதாக நினைத்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை மீண்டும் படுகுழியில் தள்ள நினைக்கும் சதியை, உடன்பிறப்புகளான உங்களால்தான் முறியடித்திட முடியும். அந்த உறுதியை ஏற்கும் வகையில், பிப்ரவரி 3 அன்று பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் அண்ணா சதுக்கம் நோக்கி அமைதிப் பேரணியில் உங்களில் ஒருவனான நானும் கழக முன்னோடிகளும் கழகத் தொண்டர்களும் பங்கேற்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மகிழ்ச்சியும், வருத்தமும் தரும் மத்திய பட்ஜெட்: ஏ.எம். விக்கிரமராஜா கருத்து

சென்னை, பிப்.3:

மத்திய பட்ஜெட் மகிழ்ச்சியும், வருத்தமும் தரும் பட்ஜெட் என்று தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நிர்மலா சீதாராமன் 9 ஆண்டுகள் தொடர் பட்ஜெட் சமர்ப்பணத்தை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் ஒரு தமிழராக வரவேற்கிறோம் என்று பொதுச்செயலாளர் கோவிந்தராஜுலு தெரிவித்து ள்ளார். பட்ஜெட்டுக்கான ஆக்கப்பூர்வ மான ஆலோசனைகளையும், அரசு வருவாய் அதிகரிப்புக்கான சாத்திய கூறுகளையும் பேரமைப்பு சார்பில் நிதியமைச்சகத்திற்கு முன்னரே சமர்ப்பித்திருந்தோம். அவ்வாலோசனைகள் புறக்கணிக்கப்பட்டிருப்பதும் வருத்தத்திற்குரியது. மேலும், தொழில் வணிகர்களுக்கான வணிகர்களின் நலன் காக்கின்ற எந்த ஒரு செய்தியும் பட்ஜெட்டில் இடம் பெறாதது. மேலும் வருத்தம் அளிக்கிறது. பற்றாக்குறை பட்ஜெட்டாக இருப்பதும், எதிர்காலம் காலங்களில் வரி செலுத்துவதற்கான வரிச்சுமை அதிகரிக்கக் கூடும் என்ற அச்சமும் தென்படுகின்றது.

அரிதான கனிம வழித்தடங்கள் மேம்படுத்த முனைந்திருது வரவேற்புக்குரியது. மெட்ரோ சிட்டிகளை இணைத்து அதிவேக ரெயில்கள் இயக்கத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும் நல்ல முயற்சியே. வணிகர்களின் தொடர் கோரிக்கைகளான அரசு ஊழியர்களுக்கு இணையான அதிகாரம் பகிர்வின் மூலம் அரசின் பயன்கள் வணிகர்களுக்கு அளிக்கப்பட வேண்டியது மாநிலத்தின் கட்டாயம் என்பதை மத்திய, மாநில அரசுகள் கருத்தில் கொள்ள வேண்டும். வரியை வசூலிக்கின்ற பணியையும், அரசு கருவூலத்திற்கான வரியை தாங்களே செலுத்துகின்ற இருவழி பாதையாக இருக்கின்ற வணிகர்களை பாதுகாக்கின்ற பட்ஜெட்டாக இல்லை என்பது பதிவு செய்யப்பட வேண்டிய கட்டாயமும், கடமையுமாகும்.

ஒட்டுமொத்தமாக பட்ஜெட் மகிழ்வும் -வருத்தமும் கலந்த ஒரு பட்ஜெட் என்பது தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கருத்து என தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா தெரிவித்துள்ளார்.

# சென்னையில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை: 2 நாளில் 105 பேர் கைது



சென்னை, பிப்.3:

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண் உத்தரவின்பேரில், போதை பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவினர் காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் மற்றும் 4 மண்டல மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் குழுவினர் மூலம் 31.01.2026 மற்றும் 01.02.2026 ஆகிய 2 நாட்கள் போதைபொருட்களுக்கு எதிரான சிறப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி காவல் குழுவினர் போதைப்பொருட்கள் வைத்திருந்தது மற்றும் விற்பனை செய்தது தொடர்பாக 57 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 105 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் 46 கஞ்சா வழக்குகள் மற்றும் 11 மாத்திரை வழக்குகள் அடங்கும். கைது செய்யப்பட்ட எதிரிகளிடமிருந்து 26 கிலோ கஞ்சா, 1,888 உடல்வலி நிவாரண மாத்திரைகள், பணம் ரூ.1,745 மற்றும் 4 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. காவல் துறையினர் தொடர்ந்து தீவிரமாக கண்காணித்து, கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் மற்றும் குட்கா, மாவா உள்ளிட்ட புகையிலை பொருட்களை கடத்தி வருபவர்கள், பதுக்கி வைப்பவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்களை கைது செய்ய, வாகனத் தணிக்கைகள், தீவிர ரோந்து பணிகள் மற்றும் சிறப்பு அதிரடி தணிக்கைகள் மேற்கொள்ளப்படும். இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண் எச்சரித்துள்ளார்.

# ஆயுதப்படை காவலர் தற்கொலை

சென்னை, பிப்.3:

ஆயுதப்படை காவலர் விஜய் உள்பட மூன்று காவலர்கள் சென்னை அயானவரத்தில் தனியாக வீடு எடுத்து தங்கி வந்தனர். இந் நிலையில் இன்று அதிகாலை 3 மணி அளவில் காவலர் தினேஷ் என்பவர் பணிக்கு செல்வதற்காக வீட்டின் கதவை திறக்க முயன்றபோது கதவு வெளிபக்கமாக மூடியிருந்தது.

இதைத் தொடர்ந்து மற்றொரு காவலர் தமிழரசன் என்பவர் வீட்டின் உரிமையாளர் வசந்தா என்பவருக்கு தகவல் தெரிவித்தார். உடனடியாக அவர் வந்து வெளிப்பக்கமாக பூட்டப்பட்டிருந்த கதவினை திறந்தார். இதைத் தொடர்ந்து காவலர்கள் அருகில் இருந்த மற்றொரு அறையில் லைட் எரிவதை பார்த்து, உடனே அங்கு சென்று பார்த்த போது காவலர் விஜய் அந்த அறையில் பேன் மாட்டும் கொக்கியில் தூக்கிட்டு தொங்கிய நிலையில் பிணமாக கிடந்தார்.

உடனடியாக காவலர் தினேஷ், காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுத்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து காவலர் விஜய்யின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் தற்கொலை செய்து கொண்ட விஜய்க்கு திருமணம் ஆகவில்லை என்றும், குடும்ப சூழ்நிலை காரணமாக அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிய வந்துள்ளது.

# “பாஜகவுக்கு வாக்குகள் விழாது என்பதால் பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிப்பு” - அமைச்சர் ரகுபதி



**சென்னை, பிப்.3:**

தேர்தல் நடக்கும் மாநிலங்களை கவருவதற்காக பட்ஜெட்டில் சிறப்புத் திட்டங்களை அறிவிக்கும் நாடகத்தைக் கூட தமிழ்நாடு என்றால் புறக்கணிக்கிறது ஒன்றிய பாஜக அரசு. எவ்வளவு அறிவிப்புகளைச் செய்தாலும் தமிழ்நாட்டில் பாஜகவுக்கு வாக்கு விழாது என்பதை தெளிவாகத் தெரிந்தே பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்திருக்கிறார்கள் என தமிழக அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “வழக்கமாக ஒன்றிய பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் சமயத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் மாநிலங்கள் கொண்டாடக்கூடிய அம்சங்கள் இருக்கும். ஆனால், ஒன்றிய பாஜக அரசின் இப்போதைய பட்ஜெட்டில் தமிழ்நாடு கொண்டாட எதுவுமே இல்லை.

பாஜகவிற்குச் சித்தாந்த ரீதியில் சிம்மசொப்பனமாக இருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். தமிழர்கள் மீது பாஜக கொண்டிருக்கும் வன்மம் ஒருபோதும் தீராது என்பதை மோடி அரசு தாக்கல் செய்த பட்ஜெட் நிரூபித்துவிட்டது.

தமிழ்நாடு என்கிற பெயரே இல்லாத பட்ஜெட்டை கடந்த காலங்களில் தாக்கல் செய்த ஒன்றிய பாஜக அரசு, அதற்குக் கடும் எதிர்ப்பு கிளம்பியதால் இந்த முறைப் பெயருக்காவது தமிழ்நாடு என்ற வார்த்தையைச் சேர்த்துவிடுவது என்று குறியாக இருந்திருக்கிறார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். அதுவும் பெயரளவு அறிவிப்புகள்தான். தமிழ்நாட்டுக்கென பிரத்தியேகமான சிறப்புத் திட்டங்கள் எதையும் பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை.

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம் பற்றி அறிவிப்பும் இடம்பெறவில்லை. அமெரிக்காவின் வரிவிதிப்பால் பல்லாயிரம் கோடி இழப்பை சந்தித்திருக்கும் திருப்பூர் ,கோவை தொழிற்துறையை மீட்பதற்கு ஆக்கபூர்வ அறிவிப்புகள் எதுவும் இல்லை. ஆட்சியைத் தாங்கி பிடிக்கும் பிஹாருக்கும் ஆந்திராவுக்கு வாரிக் கொடுப்பார்கள். ஆட்சி அமைக்கக் கூடிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடந்தால் ஆயிரம் கோடிகளில் திட்டங்களை அறிவிப்பார்கள். ஆனால், தேர்தல் நடக்கும் காலத்தில்கூட அள்ளிக் கொடுக்க மனம் இல்லாமல் டிரெக்கிங், கோபுரம் என வெற்று அறிவிப்புகளை வெளியிட்டு ஏமாற்றப் பார்க்கிறது ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வர முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தே பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டை முழுவதுமாக புறக்கணித்த பட்ஜெட்டை வெட்கமேயில்லாமல் வரவேற்று அறிக்கை விடுகிறார் அடிமை பழனிசாமி. சொல்வதற்கு ஒன்றுமேயில்லாமல் தொடர்ந்து 9-ஆவது முறையாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து புதிய வரலாற்றுச் சாதனையை படைத்துள்ள நிதி அமைச்சருக்கு வாழ்த்துகள் என்று அறிக்கை வெளியிடுகிறார். அதிமுகவோ பாஜகவோ எத்தனை முகமூடிகளை அணிந்து வந்தாலும் வரும் சட்டமன்றத் தேர்தலில் மட்டுமல்ல இனி எப்போதும் தமிழ்நாட்டில் தலையெடுக்க முடியாது. இதனை உணர்ந்து கொண்டதால்தான் ஒன்றிய பட்ஜெட்டில்கூட தமிழ்நாட்டை வஞ்சித்திருக்கிறார்கள். பட்ஜெட்டில் தமிழ்நாட்டை ஒன்றும் செய்யாமல் வஞ்சிக்கும் பாஜக அரசுக்கு அவர்களின் அடிமைகளுக்கும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்’ எனத் தெரிவித்தார்.

## க்ரைம் கார்னர்

### வட மாநில பெண் கொலை வழக்கில் திடீர் திருப்பம்

**சென்னை, பிப்.3:**

பீகார் மாநிலம், ஷேக்பூரா மாவட்டத்தைச் சேர்ந்தவர் கவுரவ் குமார் (24). இவர் கொலை செய்யப்பட்டு, சாக்கு மூட்டையில் கட்டி அடையார், இந்திரா நகர், 1-வது அவென்யூவில் கடந்த 26-ம் தேதி வீசப்பட்டார். இது தொடர்பாக அடையாறு போலீஸார் வழக்குப் பதிந்து அதே மாநிலத்தைச் சேர்ந்த காவலாளி சிக்கந்தர் என்ற சத்யேந்தர் (30), கூட்டாளிகளான அதே மாநிலத்தைச் சேர்ந்த லலித் யாதவ் (40), விகாஷ் குமார் (24) ஆகிய 3 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். முன்னதாக நடத்தப்பட்ட விசாரணையில் கைது செய்யப்பட்ட மூவரும் முனிதா குமாரியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதும், ஒத்துழைக்காத அவரையும், தடுக்க முயன்ற அவரது கணவரையும், அழுது கொண்டிருந்த மகனையும் அடித்து கொலை செய்ததும் தெரியவந்தது. இதையடுத்து இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இதற்கிடையே பிரேத பரிசோதனையில் மாறுபட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக போலீசார் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: பெருங்குடி குப்பைக் கிடங்கில் கண்டறியப்பட்ட பீகார் மாநிலத்தைச் சேர்ந்த முனிதா குமாரி என்பவரின் பிரேதமானது ராயப்பேட்டை அரசு மருத்துவமனை பிரேத பரிசோதனைக் கூடத்தில் 31.01.2026 முற்பகல், உதவிப் பேராசிரியர்கள் மருத்துவர். சிவக்குமார் மற்றும் ரகுராம் ஆகியோர் அடங்கிய மருத்துவர் குழுவினரால் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி பெண் கற்பழிக்கப்பட்டதற்கான மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதற்கான தடயங்கள் எதுவுமில்லை என்றும், தலையில் இரும்பு கம்பியினால் தாக்கியதால் ஏற்பட்ட காயத்தின் காரணமாகவே இறப்பு ஏற்பட்டுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரிவாளை காட்டி போலீசாருக்கு கொலை மிரட்டல்: 4 பேர் கைது

**திருநெல்வேலி, பிப்.3:**

திருநெல்வேலி மாநகரம் மேலப்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறப்பு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் காளியப்பன் மற்றும் காவல் துறையினர் குறிச்சி வாய்க்கால் பாலம் அருகில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கே சந்தேகப்படும்படி வந்த மேலப்பாளையம், குறிச்சி 2வது தெருவை சேர்ந்த பேச்சுமுத்து மகன் முத்துராம் (வயது 19), அதே பகுதியை சேர்ந்த வெங்கடாசலம் மகன் பாலசுப்பிரமணியன்(19), ஆண்டவர் 1வது தெருவை சேர்ந்த லட்சுமணன் மகன் மாலை(19) மற்றும் சிறார் ஒருவர் ஆகியோரை நிறுத்தி போலீசார் சோதனை செய்ய முயன்றனர். அப்போது முன்னுக்குப் பின் முரணாக பேசியவர்கள், திடீரென அவர்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளை காட்டி காவல்துறையினரை மிரட்டி, அவதூறு வார்த்தைகளால் பேசி, காவல்துறையினரை பணி செய்ய விடாமல் தடுத்தும், பொதுமக்கள் மற்றும் காவல் துறையினருக்கு கொலை மிரட்டல் விடுத்தனர். இதனையடுத்து இளஞ்சிறார் உள்பட 4 பேரை கைது செய்து, அரிவாளை பறிமுதல் செய்து போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

### கொலை முயற்சி வழக்கில் 2 பேர் கைது

**திருநெல்வேலி, பிப்.3:**

திருநெல்வேலி, சங்கர்நகரைச் சேர்ந்த கணேசன் மகன் மணிகண்டன் (வயது 27) மற்றும் பொன்னையா மகன் கணேசன்(54) ஆகியோர் திருநெல்வேலி மாநகரப் பகுதியில் கொலை முயற்சி வழக்குகளில் சம்பந்தப்பட்டு பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டு வந்தனர். இதனையடுத்து திருநெல்வேலி மாநகர போலீஸ் துணை கமிஷனர் வினோத் சாந்தாராம் (கிழக்கு), போலீஸ் உதவி கமிஷனர் சுரேஷ் (பாளையங்கோட்டை சரகம் பொறுப்பு, மேலப்பாளையம் சரகம்), மேலப்பாளையம் போலீஸ் இன்ஸ்பெக்டர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) செந்தில்தங்கத்துரை ஆகியோரின் பரிந்துரையின்பேரில், திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் மணிவண்ணன் உத்தரவுப்படி நேற்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டனர்.

## விளையாட்டு செய்திகள்

### தேசிய சீனியர் பெண்கள் கபடி போட்டி: 32 ஆண்டுகளுக்குப் பிறகு பதக்கம் வென்ற தமிழக அணி



**மதுரை, பிப்.3:**


72 ஆவது தேசிய சீனியர் பெண்கள் கபடி போட்டி தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள ஜி.எம்.சி பாலயோகி உள்விளையாட்டு அரங்கில் 2026 ஜனவரி 27 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை நடை பெற்றது. இந்த போட்டியில் வேறு மாநில கபடி நடுவர்களின் பாரபட்சமான நடவ டிக்கைகளை எதிர்கொண்டு, வீராங்க னை கேப்டன் சினேகா தலைமை யிலான தமிழ்நாடு பெண்கள் அணி சிறப்பாக விளையாடி வெண்கலப் பதக்கத்தை வென்றது. தமிழ்நாடு அணி, உத்தரகண்ட், பீகார் அணிகளுடன் விளையாடி வெற்றிபெற்றது.பஞ்சாப் அணியிடம் தோல்வியைத் தழுவியது. முன் காலிறுதி ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது. பரபரப்பான காலி றுதிப்போட்டியில் 39-37 புள்ளிகளில் சண்டிகர் அணியை வீழ்த்தியது. இதன்மூலம் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற தமிழ்நாடு அணி 32 ஆண்டுகளுக்குப் பிறகு சீனியர் போட்டியில் வெண்கலப்பதக்கத்தை உறுதிசெய்தது. அரையிறுதிப் போட்டியில் ரயில்வே அணியிடம் தோற்றது. இறுதிப்போட்டியில் ஹரியானா அணி 3937 என்ற புள்ளிக் கணக்கில் இந்திய ரயில்வே அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது. ஹரி யானா அணியின் நிகிதா இறு திப்போட்டியில் 17 புள்ளிகள் எடுத்து அணியின் வெற்றிக்கு முக்கியக் கார ணமாக அமைந்தார். நடப்பு சாம்பியனாக இருந்த இந்திய ரயில்வே அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது. அரையிறுதி வரை முன்னேறிய தமிழ்நாடு மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய அணிகள் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றன. பல ஆண்டுகளுக்குப் பிறகு பதக் கத்தை வென்ற சீனியர் பெண்கள் அணி யினருக்கு தமிழக கபடி ரசிகர்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வரு கின்றனர்.

### தமிழக வீராங்கனை கார்த்திகாவுக்கு பரிவட்ட மரியாதை

**சென்னை, பிப்.3:**

தமிழ்நாடு அணியில் அனைத்து வீராங்கனைகளும் சிறப்பாக விளையாடினர். அதிக ரைடுகள் சென்று 90-க்கும் மேற்பட்ட புள்ளி களை குவித்த வீராங்கனை கார்த்திகா தமிழ்நாடு அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார். தேசியசீனியர் சாம்பியன்ஷிப் கபடி தொடரில் இந்தியாவிற்காக விளையாடி பெருமை சேர்த்த வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்பான முறையில் மரியாதை செய்யப்பட்டது. அதில், நமது தமிழக வீராங்கனை கார்த்திகாவுக்கு பரிவட்டம் அணிவித்து கௌரவித்து பாராட்டப்பட்டார். முன்னாள் இந்திய அணி வீராங்கனைகள் கார்த்திகாவுடன் உற்சாகமாகப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். சர்வதேச கபடி கூட்டமைப்பின் இயக்குநரான தேஜஸ்வி சிங் கெலாட், கார்த்திகாவின் அபார ஆட்டத்தை கண்டு பாராட்டி தனது கையால் விருது வழங்கி வாழ்த்தினார்.

# அணுமின் உற்பத்தி திட்டங்கள்: 2035-ஆம் ஆண்டு வரை சுங்க வரி விலக்கு நீட்டிப்பு!



**புதுடெல்லி, பிப்.3:**

அணுமின் உற்பத்தி திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருள்களின் இறக்குமதிக்கு அடிப்படை சுங்க வரியில் இருந்து அளிக்கப்பட்ட விலக்கு 2035-ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் உரையில் கூறுகையில், ‘அணுமின் உற்பத்தி திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருள்களின் இறக்குமதிக்கு அடிப்படை சுங்க வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்த வரி விலக்கு 2035-ஆம் ஆண்டு வரை, அனைத்து அணுமின் உற்பத்தி நிலையங்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது.

முக்கிய கனிமங்களை கையாள்வதற்கு தேவைப்படும் மூலதனப் பொருள்களின் இறக்குமதிக்கு அடிப்படை சுங்க வரியில் இருந்து விலக்களிக்கப்படுகிறது.

இதேபோல சிவில், பயிற்சி மற்றும் பிற விமானங்களின் தயாரிப்புக்குத் தேவைப்படும் கருவிகள், பாகங்களுக்கு அடிப்படை சுங்க வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. சிவில் மற்றும் பாதுகாப்புத் துறையில் விமானப் போக்குவரத்துத் தொழில் துறையை ஊக்குவிக்கும் நோக்கில், இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விலங்கியல் பூங்காக்களில் காட்சிப்படுத்தப்படும் மிருகங்கள் மற்றும் பறவைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அடிப்படை சுங்க வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அவற்றை இறக்குமதி செய்ய 30 சதவீதம் வரி விதிக்கப்படும்’ என்று தெரிவித்தார்.

# வரதட்சணை கொடுமையால் இளம்பெண் விஷம் குடித்து தற்கொலை

**பெங்களூரு, பிப்.3:**

கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டம் பேலூர் தாலுகா ஹுனசேகரே கிராமத்தை சேர்ந்தவர் இந்திரா (வயது 24). இவருக்கு கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு ஹாசன் தாலுகா எச்.மைலள்ளி கிராமத்தை சேர்ந்த சாமி என்பவருடன் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது, இந்திராவின் பெற்றோர் 60 கிராம் தங்கம் மற்றும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரொக்கத்தை வரதட்சணையாக கொடுத்துள்ளனர்.

இதையடுத்து, தம்பதிக்கு திருமணமாகி 4 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை. இதனால், தம்பதிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. மேலும், சாமியின் தாய் சங்கரம்மா மற்றும் சகோதரி புட்டி ஆகிய 2 பேரும் சேர்ந்து இந்திராவை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இதையடுத்து இந்திராவின் பெற்றோர் அவரை சமாதானம் செய்து கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளனர். இதற்கிடையே, சாமி பேக்கரி கடை நடத்தி வந்தார். அதில், நஷ்டம் ஏற்பட்டதால் பேக்கரியை மூடிவிட்டு அவர் கூலிவேலைக்கு செல்ல தொடங்கினார். ஆனால், கூலிவேலைக்கு செல்ல மனம் இல்லாமல் மீண்டும் தொழில் தொடங்க வேண்டும் என கூறி இந்திராவிடம் கூடுதல் வரதட்சணை கேட்டு சாமி கொடுமைப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் தம்பதி இடையே தகராறு ஏற்பட்டது. அப்போது, ஆத்திரமடைந்த இந்திரா விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

இதைப்பார்த்த, சாமி மற்றும் அவரது குடும்பத்தினர், அவரை ஹாசனில் உள்ள கிம்ஸ் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். ஆனாலும், இந்திரா சிகிச்சை பலன் அளிக்காமல் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த இந்திராவின் பெற்றோர், கொடுத்த புகாரின்பேரில் துட்டா போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னையில் பிப்.5 முதியவர்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம்

**சென்னை, பிப்.3:**

ட்வின்டெக் ஹெல்த்கேர் சர்வீசஸ் சார்பில் மூத்த குடிமக்களுக்கான பிரத்யேக இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

பிப்ரவரி 5-ம் தேதி (வியாழக்கிழமை) காலை 09.30 மணி முதல் பிற்பகல் 03.30 மணி வரை சென்னை மேற்கு மாம்பலம், கல்பவிருக்ஷா சேவா மையத்தில் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

இது தொடர்பான அறிக்கையில்,

“இது முற்றிலும் இலவசமாக சேவை. அனுபவம் வாய்ந்த கண் பராமரிப்பு நிபுணர்களால் நடத்தப்படவுள்ளது.

சீரான மற்றும் வசதியான சேவையை உறுதி செய்ய முன் பதிவு கட்டாயமாகும்.

இதில் கலந்து கொள்ள விரும்பும் மூத்த குடிமக்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பிப்.4ம் அன்று அல்லது அதற்கு முன் 97104 85295 என்ற எண்ணைத் தொடர்புகொள்வதன் மூலமோ அல்லது 7575INDIA@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமோ பதிவு செய்துகொள்ளலாம்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்புத் துறைக்கு பட்ஜெட்டில் முன்னுரிமை ஏன்? நிர்மலா சீதாராமன் விளக்கம்

**புதுடெல்லி, பிப்.3:**

‘‘நாட்டின் பாதுகாப்பை சமரசம் செய்ய முடியாது’’ என பாதுகாப்பு துறைக்கு பட்ஜெட்டில் முன்னுரிமை அளித்தது குறித்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

‘‘நாட்டின் பாதுகாப்பை சமரசம் செய்ய முடியாது. கடந்த 10 ஆண்டுகளில் செலவிடப்பட்ட பணம் எவ்வளவு உதவியாக இருந்தது என்பதை ‘ஆபரேஷன் சிந்தூர்’ ராணுவ நடவடிக்கை எடுத்துரைத்தது. பாதுகாப்பு படை வீரர்களுக்கு அடிப்படை உபகரணங்கள் இல்லாத ஒரு காலம் இருந்தது.

நமது வீரர்களுக்கு குண்டு துளைக்காத ஜாக்கெட்டுகள் கிடைக்கவில்லை. துப்பாக்கிகள் இருந்தாலும் அவர்களிடம் தோட்டாக்கள் இருக்காது. தற்போது தான் அந்த நிலை மாறி இருக்கிறது.

முரண்பட்ட கோரிக்கையை நிர்வகிப்பது என்பது ஒவ்வொரு நிதியமைச்சர் எதிர்கொள்ளும் பிரச்சினையாகும்.



கூடுதல் வளங்களை பெறுவதற்கு வரிகளை உயர்த்துவது எப்போதும் தீர்வாகாது. ஆனால் நாட்டின் தேவைகளுக்கு பணம் தேவைப்படுகிறது.

உதாரணமாக கோவிட் காலத்தில் தடுப்பூசிகளை வாங்க வேண்டிய அவசியம் இருந்தபோதிலும், குடிமக்கள் மீது வரிகள் உயர்த்தப்படக்கூடாது. மக்கள் மீது ஒரு ரூபாய் வரி விதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை என்று பிரதமர் மோடி தெளிவுபடுத்தினார்.

உயிர்காக்க தடுப்பூசி...

இந்தியாவில் தயாரிக்கப்பட்டாலும் சரி இறக்குமதி செய்யப்பட்டாலும் சரி, நாம் தடுப்பூசி பெற வேண்டியிருந்தது. உயிர் காப்பாற்றப்பட வேண்டும். ஒரு ஊசிக்கு ஒரு குடிமகனை 500 ரூபாய் செலுத்த சொல்ல முடியாது. நெருக்கடியின் போது அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு கணிசமாக கடன் வாங்க வேண்டியிருந்தது. தற்போது பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட உடன் கடனைக் குறைப்பதற்கும், நிதி சமநிலையை மீட்டெடுப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டது.

இவ்வாறு நிர்மலா சீதாராமன் கூறினார்.

## வணிகச் செய்திகள்

### வெளிநாடு வாழ் இந்தியர்கள் இந்திய பங்குச் சந்தையில் பிஐஎஸ் மூலம் முதலீடு செய்யலாம்!

**புதுடெல்லி, பிப்.2:**

வெளிநாடுவாழ் இந்தியர்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆகியோர் இந்திய பங்குச் சந்தையில் போர்ட்போலியோ முதலீட்டு திட்டத்தின் கீழ் (பிஐஎஸ்) முதலீடு செய்யலாம் என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டில் நேற்று அறிவித்தார். ரிசர்வ் வங்கி அனுமதிக்கும் சிறப்பு வங்கி கணக்கு மூலம் அவர்கள் இந்திய பங்குச் சந்தையில் பங்குகளை வாங்கி, விற்கலாம். இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்து வருவதால், கடந்த ஆண்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்திய பங்குச் சந்தையில் இருந்து பங்குகளை விற்று வெளியேறினர். இந்த ஆண்டிலும் பங்குகளை விற்று வருகின்றனர். இந்த நேரத்தில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. வழக்கமாக தனிநபர் முதலீட்டு வரம்பு 5% ஆகவும், ஒரு நிறுவனத்தின் முதலீட்டு வரம்பு 10% ஆகவும் உள்ளது. தற்போது வெளிநாடுவாழ் இந்தியரின் தனிநபர் முதலீடு 10% ஆகவும், வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான ஒட்டுமொத்த முதலீட்டு வரம்பு 24% ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

### சிகரெட், பான் மசாலா விலை உயர்ந்தது!

புகையிலை, வாசனை புகையிலை, குட்கா பேக்கிங் இயந்திரங்கள் விதிகள் 2026 என்ற அரசாணை வெளியிடப்பட்டது. இந்த புதிய விதிகள் மற்றும் சிகரெட், பான் மசாலா தொடர்பான வரி விகிதங்கள் நேற்று முதல் அமலுக்கு வந்தது. இதனால் சிகரெட், பான் மசாலா உள்ளிட்ட புகையிலை பொருட்கள் மீதான விலை உயர்ந்துள்ளது.

# 2047-ம் ஆண்டின் வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கு அடித்தளம் போடும் பட்ஜெட்: மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் கருத்து

**புதுடெல்லி, பிப்.3:**

மத்திய அரசின் பட்ஜெட், 2047-ம் ஆண்டின் வளர்ச்சி அடைந்த பாரதத்துக்கு அடித்தளம் போடும் பட்ஜெட் என மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் கூறினார்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஸ் கோயல், மத்திய அரசின் பட்ஜெட் குறித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-



இந்த பட்ஜெட் மக்களை அர்ப்பணிப்புடன் பணியாற்ற ஊக்குவிக்கிறது. எதிர்காலத்துக்கு தயாராக இருக்கும் இந்தியாவுக்கான பட்ஜெட். 2047-ம் ஆண்டின் வளர்ச்சி அடைந்த பாரதத்துக்கு அடித்தளம் அமைக்கும் பட்ஜெட்.

இந்த பட்ஜெட்டில் உற்பத்தித் துறைக்கு கவனம் செலுத்தப்பட்டு உள்ளது. உலகில் வேகமாக வளர்ந்து வரும் நமது பொருளாதாரத்தை முன்னேற்ற பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன.

அதிவேக ரெயில்கள், 2 அடுக்கு மற்றும் 3 அடுக்கு நகரங்களின் மேம்பாடு, உள்நாட்டு நீர்வழி, இளைஞர் மேம்பாடு போன்றவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டு உள்ளது.

செமி கண்டக்டர் 2.0 திட்டத்தை அறிமுகப்படுத்தியது உள்நாட்டு வினியோக சங்கிலிகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கு ரூ.40 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

இந்தியா முழுவதும் கப்பல் போக்குவரத்தை விரிவுபடுத்தும் திட்டங்களும் அறிவிக்கப்பட்டு உள்ளன. கப்பல் கொள்கலன்களை உள்ளூரிலேயே உற்பத்தி செய்ய ரூ.10 ஆயிரம் கோடி முதலீடு செய்யப்படுகிறது. இது இந்திய பொருட்கள் உலகளாவிய சந்தைகளை எளிதாக அடைய உதவும். இதுபோல சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறைக்கு ரூ.10 ஆயிரம் கோடி அறிவிக்கப்பட்டு உள்ளது. ஜவுளித்துறையில் ஒருங்கிணைந்த திட்டம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. 7 அதிவேக ரெயில் தடங்கள், 5 பல்கலைக்கழக நகரங்கள் உருவாக்கப்படுகின்றன.

எதிர்க்கட்சி கள் எப்படியும் பேசுவார்கள். அவர்களுக்கு சிறு, குறு, நடுத்தர தொழில்கள் துறை மேம்படுவதில் விருப்பம் இல்லையா? இவ்வாறு அவர் கூறினார்.

## காஷ்மீரில் லேசான நிலநடுக்கம்; ரிக்டர் அளவில் 4.6 ஆக பதிவு

**ஸ்ரீநகர், பிப்.3:**

ஜம்மு-காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் நேற்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. அம்மாநிலத்தில் பதான் பகுதியை மையமாக கொண்டு நேற்று அதிகாலை 5.35 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 4.6 ஆக இந்த நிலநடுக்கம் பதிவானது. நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் லேசாக அதிர்ந்தன. அதேவேளை, இந்த நிலநடுக்கத்தில் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

## தேர்தல் ஆணையத்துக்கு 25% நிதி அதிகரிப்பு

**புதுடெல்லி, பிப்.3:**

2026-27ம் நிதியாண்டில் தலைமை தேர்தல் ஆணையத்துக்காக ரூ.382.22 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2025-26-ல் ஒதுக்கப்பட்டதை விட 25% அதிகம். இதில் ரூ.367.69 கோடி நிதி, தேர்தல் தொடர்பான செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நிதி, நிர்வாக மற்றும் செயல்பாட்டுச் செல வினங்களுக்காக செலவிடப்படும். மேலும், வாக்காளர் அடையாள அட்டை தயாரிப்பதற்காக ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அஜித்பவார் மறைவு: தேர்தல் பிரசாரத்தை கைவிட்ட முதல்-மந்திரி பட்னாவிஸ்

**மும்பை, பிப்.3:**

பாராமதியில் கடந்த ஜனவரி 28-ந்தேதி நடந்த விமான விபத்தில் அஜித்பவார் மரணம் அடைந்தார். இதற்காக 3 நாட்கள் அரசுமுறை துக்கம் கடைபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக, மாநில தேர்தல் ஆணையம் மாவட்ட பஞ்சாயத்து, பஞ்சாயத்து சமிதிகளுக்கான தேர்தல் அட்டவணையை மாற்றி அமைத்தது. அதன்படி தேர்தல் தேதி வருகிற 5-ந்தேதிக்கு பதிலாக 7-ந்தேதி மாற்றப்பட்டது. வாக்கு எண்ணிக்கை 9-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இந்த தேர்தல் பிரசாரத்துக்கான இறுதி நாள் 5-ந்தேதி ஆகும்.

மராட்டியத்தின் முக்கிய தலைவர் ஒருவரின் மறைவு, மாநில அரசியலில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ள நிலையில், முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் மாநிலத்தில் வரவிருக்கும் உள்ளாட்சி தேர்தல் பிரசாரத்தில் தான் பங்கேற்கப்போவதில்லை என்று வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

இந்த மாவட்ட பஞ்சாயத்து தேர்தலுக்காக முதல்-மந்திரி பட்னாவிஸ் 7 நாட்களில் சுமார் 22 பொதுக்கூட்டங்களில் உரையாற்ற திட்டமிட்டிருந்தார். ஆனால், அனைத்து கூட்டங்களையும் அவர் ரத்து செய்துள்ளார். இருப்பினும் கட்சியின் உள்ளூர் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் தேர்தல் பணிகளையும் பிரசாரத்தையும் தடையின்றி முன்னெடுக்குமாறு தேவேந்திர பட்னாவிஸ் அறிவுறுத்தியுள்ளார்.

## ஜனாதிபதி மாளிகை வளாக தோட்டம் திறப்பு: பொதுமக்கள் இன்று முதல் பார்வையிடலாம்

**புதுடெல்லி, பிப்.3:**

டெல்லியில் ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் 15 ஏக்கர் பரப்பளவில் அழகாக வடிவமைக்கப்பட்ட தோட்டம் உள்ளது.

1917-ம் ஆண்டு சர் எட்வின் லுட்யன்ஸ் வடிவமைத்த இந்த தோட்டம் இங்கிலாந்து மற்றும் முகலாய பாணிகளை கொண்டு வடிவமைக்கப்பட்டது. இதில் பல்வேறு மலர் தோட்டங்கள் உள்ளன. முன்னாள் ஜனாதிபதிகள் அப்துல் கலாம், ராம்நாத் கோவிந்த் ஆகியோரின் ஆட்சி காலத்தில், மூலிகை, போன்சாய் தோட்டம் மற்றும் ஆரோக்கிய வனம் போன்ற கூடுதல் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன.



இந்த தோட்டம் ஒவ்வொரு ஆண்டும் குளிர்காலத்தில் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்படுவது வழக்கம். அதுபோல் இந்த ஆண்டு இந்த தோட்டம் பொதுமக்கள் பார்வைக்காக (செவ்வாய்க்கிழமை) திறக்கப்பட இருக்கிறது. இதற்கான திறப்பு விழா நேற்று நடைபெற்றது. விழாவில் ஜனாதிபதி முர்மு கலந்து கொண்டு தோட்டத்தின் நுழைவாயிலாக செயல்படும் பிரதான நீரூற்றில் நின்று, அவர் தோட்டத்தை பொதுமக்களுக்கு திறந்து வைத்தார். இந்த தோட்டத்தில் டூலிப்ஸ் மற்றும் பல்வேறு வகையான ரோஜாக்களை தவிர பீம், அர்ஜுன், அந்தர் தெரசா உள்ளிட்ட 145 வகையான ரோஜாக்கள் உள்ளன. மேலும் 80-க்கும் மேற்பட்ட பிற பூக்கள் உள்ளன. இந்த ஆண்டு பார்வையாளர்கள் ஒரு சலசலக்கும் ஓடை, அருவிகளுடன் கூடிய பாதைகள் கொண்ட தோட்டத்தை காணலாம். வாரத்தில் 6 நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை மக்கள் இந்த தோட்டத்தை பார்வையிடலாம். பராமரிப்பு நாளான திங்கட்கிழமை, மார்ச் 4-ந்தேதி ஹோலி பண்டிகை அன்று அனுமதி இல்லை. மார்ச் 31-ந்தேதி வரை இந்த தோட்டம் திறந்து இருக்கும். இந்த பூங்கா வளாகம் மார்ச் 3 (பாதுகாப்பு படை வீரர்களுக்கு), மார்ச் 5 (மூத்த குடிமக்களுக்கு), மார்ச் 10 (பெண்கள் மற்றும் பழங்குடியின பெண்களின் சுயஉதவி குழுக்களுக்கு), மார்ச் 13 மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு பிரிவினருக்காக திறக்கப்படும்.

அங்குள்ள அருங்காட்சியகத்தையும் மக்கள் பார்வையிடலாம். ஒவ்வொரு சனிக்கிழமையும் ஜனாதிபதி மாளிகை முன் வளாகத்தில் நடைபெறும் பாதுகாப்பு படையினர் அணிவகுப்பையும் பார்வையிடலாம். இந்த தோட்டத்தை பார்வையிட இணையதளத்தில் ஆன்லைன் முறையில் மட்டுமே டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியும். பூங்காவில் நுழைய முன்பதிவு மற்றும் அனுமதி இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மருத்துவமனையில் உதவி மறுப்பு.. தள்ளுவண்டியில் 12.கி.மீ. கொண்டு செல்லப்பட்ட பெண் உடல்!

**ஃபரீதாபாத், பிப்.3:**

பெண்ணின் உடலை தள்ளுவண்டியில் அவரது கணவர் ஏற்றிச் செல்வதையும், அவர்களது மகன் பெண்ணின் முகத்தை துணியால் மூடியபடி செல்வதையும் காட்டும் விடியோ சமூக ஊடகங்களில் பரவியதையடுத்து இந்த விஷயம் வெளிச்சத்துக்கு வந்தது. இச்சம்பவம் ஹரியாணா மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதோடு, இதுகுறித்து விசாரிக்க மருத்துவமனை நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. உயிரிழந்த அனுராதா தேவி (35), தில்லி எய்ம்ஸ் உள்பட பல மருத்துவமனைகளில் பல மாதங்களாக சிகிச்சை பெற்று வந்தார். அவரது கணவர், ஜுன்ஜுன், தனது சேமிப்பு தீர்ந்துவிட்டதாகவும், சரூர்பூர் கிராமத்தில் உள்ள அவர்களது வீட்டிற்கு உடலை எடுத்துச் செல்ல ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்ய மருத்துவமனை மருத்துவிட்டதாகவும் தெரிவித்தார். தனியார் ஆம்புலன்ஸ் சேவைகள் ரூ.500 முதல் ரூ.700 வரை கேட்டதால் தள்ளுவண்டியை ஏற்பாடு செய்ததாக அவர் தெரிவித்தார். வீட்டை சென்றடையும் வரை அவர் வண்டியுடன் 12 கி.மீ. நடந்து சென்றார். பின்னர், இறுதிச் சடங்குகளைச் செய்ய பக்கத்து வீட்டுக்காரர்களிடம் கடன் வாங்கியதாக அவர் கூறினார்.

'அரசு ஆம்புலன்ஸ்கள் உடல்களை ஏற்றிச் செல்வதற்காக இல்லை என்றும், செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனங்கள் கிடைக்கும். ஆனால், அதற்கும் முறையான கோரிக்கை தேவை' என்று மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக ஃபரீதாபாத் செஞ்சிலுவைச் சங்கச் செயலர் பிஜேந்தர் சௌரத் கூறுகையில், மரணம் குறித்து மருத்தவமனை கட்டுப்பாட்டு அறை தகவல் தெரிவித்தால் வாகனம் இலவசமாக வழங்கப்படும். ஆனால், இந்த விவகாரத்தில் எங்களுக்கு எந்த அழைப்பும் வரவில்லை' என தெரிவித்தார். இது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த மருத்துவமனையில் சிவில் சர்ஜன் டாக்டர் ஜெயந்த் அஹுஜா, 'முதன்மை மருத்துவ அதிகாரி டாக்டர் ராம் பகத் தலைமையில் மூத்த மருத்துவர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ளது. குழு தனது அறிக்கையை சமர்ப்பித்த பிறகு, மருத்துவமனை ஊழியர்களின் அலட்சியமே காரணம் என கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' எனத் தெரிவித்தார்.

## மத்திய பட்ஜெட் மிகவும் மந்தமானது: ப.சிதம்பரம் விமர்சனம்

**புதுடெல்லி, பிப்.3:**

மத்திய அரசின் பட்ஜெட் மிகவும் மந்தமான பட்ஜெட்டாக இருப்பதாக முன்னாள் மத்திய நிதியமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் குறித்து முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கூறியிருப்பதாவது: வேலை வாய்ப்பின்மை, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, நாட்டின் முன் எழுந்துள்ள பல சவால்களை மத்திய நிதி அமைச்சர் கவனத்தில் கொள்ளவில்லை. ரூபாயின் மதிப்பை வலுப்படுத்த எந்த நடவடிக்கையும் பட்ஜெட்டில் குறிப்பிடப்படவில்லை. முக்கியமான துறைகளுக்கான ஒதுக்கீடு மற்றும் செலவினம் குறைந்துள்ளது. மத்திய அரசின் மூலதனச் செலவு குறைந்துள்ளது.

ஜல்ஜீவன் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு ரூ.67 ஆயிரம் கோடியில் இருந்து ரூ.17 ஆயிரம் கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு நிலவரங்கள் கவலை அளிப்பதாகவே உள்ளன. நிதிப்பற்றாக்குறை சொற்ப அளவாக 0.1 சதவீதம் மட்டுமே குறைக்கப்பட்டு உள்ளது.

பொருளாதார வியூகப்படி பார்த்தால் மத்திய பட்ஜெட் மிகப்பெரிய தோல்வி அடைந்துள்ளது. எதிர்பார்ப்புகளுக்கு சற்றும் ஈடுகொடுக்காத மந்தமான பட்ஜெட்டாக இருக்கிறது. இதை மந்தமான பட்ஜெட் என்றே சொல்லலாம்.

நாட்டின் உண்மையான நெருக்கடி விஷயங்களுக்கு பட்ஜெட்டில் எந்தப் பதிலும் இல்லை. வேலையில்லாத இளைஞர்கள், உற்பத்தி வீழ்ச்சி, முதலீட்டாளர்கள் மூலதனத்தை திரும்பப் பெறுதல், வீட்டு சேமிப்பு வீழ்ச்சியடைதல், துயரத்தில் இருக்கும் விவசாயிகள் உள்ளிட்ட நாட்டின் உண்மையான சவால்களை மத்திய அரசு கவனிக்கவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பாலஸ்தீனம் தனி நாடாக உருவாக இந்தியா ஆதரவு

**புதுடெல்லி, பிப்.3:**

இந்தியா மற்றும் 19 அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நடைபெற்றது. அப்போது, எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு இரு தரப்பிலும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பயங்கரவாத வலையமைப்புகள், நிதி மற்றும் உட்கட்டமைப்புகளை அழிக்க சர்வதேச அளவிலான கூட்டு செயல்பாடு அவசியம் என்பதை, கூட்டத்தில் பங்கேற்ற அரபு நாடுகள் ஒப்புக்கொண்டன.



இந்தக் கூட்டத்திற்கு பின், நம் நாடும் அரபு நாடுகளும் இணைந்து கூட்டு பிரகடனத்தை வெளியிட்டன. அதில், பயங்கரவாதம் எந்த வடிவில் வந்தாலும் அதை ஒழிக்க தேவையான கூட்டுறவை தீவிரப்படுத்துவது என்றும், பயங்கரவாதத்திற்கு எதிராக நம் நாடு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழுமையான மற்றும் நிலையான ஆதரவு தருவது என்றும் அரபு நாடுகள் உறுதியளித்துள்ளன.

இந்த கூட்டத்தின் போது, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்னைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக, பாலஸ்தீனம் சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடாக உருவாக வேண்டும் என்பதற்கு, நம் நாடு முழு ஆதரவு அளிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

காசாவில் புனரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வசதியாக, அரபு நாடுகளின் திட்டப்படி சண்டை நிறுத்தம் முழுதாக அமல்படுத்த வேண்டும் என இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக, கடந்த ஆண்டு எகிப்தின் ஷரம் எல்-ஷேக்கில் நடந்த அமைதி உச்சி மாநாட்டில் காசா தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இந்தியா வரவேற்பு அளித்தது.

டிரம்ப் சமீபத்தில் காசா அமைதி வாரியத்தை அமைத்த நிலையில், இந்தியா - அரபு நாடுகள் இடையே நடந்த இந்த கூட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## 6 ஆண்டுகளுக்குப் பின்.. சீனாவின் ஷாங்காய்க்கு ஏர் இந்தியா நேரடி விமான சேவை!

**புதுடெல்லி, பிப்.3:**

டில்லி - ஷாங்காய் இடையே 6 ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் நேரடி விமான சேவையை ஏர் இந்தியா நிறுவனம் தொடங்கியுள்ளது. கடந்த 2020-ஆம் ஆண்டு தொடக்கத்தில், இந்தியா - சீனா இடையேயான நேரடி விமான சேவை நிறுத்தப்பட்டிருந்தத நிலையில், சுமார் 6 ஆண்டுகளுக்குப்பின் 2026, பிப்ரவரியில் இருநாடுகளுக்குமிடையே மீண்டும் நேரடி விமானம் இயக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஷாங்காய் மாநகரின் புடோங் சர்வதேச விமான நிலையத்திலிருந்து புதுதில்லிக்கு 230 பயணிகளுடன் ஏர் இந்தியாவின் போயிங் 787 ரக விமானம் இன்று(பிப். 1) காலை புறப்பட்டது என்று இந்தியத் தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே மக்கள் தொடர்பு, வணிகம், கல்வி உள்பட நிறுவன ரீதியான தொடர்புக்கு பலனிக்கும் என்று தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ம.பி.யில் சாலையில் நடனமாடியபடி சிக்னல் கொடுத்த தலைமை காவலர் பதவி இறக்கம்

**இந்தூர், பிப்.3:**

மத்தியப் பிரதேசம் இந்தூரில் பணியாற்றும் போக்குவரத்து தலைமைக் காவலர் ரஞ்சித் சிங். இவர் மைக்கேல் ஜாக்சன் போல் 'மூன் வாக்' நடனமாடி சிக்னல் கொடுத்தார். இந்த வீடியோ டி.வி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலாக பரவியது. இது குறித்த மத்தியப் பிரதேச காவல்துறை விசாரணை நடத்தி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது. தலைமைக் காவலராக பணியாற்றிய ரஞ்சித் சிங்கை, காவலராக பதவியிறக்கம் செய்து கூடுதல் துணை ஆணையர் ராஜேஸ் தந்தோத்யா உத்தரவிட்டுள்ளார். ரஞ்சித் சிங் மீது ஒரு பெண் அளித்த புகாரில் ஏற்கெனவே ஒரு விசாரணை நடந்து வருகிறது. சமூகம் ஊடகம் மூலம் தொடர்பு கொண்ட பெண் ஒருவருக்கு, தன்னை பார்க்க இந்தூர் வரும்படியும், அதற்கு விமான டிக்கெட் ஏற்பாடு செய்வதாகவும் கூறியுள்ளார். இது குறித்து அந்த பெண் அளித்த புகாரின் பேரில் ரஞ்சித் சிங் மீது ஏற்கெனவே துறை ரீதியான விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சாலையில் நடனமாடி போக்குவரத்து பணியில் ஈடுபட்டதற்காக அவர் பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## இந்தியாவுக்குள் 4 சீன டாங்கிகள் நுழைந்ததாக ராகுல் குற்றச்சாட்டு

**புதுடெல்லி, பிப்.3:**

குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் மக்களவையில் இன்று நடைபெற்றது. அப்போது பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, "பாஜகவைச் சேர்ந்த ஓர் இளம் எம்.பி. (தேஜஸ்வி சூர்யா) காங்கிரஸ் கட்சிக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார். எங்கள் தேசபக்தி குறித்தும் கலாச்சாரம் குறித்த எங்கள் புரிதல் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். எங்களைப் பற்றி அவர் கேள்வி எழுப்பியதால் நான் அது தொடர்பான ஒரு விஷயத்தில் இருந்து எனது உரையை தொடங்க விரும்புகிறேன்.

இது முன்னாள் ராணுவத் தளபதி நரவனேவின் நினைவுக் குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டது. இதை நீங்கள் நன்றாக கேட்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்போதுதான், யார் தேச பக்தி உள்ளவர், யார் இல்லாதவர் என்பதை நீங்கள் சரியாக புரிந்து கொள்வீர்கள். இது, நான்கு சீன டாங்கிகள் இந்திய எல்லைக்குள் நுழைந்தபோது நடந்த சம்பவம் பற்றியது. அவை டோக்லாமில் உள்ள ஒரு முகட்டைக் கைப்பற்றிக் கொண்டிருந்தன" என தெரிவித்தார்.

அப்போது ஆளும் கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் எழுந்து, "மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மேற்கோள் காட்டும் புத்தகத்தை அவையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஏனெனில், அவர் குறிப்பிடும் புத்தகம் இன்னும் வெளியிடப்படவில்லை" என தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த ராகுல் காந்தி, "எனது ஆதாரம் நம்பகமானது. டிசம்பர் 2019 முதல் ஏப்ரல் 2022 வரை ராணுவத் தளபதியாக இருந்த முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம்.நரவணேவின் வெளியிடப்படாத நினைவுக் குறிப்புகளை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகை கட்டுரையில் இடம்பெற்றுள்ளன" என தெரிவித்தார்.

'வெளியிடப்படாத விஷயங்களை அவையில் வாசிக்கக் கூடாது' என்று ஆளும் தரப்பு எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். அப்போது சபாநாயகர் ஓம் பிர்லா, 'வெளியிடப்படாத விஷயங்களை அவையில் வாசிக்க முடியாது' என தெரிவித்து, அதை வாசிக்கக் கூடாது என உத்தரவிட்டார். சட்டம் மற்றும் விதிகளின்படி அவை நடைபெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தனது கருத்தை முழுமையாக தெரிவிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் கூறினார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பேசிய மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, "பத்திரிகைகள் அல்லது செய்தித்தாள்களில் இருந்து வரும் கட்டுரைகளை அவையில் மேற்கோள் காட்ட முடியாது என்று சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார். அவையில் விவாதம் என்பது சட்டங்களின்படி நடத்தப்பட வேண்டும். சபாநாயகரின் தீர்ப்பை மதிக்காத ஒரு உறுப்பினர் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் நாம் விவாதிக்க வேண்டும்" என கூறினார். இரு தரப்பு எம்பிக்களும் அமளியில் ஈடுபட்ட நிலையில், அவையை மாலை 4 மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

## ஊழல் புகார்: சீன ராணுவத்தின் 2 தளபதிகள் பதவி நீக்கம்

**பெய்ஜிங், பிப்.3:**

சீன அதிபர் ஜி ஜின்பிங் அந்த நாட்டின் மத்திய ராணுவ கமிஷனின் (சிஎம்சி) தலைவராக செயல்படுகிறார். இந்த கமிஷனின் கட்டுப்பாட்டின் கீழ் சீன ராணுவம், கடற்படை, விமானப்படை, ஏவுகணைப் படை ஆகியவை செயல்படுகின்றன. சிஎம்சி அமைப்பின் துணைத் தலைவராக ஜாங் யூக்ஸியா பதவி வகித்து வந்தார்.

ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் சில நாட்களுக்கு முன்பு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். சிஎம்சி அமைப்பின் பணியாளர் பிரிவு தலைவராக பணியாற்றிய லீயு ஜென்ஸியும் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## உக்ரைனில் ரஷியா நடத்திய டிரோன் தாக்குதலில் 12 பேர் பலி

**கீவ், பிப்.3:**

உக்ரைனின் நிப்ரோ நகரில் நேற்று ரஷிய ராணுவம் திடீரென டிரோன் தாக்குதல் நடத்தியது. இதில் சுரங்கத் தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் மீது குண்டு பாய்ந்ததில் 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

உக்ரைனின் மிகப்பெரிய தனியார் எரிசக்தி நிறுவனமான 'டி.டி.ஈ.கே' அந்தப் பஸ் தங்களுக்குச் சொந்தமானது என உறுதிப்படுத்தியுள்ளது. தங்களது சுரங்கத் தொழிலாளர்கள் பணி முடிந்து திரும்பியபோது இந்த மனிதாபிமானமற்ற தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கிடையே போரை முடிவுக்குக் கொண்டுவர ரஷியா மற்றும் உக்ரைன் இடையே அடுத்த வாரம் மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## தலாய் லாமாவுக்கு கிராமி விருது: சீனா கடும் ஆட்சேபனை!

**பெய்ஜிங், பிப்.3:**

தலாய் லாமாவுக்கு கிராமி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருப்பதற்கு சீன அரசு கடும் ஆட்சேபனையை வெளிப்படுத்தியுள்ளது.

புத்த மதத்தின் தலைமைப் பதவிகளுள் முக்கியமான தலாய் லாமாவாகவிருக்கும் 'டென்ஸின் க்யாட்சோ (90)' மீது சீனா தொடர்ந்து அதிருப்தி போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. இந்த நிலையில், லாஸ் ஏஞ்சல்ஸ் மாநகரில் விமரிசையாக நடைபெற்ற 68-ஆவது கிராமி விருதளிப்பு விழாவில், த்லாய் லாமாவின் ஆன்மீகப் படைப்பான 'மெடிடேசன்ஸ்: தி ரிஃப்லெக்சன்ஸ் ஆஃப் ஹிஸ் ஹோலினெஸ் தி தலாய் லாமா' எனும் ஆன்மீக சொற்பொழிவுக்கு 'சிறந்த ஒலி வடிவ கதைச் சொல்லும் படைப்பு' பிரிவில் 'கிராமி விருது' வழங்கப்பட்டது. இதுவே, தலாய் லாமா பெறும் முதல் கிராமி விருதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து, சீன அரசின் கருத்தை வெளிப்படுத்திய அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான், "தலாய் லாமா பரிசுத்தமானதொரு ஆன்மீக நபரல்லவே. சீனாவுக்கெதிரான மதத்தின் பெயரிலான தமது பிரிவினைவாத நடவடிக்கைகளுக்காக அவர் சீனாவிலிருந்து அரசியல் ரீதியாக வெளியேற்றப்பட்டுள்ளவராவார்.

இந்த நிலையில், இத்தகையை விருதையொரு கருவியாகப் பயன்படுத்தி சீனாவுக்கெதிரான நடவடிக்கைகளை சில கட்சிகள் மேற்கொள்வதை சீனா கடுமையாக எதிர்க்கிறது" என்றார்.

இதனிடையே, தமக்கான கிராமி அங்கீகாரம் பற்றி குறிப்பிட்டுள்ள தலாய் லாமா, இவ்விருதைப் பரிவு மற்றும் மனிதாபிமானத்துடன் பெற்றுக்கொள்வதாகவும், தனியொருவனாக தனது சாதனை என்ரு இதனைக் கருத முடியாதெனவும் அவர் எளிய மனப்போக்குடன் கருத்து தெரிவித்தார். மேலும், "அமைதி, பரிவு, சுற்றுச்சூழல் மீதான அக்கறை, ஒருவரை மனிதநேயத்துடன் புரிந்துகொள்வது ஆகிய குணங்கள் அனைத்து 80 கோடி மனிதர்களின் கூட்டு நலனுக்கு அவசியமானவையாகும். கிராமி அங்கீகாரம் மூலம் மேற்கண்ட செய்தி பரவலாகச் சென்றடைய உதவும்" என்றும் குறிப்பிட்டார்.

சீனாவின் கடும் அழுத்தத்தால், கடந்த 1959களில் திபெத்திலிருந்து வெளியேறி இமாசலப் பிரதேசத்தின் தர்மசாலாவில் தஞ்சமடைந்த தலாய் லாமாவுக்கு, திபெத்திய விடுதலைக்காக தொடர்ந்து அமைதி வழியில் மேற்கொள்ளும் போராட்டத்துக்காக கடந்த 1989இல் 'அமைதிக்கான நோபல் பரிசு' வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு "கிராமி விருது"

**லாஸ் ஏஞ்சல்ஸ், பிப்.3:**

திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு "கிராமி விருது" வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக, அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா (இரு முறை), மிட்செல் ஒபாமா மற்றும் ஸ்டீவ் ஜாப்ஸ் (மறைவிற்கு பின்) ஆகியோர் இந்த விருதைப் பெற்றுள்ளனர்.

ஆண்டுதோறும் இசையில் சிறந்து விளங்கும் இசைக்கலைஞர்களை கவுரப்படுத்தும் விதமாக, கிராமி விருது அமெரிக்காவில் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், 68வது கிராமி விருது விழா லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இன்று நடந்தது. இதில், உலகின் முன்னணி பிரபலகங்கள் மிடுக்கான உடைமைகளை அணிந்து



பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில், திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு கிராமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த ஆடியோ புத்தகப் பிரிவில் 'மெடிடேஷன்ஸ்: தி ரிப்ளக்ஷன்ஸ் ஆப் ஹி ஹோலினஸ் தி தலாய் லாமா' (*Meditations: The Reflections of His Holiness the Dalai Lama*) என்ற ஆல்பத்திற்கு இந்த விருது வழங்கப்பட்டது.

தலாய் லாமாவின் போதனைகளுக்கு கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரமாக இந்த கிராமி விருது கருதப்படுகிறது. தலாய் லாமா சார்பாக இசைக்கலைஞர் ரூப்ஸ் மைன்ரெர் இந்த விருதை பெற்றுக்கொண்டார்.

இந்த விருது குறித்து தெரிவித்த தலாய் லாமா பேசுகையில், 'இந்த அங்கீகாரத்தை நான் நன்றியுடனும் பணிவுடனும் ஏற்றுக்கொள்கிறேன். இதை நான் தனிப்பட்ட சாதனையாகப் பார்க்கவில்லை. மாறாக, நம் அனைவருக்கும் இருக்கும் உலகளாவிய பொறுப்பிற்குக் கிடைத்த அங்கீகாரமாகவே பார்க்கிறேன். அமைதி, கருணை மற்றும் மனிதநேயம் ஆகியவற்றின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளேன். இதனை உலகளவில் எடுத்துச் செல்ல இந்த விருது உதவும் என்று நான் நம்புகிறேன்'. என்றார்.

*யார் யாருக்கு விருது?*

கிராம விருது வென்றவர்களின் பட்டியல்:

சிறந்த ஆல்பம்: *Debi Tirar Mas Fotos* - பேட் பண்ணி

சிறந்த பதிவு: *Luther* - கென்ட்ரிக் லாமர்

சிறந்த பாடல்: *Wildflower* - பில்லி எலிஷ்

சிறந்த அறிமுக நட்சத்திரம் ஒலிவியா டீன்

பாப் மற்றும் ராக் சிறந்த பாப் குரல் ஆல்பம்: *MAYHEM* - லேடி காகா

சிறந்த பாப் தனிநபர்ருக்கான விருது: *Messy* - லோலா யங்

சிறந்த பாப் டுயட்/குழுவுக்கான விருது: *Defying Gravity* - சிந்தியா எரிவோ மற்றும் அரியானா கிராண்டே

சிறந்த ராக் ஆல்பம்

சிறந்த ராக் ஆல்பம்: *NEVER ENOUGH* - டர்ன்ஸ்டைல்

சிறந்த ஆல்பர்நேட்டிவ் மியூசிக் ஆல்பம்: *Songs Of A Lost World* - தி கியூர்

சிறந்த ராப் ஆல்பம்: *GNX* - கென்ட்ரிக் லாமர்

சிறந்த ராப் பாடல்: *tv off* - ஜாக் ஆண்டனி, கென்ட்ரிச் லாமர் மற்றும் குழுவினர்

## ஷேக் ஹசீனாவுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை: ஊழல் வழக்கில் டாக்கா நீதிமன்றம் தீர்ப்பு

**டாக்கா, பிப்.3:**

அரசு வீட்டு வசதி திட்டத்தில் நிலம் ஒதுக்கியதில் நடந்த முறைகேடு தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து டாக்கா சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரசு வீட்டு வசதி திட்டத்தின் மூலம் 7,200 சதுர அடி கொண்ட இரண்டு மனைகள் ஒதுக்கியதில் விதிகள் மீறப்பட்டு, முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறி வங்கதேச ஊழல் தடுப்பு ஆணையம் ஷேக் ஹசீனா, அவரது மருமகன் ரத்வான் முஜிப் சித்திக், மருமகள்கள் துலிப் ரிஸ்வானா சித்திக், அஸ்மினா சித்திக் உள்ளிட்டோருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த டாக்கா சிறப்பு நீதிமன்ற நீதிபதி ரபியுல் ஆலம் இன்று தீர்ப்பளித்தார்.

இரண்டு நிலங்கள் ஒதுக்கப்பட்டது தொடர்பான இரண்டு தனித்தனி வழக்குகளிலும் ஷேக் ஹசீனாவுக்கு தலா 5 ஆண்டுகள் என மொத்தம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரத்வான் முஜிப் சித்திக், அஸ்மினா சித்திக் ஆகியோருக்கு இரண்டு வழக்கிலும் தலா 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் சரணடைந்த ஒரே குற்றவாளியான முகமது குர்ஷித் ஆலமுக்கு தலா ஓர் ஆண்டு என இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தண்டனை பெற்ற அனைவருக்கும் தலா ஒரு லட்சம் டாக்கா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத்தை கட்ட தவறினால் கூடுதலாக 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு நடந்த போராட்டங்களை அடுத்து, 2025 ஆகஸ்ட் 5-ம் தேதி பிரதமர் ஷேக் ஹசீனா டாக்காவில் இருந்து தப்பி விமானம் மூலம் இந்தியா வந்து சேர்ந்தார். தற்போது அவர் இந்தியாவில் வசித்து வருகிறார். நீதிமன்ற விசாரணையின்போது அவரை தலைமறைவானவர் என தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் போரில் விரைவில் வெல்வோம்; ஆனால்... ரஷிய பாதுகாப்பு கவுன்சில் உயரதிகாரி பேட்டி

**மாஸ்கோ, பிப்.3:**

உக்ரைன் மற்றும் ரஷியா இடையேயான போரானது 3 ஆண்டுகளை கடந்து 4-ம் ஆண்டையும் நிறைவடைய உள்ள சூழலில் உள்ளது. இந்த போரில் ரஷியா எப்போது வெற்றி பெறும் என நிருபர் ஒருவர் கேட்டபோது, அதற்கு ரஷிய பாதுகாப்பு கவுன்சிலின் துணை தலைவர் டிமிட்ரி மெத்வதேவ் பதிலளித்து உள்ளார்.

அவர் அளித்த பேட்டியின்போது, உக்ரைன் போரில் ராணுவ ரீதியாக நாங்கள் விரைவில் வெற்றி பெறுவோம். ஆனால் முக்கிய விசயம் என்னவென்றால், அடுத்து எந்த மோதலும் நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும் என்பதே ஆகும் என்றார்.

பாகிஸ்தான்: பாதுகாப்பு படை நடத்திய வேட்டையில் 145 பயங்கரவாதிகள் படுகொலை

இதனால், போரில் ரஷியா வெற்றி பெற்றால், போர் முடிவுக்கு வர கூடும் என தெரிகிறது. ஆனால், வெற்றியை முடிவு செய்யும் விசயங்களை பற்றிய தகவல் வெளிவரவில்லை.

ரஷியாவில் 2008-ம் ஆண்டு முதல் 2012-ம் ஆண்டு வரை ரஷிய ஜனாதிபதியாகவும் பதவி வகித்த மெத்வதேவ் கூறும்போது, ரஷியாவின் வெற்றி விரைவில் நிகழ வேண்டும் என விரும்புகிறேன்.

ஆனால், அடுத்து என்ன நடக்கும் என்றும் சிந்திப்பது மிக முக்கியம். வெற்றியின் இலக்கானது புதிய மோதல்கள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் இருக்க வேண்டும். இதுவே தெளிவான விசயம் என்று கூறினார்.

## 7 ஆண்டுகளுக்கு பிறகு தூதரகம் திறப்பு வெனிசுலாவுக்கு சென்ற அமெரிக்கா தூதர்

**மாஸ்கோ, பிப்.3:**

போதை பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்க ராணுவம் கைது செய்து அழைத்து சென்றது. இதையடுத்து அங்கு இடைக்கால அழைத்து சென்றது. இதையடுத்து, அதிபராக நியமிக்கப்பட்ட டெல்சி ரோட்ரிக்ஸ் அரசாங்கம் அமெரிக்காவுடன் இணக்கமாக உள்ளது.

'இந்த நிலையில் வெனிசுலாவில்



7 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்கா தூதரகம் திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து அமெரிக்க தூதர் லாரா டோகு வெனிசுலாவுக்கு சென்றார். அவர் வெனிசுலாவில் அமெரிக்க தூதரகத்தை திறப்பதற்காக அங்கு சென்றடைந்தார்.

இதுதொடர்பாக அவர் எக்ஸ் வலைதள பக்கத்தில், நானும் எனது குழுவும் பணியாற்றத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

கடந்த 2019-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமெரிக்காவும் வெனிசுலாவும் தூதரக உறவுகளைத் துண்டித்து, தங்கள் தூதரகங்களை மூடின என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா தாக்கினால் பிராந்தியப் போர் வெடிக்கும்: கமேனி எச்சரிக்கை!

**கீவ், பிப்.3:**

ஈரானில் அண்மையில் நடைபெற்ற மக்கள் போராட்டங்களை அந்நாட்டு அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியதைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அந்நாட்டுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கக்கூடும் என்ற பதற்றம் நிலவுகிறது.

இந்தச் சூழலில், அயத்துல்லா அலிகமேனி ஞாயிற்றுக்கிழமை பேசியதாவது: அமெரிக்கா ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் போரைத் தொடங்கினால், அது இம்முறை ஒரு பிராந்தியப் போராக மாறும். நாங்கள் யாரையும் முதலில் தாக்கமாட்டோம். ஆனால், எங்கள் நாட்டின் மீது யாராவது தாக்குதல் நடத்தினால் அல்லது தொந்தரவு கொடுத்தால், அவர்களுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்றார்.

போராட்டம் ஒரு 'சதி': ஈரானில் உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வால் தொடங்கிய போராட்டங்களை 'ஆட்சிக்கவிழ்ப்புக்கான சதி நடவடிக்கை' என்று கமேனி சாடினார். இந்தப் போராட்டத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டுச் சக்திகள் ஈரானின் முக்கிய நிர்வாக அமைப்புகளைச் சிதைக்க முயன்றதாகவும், அந்த முயற்சி தற்போது முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐரோப்பிய படைகளுக்குப் தடை: ஈரானில் போராட்டத்தில் ஈடுபட்டதாக ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலருக்கு மரண தண்டனை வழங்கப்படலாம் எனத் தெரிகிறது. போராட்டத்தை ஒடுக்க ஈரான் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளில் 6,500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஈரானின் 'புரட்சிகர காவல் படையை' பயங்கரவாத அமைப்பாக ஐரோப்பிய யூனியன் அறிவித்தது. இதற்கு பதிலடியாக, ஐரோப்பிய நாடுகளின் அனைத்து ராணுவப் படைகளையும் பயங்கரவாத அமைப்புகளாக ஈரான் அறிவித்துள்ளது.

## அமெரிக்க குடியேற்றச் சோதனையில் கைதான 5 வயது சிறுவனை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு!

**வாஷிங்டன், பிப்.3:**

அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணத்தில் குடியேற்றச் சோதனையில் கைது செய்யப்பட்டு, தடுப்பு மையத்துக்கு அனுப்பப்பட்ட 5 வயது சிறுவன் லியாம் கொனேஜோ ராமோஸ், அவனது தந்தை அட்ரியன் அலக்சாண்டர் ஆகிய இருவரையும் உடனடியாக விடுவிக்க அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மினியாபொலிஸ் பகுதியில் குடியேற்றத் துறை இம்மாதத்தில் நடத்திய பல்வேறு சோதனைகளில், 4 பள்ளி மாணவர்கள் அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டனர். அப்போது தந்தையுடன் கைதான நிலையில், அதிகாரிகளுக்கு நடுவே சிறுவன் லியாம் அழுதுகொண்டே நின்ற புகைப்படம் இணையத்தில் வெளியாகி, உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி ஃப்ரெட் பியரி, அமெரிக்க அரசின் மனிதாபிமானமற்ற அணுகுமுறையைக் கடுமையாகக் கண்டித்தார். மேலும், அவர் தனது தீர்ப்பில், 'நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டியவர்களின் எண்ணிக்கையில் இலக்கை அடைவதற்காக, சிறார்களை மன ரீதியாகத் துன்புறுத்தும் அரசின் செயல் முற்றிலும் தவறானது. சட்டப்படி அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டியிருந்தாலும், அதை மரியாதையான முறையில் செய்ய வேண்டுமே தவிர, இத்தகைய அச்சுறுத்தல் நடவடிக்கைகளால் அல்ல' என்று சுட்டிக்காட்டினார். ஈக்வடார் நாட்டைச் சேர்ந்த இந்தத் தந்தை-மகன், சட்டபூர்வமாகத் தஞ்சம் கோரியே அமெரிக்காவுக்கு வந்துள்ளனர். தற்போது இவர்கள் டெக்சாஸில் உள்ள ஒரு தடுப்பு மையத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## ராஃபா எல்லை மீண்டும் திறப்பு: காஸாவுக்குள் நுழைந்த மனிதாபிமான உதவிகள்!

**காசா, பிப்.3:**

இஸ்ரேல்-ஹமாஸ் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமான, எகிப்து-காஸா இடையிலான ராஃபா எல்லை ஞாயிற்றுக்கிழமை சோதனை அடிப்படையில் திறக்கப்பட்டது.

இஸ்ரேல் ராணுவத்தின் கண்காணிப்புடன், சர்வதே நாடுகள் அனுப்பிய மனிதாபிமன உதவிப் பொருள்களை ஏற்றிவந்த லாரிகள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் காஸாவுக்குள் நுழைந்தன.

கடந்த 2024, மே மாதம் இஸ்ரேல் ராணுவம் இந்த எல்லையைக் கைப்பற்றிய பிறகு, சுமார் ஒன்றரை ஆண்டுகள் கழித்து தற்போதுதான் முதல்முறையாக போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

## பாக். ராணுவம் - தீவிரவாதிகள் இடையே தொடரும் மோதல்: பலுசிஸ்தானில் 200க்கும் மேற்பட்டோர் படுகொலை

**இஸ்லாமாபாத், பிப்.3:**

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பாதுகாப்புப் படைகளுக்கும் பலுசிஸ்தான் விடுதலை ராணுவத்துக்கும் இடையே கடந்த சில நாட்களாக நடந்து வரும் சண்டையில் இருதரப்பிலும் இதுவரை 200-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் தனி நாடாக பிரிந்தபோது, பலுசிஸ்தான் பலூச் மன்னரின் கீழ் தனி நாடாக இருந்து வந்தது. அதன் பின்னர், பாகிஸ்தான் அதனை தன்னோடு இணைத்துக்கொண்டது. அது முதல், அங்கு அடிக்கடி மோதல் நிலவிவருகிறது. இந்நிலையில், பலுசிஸ்தான் விடுதலை ராணுவம் எனும் அமைப்பு, பாகிஸ்தான் பாதுகாப்பு படைகளுக்கு எதிராக கடந்த சில நாட்களாக சண்டையிட்டு வருகிறது. பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நாடுகள் இந்த அமைப்பை தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளன.

பலுசிஸ்தான் விடுதலை ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பலுசிஸ்தானின் பல மாவட்டங்களில் 40 மணி நேரத்துக்கும் மேலாக தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த தாக்குதல்களில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகளுக்கு கடுமையான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. பாகிஸ்தான் ராணுவம் மற்றும் எல்லை பாதுகாப்புப் படையைச்



சேர்ந்த 200-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். குறைந்தது 17 பேர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

கரான், மஸ்துங், தும்ப், பாஸ்னி உள்ளிட்ட பகுதிகளில் நாங்கள் நடவடிக்கைகளை முடித்துவிட்டோம். அவை எங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டன. தலைநகர் குவெட்டா மற்றும் நோஷ்கியின் சில பகுதிகளிலும் எங்கள் போராளிகள் உள்ளனர். அங்கு பாகிஸ்தானின் ராணுவம் விரட்டியடிக்கப்பட்டுவிட்டது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் குறித்து விவரித்துள்ள பலுசிஸ்தான் மாகாண முதல்வர் சர்பராஸ் புக்தி, "பலுசிஸ்தான் விடுதலை ராணுவத்தைச் சேர்ந்த போராளிகள் வங்கிகள், சிறைச்சாலைகள், காவல் நிலையங்கள், ராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில், 31 பொதுமக்களும் 17 பாதுகாப்புப் படையினரும் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்தியவர்களில் 145 பேர் கொல்லப்பட்டனர். தாக்குதலுக்கு உள்ளான அனைத்து மாவட்டங்களும் மீட்கப்பட்டுள்ளன. நாங்கள் அவர்களை துரத்துகிறோம். அவர்களை அவ்வளவு எளிதில் தப்பிக்க விடமாட்டோம். எங்கள் ரத்தம் அவ்வளவு மலிவானது அல்ல" என தெரிவித்துள்ளார்.